190372

சிந்தாமணி

Aug 1925

# CHINTHAMANI.

**A HIGH CLASS TAMIL MONTHLY.**

*(Devoted mainly to the cause of Indian Women.)*

EDITOR SISTER V. BALAMMAL.

**Vol. II.]** **August 1925.** **[No. 1**


श्रीशारदायै नमः ।



श्रीरामचन्द्र परब्रह्मणे नमः

.வண்ணப்பெற்ற

12

# சிந்தாமணி

## சுபோத ராம சரிதம்.


COMPOSED AND ANNOTATED BY

SISTER V. BALAMMAL

DAUGHTER OF

*Late Dr. A. R. VAIDYANATHA SASTRIAR, M. A., M. B. & C. M.*



*(All Rights reserved by the Authoress.)*


### सुबोधराम चरिते

॥ अयोध्याकाण्डमारम्भः ॥

कोसलदुहितृतनूजं
वासवमुख्यैस्सुपूजितं नित्यम् ।
हासस्फुरन्मुखाब्जं
दासमुपोषं रघूद्वहं नौमि ॥

जनकसुताप्रियकान्तं
सनकादिब्रह्मनिष्ठनुतशीलम् ।
कनकाम्बरधरमीशं
वनवासरतं रघूत्तमं नौमि ॥




15 SEP 1925


ततो जगाम भरतश्शत्रुघ्नेन समन्वितः ।
युधाजिदभिधानस्य मातुलस्य गृहं प्रति ॥ १ ॥

ततः பிற்பாடு शत्रुघ्नेन சத்துருக்கனுடன் समन्वितः கூடினவரான भरतः பரதர் युधाजिदभिधानस्य யுதாஜித் என்ற பெயருள்ள मातुलस्य அம்மானுடைய गृहं வீட்டை प्रति குறித்து जगाम சென்றார் ॥ १ ॥

अथ पङ्क्तिरथः पौरानाहूय सचिवानपि ।
नमस्कृत्य वसिष्ठादीनिदं वचनमब्रवीत् ॥ २ ॥

अथ அச்சமயம் पङ्क्तिरथः தசரதர் पौरान् நகர வாசிகளையும் सचिवानपि மந்திரிகளையும் आहूय அழைத்து वसिष्ठादीन् வசிஷ்டாதியரை नमस्कृत्य நமஸ்கரித்து इदं वचनं இவ்வார்த்தையை अब्रवीत् உரைத்தார் ॥ २ ॥

निवेश्य रामे भूभारं चिरकालाद्धृतं मया ।
विश्रान्तिसुखमिच्छामि युष्माकं यदि सम्मतिः ॥ ३ ॥

युष्माकं உங்களுக்கு सम्मतिः यदि இஷ்டமானால் मया என்னால் चिरकालात् நெடுநாட்களாக धृतं தரிக்கப்பட்டிருக்கும் भूभारं இராஜ்ய பாரத்தை रामे ஸ்ரீராமனிடத்தில். निवेश्य வைத்து विश्रान्तिसुखं இளைப்பாறுதலை इच्छामि விரும்புகின்றேன் ॥ ३ ॥

तच्छ्रुत्वा वचनं सर्वे पौरास्सन्तुष्टमानसाः ।
रामं राजानमिच्छामस्सत्यमित्यूचिरे जनाः ॥ ४ ॥

तत् அந்த वचनं வார்த்தையை श्रुत्वा கேட்டு सर्वे சமஸ்த पौराः நகர வாசிகளும் जनाः (च) ஜனங்களும் सन्तुष्टमानसाः (सन्तः) சந்தோஷித்தவர்களாக रामं ஸ்ரீராமனை राजानं அரசனாக इच्छामः விரும்புகிறோம் सत्यं இஃதுண்மை इति என்று ऊचिरे உரைத்தார்கள் ॥ ४ ॥

अलङ्कृत्य पुरीं पौरा वसिष्ठस्य निदेशतः ।
प्रतीक्षन्ते स्म तां वेलामभिषेकाय निश्चिताम् ॥ ५ ॥

पौराः நகர வாசிகள் वसिष्ठस्य வசிஷ்டருடைய निदेशतः கட்டளையினால் पुरीं நகரை अलङ्कृत्य அலங்கரித்து अभिषेकाय பட்டாபிஷேகத்தின் பொருட்டு निश्चितां நிச்சயிக்கப்பட்டிருக்கும் तां அந்த விசேஷம் வாய்ந்த वेलां சமயத்தை प्रतीक्षन्ते स्म எதிர்பார்த்துக்கொண்டவனைப்பெற்றனர் ॥ ५ ॥

பவன்.

*(To be continued.)*

## சிந்தாமணி வாழ்த்து.

தஞ்சாவூர் இராஜமன்னார்குடி இலக்கண உபாத்தியாயர்
நா. கோவிந்தசாமி பண்டிதர்.

வேலா யுதங்கடு வேகமாய் வருமயில்
காலா யுதந்துணை யாகிக் காக்குமே.

வேலு மயிலு மிருந்தோர் புகழ்படையுஞ்
சேலும் புறமிடுங்கண் தெய்வானை—மாலுகந்த
மாறுபடா மான்மகளு மண்டலத்து வாழ்த்துமுறும்
ஆறுமுகன் பொற்றாளரண்.

(படை—திருமுருகாற்றுப்படை, புகழ்—திருப்புகழ்).

சீர்பூத்த மயிலாபூர் திகழ்சிந்தா மணியென்னும்
பேர்பூத்த பத்திரிகை பெறுமறிஞர் ஆதரிப்போர்
ஏர்பூத்த பல்விடய மெழுதுவோர் ஆசிரியர்
தார்பூத்த வடிவேலன் தண்ணருளால் வாழ்கவே.

## ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி கீர்த்தனை.

சகோதரி வி. பாலம்மாள்.

இராகம்: சிந்து பைரவி. தாளம்: ஆதி.

பல்லவி.

பாலம் பஜே கோபாலம் மே ஹ்ருதி.

அநுபல்லவி.

பாலம் பஜே கோகுல பாலம் ஹ்ருதி.

சரணம்.

(1) யமுனாதீர விஹாரோல்லாஸம் பாலஹ்ருதய நிவாஸம்
மஞ்சுளஹாஸம் சம்பகநாஸம் ராகாசசி சதமுகபாஸம்
(ஹ்ருதி)

(2) நீலமனோஹர ரூபவிலோகன முக்த கோபிகாவ்ருத பாலம்
(முக்த கோபிகா க்ருத லீலம்)
மோஹனமுரளீவாதன சீலம் ராதாமுகதர்சனலோலம்
(ஹ்ருதி)

## செந்தமிழ் நாட்டுச் சிறப்புக் கும்மி.

ஸ்ரீமான் நா. கோவிந்தசாமி பண்டிதர்,

கும்மியடியுங்கள் கும்மியடியுங்கள்
கோதறு மாமலர்க் கொம்பனையீர்!
கும்மியடி பெருந் திங்களை நோக்கியே
கொந்தளிக்குங் கடலென்னவே நீர். 1

செந்தமிழ் நாட்டின் சிறப்பை யுரைக்கவே
திங்கள் முகத்தியர் கேளுங்கடி,
சந்ததம் நீங்கள் தழைத்திடுவீர் முகில்
தக்க மும்மாரி பொழிந்திடுமே. 2

கற்புறு மாதருக் கோர்மழை யென்னவே
கண்ட பன்னூலு மியம்புவதால்,
விற்பனம் பெற்று விதியில் நடந்திடும்
மெல்லியருக் கொழுத் தக்கவர்காண். 3

விநாயகர் துதி.

ஆதியிற் குண்டலி வேழமுகத்தவன்
அம்புஜபாதம் வணங்கிடுவீர்,
ஜோதி பிரணவன் சுந்தரி பாலகன்
தொல்வினை போக்கிச் சுபந்தருமே. 4

சுப்பிரமணியர் துதி.

வள்ளி தெய்வானை மனோகரனிந்துள
மாலைபுனை வடி வேலவனை,
புள்ளிமயி லேறும் புண்ணியனை மிகப்
புகழ்ந்து வாழுதிர் பூவையரே. 5

திங்களைச் சூடிய சங்கரன் நெற்றியில்
செந்தண லாறு பொரி கிளம்பி,
பொங்கிய கங்கையி லோடிச் சரவணப்
பொய்கையில் ஷண்முக மாகிடவே. 6

சூரபதுமனின் மார்பைப் பிளந்தவன்
சுந்தரி பாலகன் தோகையரே,
தீரமிகு நவ வீரர்கள் சூழவே
செந்திநகரதில் வந்தவன் காண். 7

வள்ளிதினைப்புனங் காக்கையிலே யவன்
மாதவனாகியே நிற்கையிலே,
வில்லியர் வேடர் வருகையிலே யொரு
வேங்கைமர மாகி யோங்கி நின்றான். 8

சிவபெருமான் துதி.

புள்ளி மிருங் குயி லோசைகொள் மாமலைப்
பொற்புறு பாவையைப் பாகம் வைத்தே
வெள்ளிமலையதில் மேவும் பரமனை
வேண்டிடுவீ ரும்மை ஆண்டிடுவார். 9

சங்கரன்யோகி சதாசிவன் தற்பரன்
சம்புமஹா தேவன் சாக்ஷியென,
எங்கும் வியாபக னாகிய மூர்த்தியை
ஏத்துங்கடி மிக வாழ்த்துங்கடி. 10

பங்கமில்லாத பராபரன் நின்மலன்
பக்தரைக் காத்திடுஞ் சித்தனவன்,
மங்குதலில்லாத வாழ்வருள் வானவன்
வானவர் காணாத ஞானியடி. 11

வெள்ளிமலை போலுங் காளையிலேறியே
வித்தகர் முன்வரும் சத்தனவன்,
அள்ளிலை வேல்பெறும் ஆண்டவனைப்பெற்ற
ஆதியவன் பரஞ் சோதியவன். 12

(தொடரும்.)

ஸ்ரீராம ஜயம்.

# சிந்தாமணி

தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றத்தை முக்கிய
மாகக்கொண்டு வெளிவரும் ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பத்திராதிபர் சகோதரி வி. பாலம்மாள்.

மலர் II.] குரோதன—ஆவணி. [இதழ் 1.

## சிந்தாமணி.

(சகோதரி வி. பாலம்மாள்.)

எல்லாம் வல்ல இறைவனருளாலும் அன்னையின் ஆசீர்வாதத்தாலும் இன்றுமுதல் "சிந்தாமணிக்கு" இரண்டாவது ஆண்டு தொடங்குகின்றது. தற்காலம் பத்திரிகை நடத்துவதிலுள்ள பொறுப்புடன் ஏற்படக்கூடிய சிரமங்களைப்பற்றியும் அதிக மெழுதல வசியமென நினைக்கிறேன். எனது சுற்றுப்பிரயாண காலங்களில் பல சகோதர சகோதரிகள் இவ்வாறு ஒரு பத்திரிகையை நான் ஆரம்பித்து நடத்திவரவேண்டுமென்று வற்புறுத்திவந்தார்கள். தமிழ்நாட்டில்பெண்மக்களின் உன்னத இலக்ஷியங்களைக் குறித்து உழைக்கக்கூடிய பொறுப்பை வகித்தலே முதன்மையாக என்னால் எனது தாய் நாட்டிற்குப் புரியக்கூடிய தொண்டு என்பதைப் பல காரணங்களால் நானும் நன்கறிந்திருந்தும் பத்திரிகை நடத்துவதிலுள்ள சிரமத்தை யுத்தேசித்தே இதுகாறும் நான் இது விஷயத்தில் முற்படாது இருந்தேன். எதற்கும் வேளை என்பதொன்று ஏற்பட்டுவிடுகிறதன்றோ. ஜனசமூக ஊழியத்திலும் தேசத்தாயின் தொண்டிலும் என்னாலியன்றவரை ஒரு சிறிதேனும் என் கடமையைச் செலுத்த வேண்டுமென்று எண்ணிய ஆரம்ப காலமிருந்து என் சமூகத்திற்கான முன்னேற்றத்திற்கு உழைக்கவேண்டுமென்றும் அதற்குப் பத்திரிகை யொன்று நடத்துதலே ஒப்பற்ற உயர்ந்த சாதனமென்றும் நான் நினைத்திருந்தமையாலும் அரசியல் வாழ்க்கையாகும் பெருங்கடலில் அபிப்பிராய பேதமாகிற சுழல்காற்று வீசியகாலத்தில் நான் செயலற்று அயர்ந்திருந்தமையாலும் பத்திரிகை யொன்று வெளியிடப்போதிய சாவகாசம் அதனால் ஏற்



பட்டமையாலும் தீரவாலோசித்துச் சென்ற வருஷமிருந்து "சிந்தாமணி"யை வெளியிட முன்வந்தேன். பத்திரிகை நடத்துதல் நஷ்டம் விளைவிக்கக்கூடியதென்று பலர் தம் சொந்த அனுபவத்தை வெளியிடுவதால் பெண்பாலாகிய எனக்கு இது விஷயத்தில் எவ்வளவு நஷ்டமும் பொறுப்புமேற்பட்டிருக்கிறதென்பதை ஸ்திரீ வித்யாபிமானிகளாகிய தமிழ் மக்கள் நன்கறிந்து "சிந்தாமணி"யை ஆதரிக்க முற்படுவார்களென்றே நான் நம்பி இருக்கிறேன். சிறந்த விஷயங்களை எழுதியனுப்பும் கிருப சகோதரிகளின் மனோற்சாகமும் "சிந்தாமணி"க்கு நல்வரவு கூறி எழுதிவரும் அறிஞர்களின் அபிப்பிராயங்களும் "சிந்தாமணி" யைச் சிலாகித்தெழுதும் வாசகர்களின் கிருபங்களும் என்னைத் தைரியப்படுத்தி வருகின்றமையால் இவ்வருஷத்தில் பத்திரிகை பிரபலமடைந்து பல்லாயிரம் சந்தாதாரர்களைக் கொண்டு விளங்குமென்ற உத்தேசத்துடன் "சிந்தாமணி"க்கு இரண்டாவது ஆண்டைத் தொடங்குகின்றேன். முதல் வருஷத்தில் சந்தாதாராகி ஆதரித்த சகோதர சகோதரிகள் இவ்வருஷமும் அன்புடன் "சிந்தாமணி" யை அங்கீகரித்து ஆதரிக்கவேண்டுமாயும் ஒவ்வொரு சந்தாதாரும் தமது நேயர்களையும் சந்தாதாராக்கி ஆதரவளிக்கவேண்டுமாயும் கேட்டுக்கொள்ளுகிறேன். சிறிதும் தவறாது உயர்ந்த வியாசங்களை யனுப்பிச் "சிந்தாமணி" யை யலங்கரித்து வரும் கிருப சகோதரிகளுக்கு என் மனமார்ந்த வந்தனமளிக்கிறேன். முதல் வருஷ சந்தாவை யிதுவரை யனுப்பாதவர்கள் தயவு செய்து உடனே அனுப்பிவிடுவதுடன் இரண்டாவது வருஷத்திற்குமுன்பணமாகவும் சந்தாவை யனுப்பி உதவி புரியும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். ஏற்கனவே சந்தாதார்களைச் சேர்த்தனுப்பி உதவிபுரிந்து வரும் "சிந்தாமணி" யபிமானிகளுக்கு என் நன்றியைச் செலுத்துகின்றேன். வருஷ ஆரம்பம் முதல் அனுப்பிய பத்திரிகைகளையும் எழுதிய கடிதங்களையும் பெற்றுக்கொண்டு முடிவில் தமக்குத் தேவையில்லை என்று தெரிவிக்கும் கனவான்களுக்கு இதனால் அதிக நஷ்டமேற்படுகிறதென்பதையும் ஆரம்பத்திலேயே வேண்டாமென்றுவிடல் சிலாக்கியமென்றும்தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஒவ்வொரு பொது ஸ்தாபனங்களும் வாசக சாலைகளும் பல பத்திரிகைகளை வரவழைப்பதுபோலப் பெண்மக்களின் முன்னேற்றங் கருதி வெளிவரும் "சிந்தாமணி"யையும் ஆதரிக்கக் கடமைபட்டுள்ளனவென்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். தம்மினத்தின் நலத்திற்கென வெளிவரும் "சிந்தாமணி" யைப் படிப்பதில் தமிழ்நாட்டுப் பெண்மணிகள் அதிக ஆவல்கொண்டவர்களாயிருப்பினும் தாங்களே நேரில் எழுதித் தருவித்துக்கொள்ளக்கூடிய நிலைமையில் பலர் இல்லாமையால் ஆங்கிலம் பயின்ற தமிழ் நாட்டுச் சகோதரர்களின் ஆதரவு "சிந்தாமணி" க்கு அத்தியாவசியமாயிருக்கின்றதென்றும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தமக்குத் தமிழ் மொழியில் சிறிதும் பயிற்சி யில்லாமலிருப்பினும் ஓய்வில்லாமலிருப்பினும் ஒரு சமூகத்தின் முன்னேற்றங் கருதி வெளிவருகிறதென்ற காரணத்தால் சந்தாதாராகிச் "சிந்தாமணி"யை யாதரித்து வரும் ஸ்திரீ வித்தியாபிமானிகளுக்கு வந்தனமளிக்கின்றேன். என் சமூகத்திற்கு ஓய்வின்றி உழைக்கக்கூடிய ஆற்றலைப் பலவிதத்திலும் அளிக்கும்படி பாரதத்தாயைப் பிரார்த்திக்கின்றேன். ஒவ்வொரு மாதத்திலும் கால தாமதமின்றிக் குறிப்பிட்ட தேதியில் "சிந்தாமணி"யை வெளியிடும்படிக்கும் சிறிதும் பிழையின்றியும் சிரத்தையுடனும் அச்சிட்டுக் கொடுத்துதவும் மெஸர்ஸ் ஸ்ரீனிவாச வரதாச்சாரி அண்ட் கம்பெனியாருக்கு மனமார்ந்த வந்தனமளித்தல் எனது

முதற் கடமையாகும். இனி என்னால் செய்யக்கூடிய தேச ஊழியத்தைச் "சிந்தாமணி"யைக் கொண்டே புரிந்து வர நான் முன் வந்திருப்பதால் தமிழபிமானிகள் பலர் இதற்குப்போஷகர்களாயும் அபிமானிகளாயும் ஏற்பட்டு எனக்கு உதவி புரிய வேண்டுகிறேன். இன்று தோன்றி நாளை மறைந்துவிடும் பத்திரிகை பல வென்ற சொல் ஜன சமூகத்திடையே உலாவுதல்பற்றிச் சந்தாப் பணத்தை எதிர்பாராதும் வி.பி. முதலியனுப்பி நிர்பந்தம் செய்யாமலும் முதல் வருஷத்தை ஒருவாறு நடத்தி வந்திருக்கிறேன். இவ்வருஷ சந்தாதார்கள் தங்களது முதல் வருஷ சந்தாவுடன் இரண்டாவது வருஷ சந்தாவையும் முன் பணமாக அனுப்பிக்கொடுத்துப் பத்திரிகை சீறும் சிறப்பு முற்று நடை பெறும்படி ஆதரவளித்தல் அவசியமாயிருக்கின்றதென்பதையும் வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். பத்திராதிபர் வியாசங்கள் ஆங்கிலத்திலும் இருத்தல் அவசியமென்றும் அதனால் ஆடவர் பலரும் சட்ட சபைப் பிரதிநிதிகளும் படித்தறியவும் தங்களபிப்பிராயத்தைத் தெரிவிக்கவும் சௌகரியமாயிருக்குமென்றும் சிலர் எனக்கு அறிவித்திருக்கின்றனர். சந்தாதார்கள் தக்கபடி விருத்தியடைந்து சந்தாவையும் முன் பணமாகச் சிறிதும் தாமதமின்றி அனுப்பி விடுவார்களாயின் "சிந்தாமணி" யை இதே சந்தாவில் இன்னும் பலபக்கங்களுடன் வெளியிட்டு அதற்குமேலும் சௌகரியப்படுமாயின் ஆங்கிலத்தில் சில பக்கமும் சேர்க்க உத்தேசித்திருக்கிறேன். முப்பத்திரண்டு பக்கங்களில் ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகை 64 பக்கங்களுடனும் சிலசமயம் 68 பக்கங்கள் கொண்டும் வெளி வருவதைப் பத்திரிகாபிமானிகள் நன்கறிவர். ஆகையால் இன்னம் பல பக்கங்களுடன் "சிந்தாமணி"யைப் பொலிவுறச் செய்யவேண்டுமென்று நினைத்திருக்கும் எனக்குத் தமிழபிமானிகளும் "சிந்தாமணி" யபிமானிகளும் உதவி புரிந்து பல சந்தாதார்களைச் சேர்த்தனுப்புவதுடன் இனியும் தாமதமின்றிப் பழைய பாக்கியுடன் புது வருஷத்திய சந்தாவையுமனுப்பி ஆதரித்தல் கடமை என்பதை மற்றுமொரு முறை தெரிவித்துக்கொள்ளுவதுடன் ஏற்கனவே சந்தாவை யனுப்பி ஆதரவளித்திருக்கும் சகோதர சகோதரிகளுக்கு என் மனமார்ந்த வந்தனங்களளிக்கின்றேன்.

சுபம்.

# பெண்களின் சம்மத வயது.

பத்திராதிபர்.

உலகில் ஜனசமூகம் நன்னெறி கைப்பற்றி இனிது வாழ்வதற்குச் சட்டங்கள் இன்றியமையாதனவாகும். சட்டங்கள் இருவகைப்படும். 1. அரசாங்கத்தினரால் ஏற்படுத்தப்படல். 2. ஜனப்பிரதிநிதிகளால் சட்ட சபைகளில் தீர்மானிக்கப்படல். அரசாங்கம் ஏற்படுத்தும் சட்டங்களுக்கும் ஜனப்பிரதிநிதிகளால் கொண்டுவரப்படுவனவற்றிற்கும் பிரஜைகளாகும் ஜன சமூகத்தின் ஆதரவு முக்கியமாகும். சாதாரணமாக ஒரு சட்டம் இயற்றப்படவேண்டுமாயின் அதன்நோக்கங்களைப்பற்றி சில வருஷங்கள் ஜனங்களிடையே பிரசாரஞ் செய்தும் தக்கவர்களுடைய ஆலோசனைகளைக் கேட்டும் தீரவாலோசித்தும் முடிக்காவிடின் அச்சட்டத்தை ஜனங்களிடையே அமுலுக்குக் கொண்டு வருதல் அசாத்தியமாய்விடும். ஜனப்பிரதிநிதிகளால் கொண்டுவரப்படும் சட்டங்களுக்குப் பல நிர்பந்தங்களுள்ளன. பொது ஜனங்கள் ஏற்றுக்கொள்ள முடியாத ஏற்பாட்டை ஜனப்பிரதிநிதிகள் சட்டமாக்க முயல்



வார்களானால் வேலியே பயிரை மேய்ந்ததற்குச் சமானமாகும். எவர்களுடைய வாக்குரிமைகளைக் கொண்டு ஸ்தானம் பெறுகிறார்களோ அவர்களின் மனக் கொள்கைக்கு வேறாகச் சிலவற்றை இவர்கள் முடிக்க விரும்புதல் பிடிவாதச் செயல்களில் ஒன்றாம். அதிலும் பெண்மக்களைப்பற்றிய விஷயங்களை மெத்த அவசரத்துடன்விவாதித்து முடிவு செய்தல் விசனகரமானது. பெண்கள் இப்பொழுதுதான் சற்று கண்விழிக்க ஆரம்பித்திருக்கின்றனர். இவர்கள் முழுதும் முன்னேற்றமடைவதற்குள்ள சாதனங்கள் இன்னமேற்படாமலிருக்கின்றன. இருப்பினும் இவர்களுக்கான சீர்திருத்தங்களைப்பற்றி ஆடவர்கள் சட்ட சபைகளில் சிரத்தை யெடுப்பதற்கு ஒரு வகையில் வந்தனமளிக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். ஆனால் சீர்திருத்தங்கள் படிப்படியாக ஆரம்பமிருந்து வருதல்வேண்டும். வெகுநாளாய் நவநாகரிக முறையிலேனும் முன்னேற்றமடைந்து முன்னணியில் நிற்கும் ஆடவர் தங்களனுபவங் காரணமாகச் சில சீர்திருத்தங்களைப் புதிய வழியில் புக விடுதல் பொருத்தமானதே. பெண்மக்களிடையேயும் இத்தீவிரச் சீர்திருத்தங்களைப் புகச் செய்தல் சரியல்லவென்பதே எமது வேண்டுகோள். பெண்மக்களிடையே சீர்திருத்தங்களை விரும்புவோர் இந்தியாவின் எதிர்காலத்தைச்சிறிது கவனித்தல்வேண்டும். பலர் எதிர்கால இந்தியாவானது நாகரிகக்கோலாகலத்திடையே ஆரவாரிக்கப் போகின்றதென்று நினைக்கிறார்கள். ஆனாலும் இந்தியாவானது தனது பூர்வீகக்கொள்கைகளைக் கடைப்பி[illegible]தேவரை ஒரு சிறிதும் முன்னேற்றமடைய [illegible]தென்பதே தீர்க்கதரிசிகளின் தீர்மானமாயிருக்கின்றது. ஒருகால் எதிர்காலத்தில் வெளிநாகரிக எழுச்சியானது நம் பெண்மக்களிடத்திலும் சர்வ சாதாரணமாக வேரூன்றிவிடுமாயின் அச்சமயம் அவர்கள் தமக்குத் தேவைகளை நிர்த்தாரணஞ் செய்துகொள்ளல் கஷ்டமன்று. பூர்வீக வாழ்க்கையே இந்தியாவில் இனி நிலைப்பதாயினும் இச்சமயத்தில் தீவிரமான சீர்திருத்தங்களை யேற்படுத்தலெதற்கு? சீர்திருத்தங்களில் தீவிர புத்தியுள்ளவர்கள் ஓடி முன்னுக்குப் போகுங்கால் உள்ளவற்றை எடுத்துரைத்து அவர்களை ஆலோசிக்கச் செய்தல் பொருத்தமானதென்பதை மறுப்பாரில்லை.

பெண்களின் சம்மத வயதைப்பற்றிப் பிரஸ்தாபமொன்று சின்னாட்களாக இந்திய சட்டசபையில் நடமாடி வருவதைப் பலர் அறிவார்கள். பெண்களுக்குச் சம்மத வயது பன்னிரண்டாக விருப்பதைப் பதினான்காக உயர்த்தவேண்டுமென்ற பிரஸ்தாபம் அடுத்த செப்டம்பரிலும் வரப்போவதாகத் தெரிகிறது. பெண்களின் சம்மத வயதை ஆடவர்கள் தமது புத்தியையும் மனவடக்கத்தையும் முன்னிட்டு நிலைநிறுத்தமாட்டாது சட்டபூர்வமாக்கக்கூடிய நிலைமை யடைந்திருப்பார்களேயானால் இதைக்காட்டிலும் பரிதாபகரமான நிலை தேசத்திற்கு வேறு வேண்டுமோ? சுயாச்சியத்திற் கருகதையுள்ளவர்களாக நினைக்கும் ஆடவர்களுக்குப் பெண்களின் சம்மத வயதை யறிந்து நடந்துகொள்ளக்கூடாமற் போகுமோ? இதற்கு ஒரு சட்டமும் தேவையோ? இத்தகைய சட்டமியற்றப்படுவதால்மட்டும் பெண்களுக்கேற்படக்கூடிய துன்பங்கள் தூர விலகிவிடுமோ? முற்காலத்திய புருஷதர்மங்களை ஆடவர் சிலர் அறவே ஒழித்துவிட்டிருப்பதுபோன்று பெண்மக்களும் தற்சமயம் பார்யாதர்மத்தைக் கைவிட்டவர்களல்லவே. சம்மத வயதைமீறித் தன் கணவன் செய்யக்கூடிய அடாத செய்கையையோ அல்லது மிருகத்தன்மை வாய்ந்த ஆடவனாலேற்படும் துன்பத்தையோ அவள் எவ்வாறு வெளியிடத்துணிவாள்? பெண்களின் சம்மத வயது அவரவர்களின் வாசஸ்தானத்தையும் வளர்ச்சியையும் பொறுத்திருப்பினும் ஆடவர்கள் சற்று சீர்திருந்தவர்களானால் அநுஷ்டானத்தில் இதைப் பதினாறு பதினெட்டு வயதளவும் கொ

ண்டுபோதல் சிரமமன்று. இதை விடுத்துச் சம்மதவயதைச் சட்டத்திற்குள்ளாக்கும்பக்ஷத்தில் இக்குற்றத்திற்கு ஆடவன் காரணமாகவும் பெற்றோர் உடந்தையாகவும் ஏற்படுவதுடனில்லை. ஒன்றுமறியாப் பேதைப் பெண்ணே இவ்வநீதியை வெளிப்படுத்தவேண்டியவளாகின்றாள். கோர்ட்டு முன்னிலையில் சாக்ஷியம் கூறி வைத்திய விற்பன்னரின் சோதனைக்கும் ஆளாகவேற்படும் இப்பெண்ணின் துர்த்தசையை எடுத்துரைக்கவும் வேண்டுமோ. தற்சமயம் வரதக்ஷிணையின்கொடுமையால் தக்க வரன் கிடைக்காது பெண்களின் வயதைச் சில பெற்றோர் குறைத்துக் கூறிவரவேண்டியிருக்கிறது. இத்தகைய சட்டமியற்றப்படின் இனி பெண்கள் வயதை உயர்த்திக் கூறிவரத் துணிவார்களன்றி இதனால் இளஞ் சிறுமியர் பாடு புத்தியற்ற தாய் தந்தையர் நின்றும் முரட்டுச் சுபாவமமைந்த கணவனிடத்தின் நின்றும் காப்பாற்றபடுவது நிச்சயமில்லையே. சம்மத வயதைச் சீர்திருத்த எண்ணுவோர் தற்கால நிலையை ஊன்றிக் கவனிப்பார்களானால் சின்னாட்களில் இத்தகைய சீர்திருத்தம் தானாகவே ஏற்பட்டுவிடுமென்பதை யுணரலாம். அனேகமாகப் பெண்களுக்கு இப்போது பனிரண்டு வயதிற்குமேலாகவே விவாகம் முடித்தல் சகஜமாயிருந்து வருகிறது. சிலர் பதினான்கு வயதிற்குள் பெண்களுக்கு விவாகம் முடிக்க நினைப்பதுமில்லை. காலாந்தரத்திற் பல காரணங்களைக் கொண்டு பாலிய விவாகமுறை அடியோடு நிறுத்தப்பட்டுப் பதினான்கு வயதிற்குமேல் பெண்களுக்கு விவாகம் முடித்தல் சம்பிரதாயமாகவும் சௌகரியமாகவும் ஏற்பட்டுவிடக்கூடுமென்றும் ஊகிக்க இடமிருக்கிறது.

இதற்குள் இத்தகைய சட்டமொன்று அனாவசியமாகும். இச்சட்டமியற்றப்படுமானால் பொறாமைக்கும் சத்துருபாதைக்கும் ஆளாயிருக்கக்கூடிய குடும்பங்கள் வீண்கஷ்டத்திற்குள்ளாக்கப்படுமென்று அஞ்சஇடமிருக்கிறது எவ்வாறு இருந்தாலும் கணவனாலேற்படும் கஷ்டங்களைவெளியிட்டுக்கொள்ள இந்தியப் பெண்மக்கள் ஒருகாலும் துணியார்கள். எவ்வளவு தாழ்ந்த நிலைக்குக் கணவன் காரணமாயிருப்பினும் 'அது என் தலைவிதி' என்றே சொல்லுவார்கள். இதனாலேயே குடும்பங்களிலுள்ள பல பெருத்த மனஸ்தாபங்களும் தீர்ந்து அன்னியோன்னியத்தன்மை குறையாது இல்லற வாழ்க்கையானது இந்தியாவில் இனிது நிறைவேறக் காண்கிறோம். சம்மத வயதை மீறி நடந்தான் என்ற குற்றத்தைக் கணவன்மீது சுமத்தி அவனைத் தண்டனைக்குள்ளாக்கியபின் அப்பெண்ணின் வாழ்நாள் எவ்விதம் சிறப்புறக்கூடுமென்பதை ஆலோசித்தலவசியமாகின்றது. எந்த நாடுகளில் ஜனசமூகம் எத்தகைய சட்டதிட்டங்களால் அபிவிருத்தியடைந்திருப்பினும் இந்தியாவிற்குமட்டும், அதுவும் தற்சமயம், இத்தகைய பிரஸ்தாபங்களும் அவசியமன்றென்பதே நமது அபிப்பிராயம். அன்னிய நாடுகளுடன் சமத்துவத்தையும் இந்தியா தேடி நிற்கும் இவ்விருபதாம் நூற்றாண்டில் ஆடவர்கள் மனவடக்கமற்றவர் என்பதை நிரூபிப்பதுபோல இச்சட்டம் எதற்கு? ஆடவர்கள் அவ்வளவு அறிவிலிகளாகவும் காணப்படவில்லையே. மிருகத்தன்மை வாய்ந்த இரண்டொருவர் செய்யக்கூடும் அநீதத்திற்கு ஆடவர் சமூகத்தைப் பழித்துப் பெண்மக்கள் நிலைமையைப் பாழ்படுத்தக்கூடிய சட்டமொன்று வேண்டுமோ. சம்மத வயது சட்டதிட்டத்தைத் திருத்துவதால் எதிர்பார்க்கும் நன்மை கிடைக்குமென்ற நிச்சயமில்லை. ஒருகால் இதற்குமாறாகப் பல பிரதிகூலங்களும் ஏற்பட்டுவிடவும் கூடும். வயது உயர்த்தப்படவேண்டுமானாலும் அதற்குச் செய்யவேண்டிய சீர்திருத்தம் வேறுவகையன்றிப் பெண்களின் சம்மத வயதை உயர்த்தக்கூடிய சட்டமொன்றை இந்தியா சட்டசபையில் கொண்டுவருவதால் ஒருவித நன்மையும் ஏற்படமாட்டாது. சிசுமரணம் தடுக்கப்படவேண்டுமானாலும் பாலிய விவாகம் ஒழியவேண்டுமானாலும் என்னென்ன செய்யப்படவேண்டுமென்பதைப் பற்றி அடுத்த சஞ்சிகையில் கவனிப்போம்.

# தேவரும் திருக்குறளும்.

ஸ்ரீமான். சுத்தானந்த பாரதியார்.

## 1.

### தமிழ்நாட்டுப் பெரியோர்.

தான் பெற்ற புதல்வரினின்றே தமிழ் நாட்டின்பெருமை விளங்கும். அவ்வொளி மைந்தரின் வாழ்வும், வாக்கும் அறக்கடவுள்போல் இன்னும் மக்கள்முன் நின்று அவர்களை நல்லாற்றிலுய்க்கின்றன. அவர்கள் அன்பையும் ஆர்வையும் கலந்து தெய்வ மணங்கமழப் பாடிய பாக்கள் மக்கள் மனதில் சுழன்றுகொண்டிருக்கின்றன. வள்ளலாரின் தெள்ளிய ஞானமும், தாயுமானவரின் தண்ணருள் வெள்ளமும், பட்டினத்தாரின் முற்றத் துறவும், திருவாசகத்தின் தேன் கவிவளவும், ஆழ்வாராதிகள் அன்புப் பெருக்கும், நாயன்மாரின் தூய பணிகளும், அப்பமூர்த்தியின் ஒப்பருங்கனிவும் தமிழ்நாட்டு மைந்தரை உலகிற்கே ஒரு வழிகாட்டிகளாகக் காண்பிக்கும். ஆரியதருமம் சீர்பெற வுதித்த சங்கரர், இராமானுஜர், மாத்வர் முதலிய பெரியோர் நம் தமிழாசியின் நாட்டிலேயே தோன்றிவிளங்கினர். இப்பெரியோர்களெல்லாம் உலகின் பொய்யுறவையும், உள்ளத் தொளிரும் உயர்ந்த தேவனையும், துறவின் பெருமையையும் காட்டினர்.

உலகம் வெறுக்கத் தக்கதல்ல. மண், பெண், பொன் இம்மூன்றும் எள்ளத்தக்கதல்ல, ஆனால் பற்றின்றி அனுபவிக்கத் தக்கனவே என்று காட்டி உலகையும் கடவுளின் படைப்பினங்களையும், உலகின் பணியையும் மதித்து, மக்கள் வினைவழியிற் சென்றுய்யத் தம் சொல்லாலும், செயலாலும் காட்டி உலகின் மனத்துட் புகுந்துறை தேவருள் திருவள்ளுவர் சிறந்தவர்.

## 2.

### வள்ளுவரின் மெய்யறம்.

இல்லறத்தினின்றே மனிதன் இன்பமடையலாம். ஆனால் அவ்வில்லறத்தை அறமும், அன்பும் பொருந்த நடத்தவேண்டும்.

"ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை யுடைத்து"

தானும் நல்வழிப்பட்டு, பிறரையும் அறவழி நிறுத்தி நடத்தும் இல்லறம் தவத்தினும் வலிமையுடையது. அறவழியில் இல்லறத்தை நடத்தமுடிந்தவன் புறநெறிகளிற் போய்ப் பெறுவதொன்றுமில்லை. மனையறம்பற்றி, இயல்பினால் இல்வாழ்க்கை வாழுபவனே சிறந்த முயற்சியுடையவன். அறம்பிறழாத இல்வாழ்வான் தேவராலும் மதிக்கப்படுவோன். இல்லறம் அறவழிப்பட்டதேயாகும். அதுவே பிரம்மச்சாரிகள், வானப்பிரஸ்தர், சந்நியாசிகள் முதலியோருக்குத் துணையாகும் வீடென்பது பரோபகார நிலையமாகும். பாத்துண்டு, பழியஞ்சி வாழும் இல்லோர் மோக்ஷம் அடைவதிற் சிறிதும் ஐயமில்லை.

பெண்கள் "நெஞ்ச விடரென்றும்," "மாயப்பிசாசுகளென்றும்" வெறுக்கத் தக்கவர்களேயல்லர். கற்புடைய பெண் பிறப்பின் மேலானதொன்றில்லை. புகழ்பொருந்திய இல்லாள் ஒருவன் வாழ்விற்குப் பெருமை பயப்பாள். மாண்புள்ள இல்லாள் இருக்கும் மனையில் இல்லாததொன்றுமில்லை. ஒழுக்கமுடைய மனையாள் இருக்கும் மனை மங்களமுள்ளது.

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

தன்னையும் கற்புவழியிற் காத்துக்கொண்டு, தன் கணவனையும் போற்றி, சொற்றிறம்பாது,

புகழ்படைத்து, சோர்விலாது மனைக்குரிய கடன்களைச் செய்பவளே பெண்களிற் சிறந்தாள். அத்தகைய பெண்கள் பெய்யெனப் பெய்யும் மழை

மனையின் அணி மக்களே. அறிவுடையமக்களினும் பெறத்தக்க செல்வம் ஒருவனுக்கு வேறு இல்லை. பழியற்ற பண்புடைய மக்களைப் பெற்றவனை எழு பிறப்பிலும் துன்பங்கள் சாரா. மக்களின் மழலையே யாழினும் குழலினும் இனிது. அவர்கள் சிறு கையாற் பிசைந்த கூழே அமுதினும் இனிது. அவர்கள் மெய் தீண்டலே மெல்லிய இன்பம். தன் மக்களைச் சான்றோராகக் காண்டலே பேரின்பம். அத்தகைய மக்களை அறிவில் உயரச் செய்வது தந்தையின் கடன். தன் புகழால் மகன் தந்தைக்குப் பேருதவி செய்கிறான்.

நன் மனைவியும் மக்களும் பொருந்திய இல்லான் நிற்கவேண்டிய நெறியை வள்ளுவர் அழகாக வகுத்துக் கூறுகிறார். வேண்டுதல் வேண்டாமையிலானை அடிவணங்கி, அவன் தாளையே எண்ணி இவ்வாழ்வு வாழ்வோர் நீடுவாழ்வார். ஒழுக்கத்து நீத்தார் பெருமையை யறிந்து அவர்களை ஆசாராக வணங்குதல் மனையோர் கடன். சிறப்பும் செல்வமும் தரும் அறவழியில் நின்று, புண்ணியமென்னும் பொன்றாத் துணையை படையவேண்டுவது மனையோர் கடன்.

தன் குடும்பம், நாடு, உலகு இவற்றின்மேல் அன்பிருத்தல்வேண்டும். அன்புள்ளார் எல்லார்க்கும் உரியார். அன்பற்றவர் தன்னயமுடையார். மானிடப்பிறப்பை எய்தியதற்கே காரணம் அன்பேயாகும்.

"அன்போ டியைந்த வழக்கென்ப, ஆருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு".

இவ்வாழ்வின் உண்மையான அன்புடன் தன் கடனை ஆற்றவேண்டும். நன்றியுள்ளவனாகப் பிறர்பால் பழகவேண்டும். நடு நிலைமையோடு நீதி வழிநிற்றல் வேண்டும்குடும். பத்தில பலதுன்பங்கள் நேரினும் அவற்றையெல்லாம் பொறுத்து ஒழுக்கமுடன் வாழவேண்டும். பிறருக்கு இன்னாது செய்யாமை, பிறனில் விழையாமை தீவினையச்சம், புலால் மறுத்தல், கொல்லாமை, முதலியவற்றைப் பழகவேண்டும். உலக இயல்பையறிந்து பிறருக்குதவி வாழவேண்டும். தக்கோருக்கு ஈந்துண்ணவேண்டும். ஈகையாலும்,கற்பாலும், செல்வத்தாலும், கல்வியாலும், வீரத்தாலும் இல்லற மக்கள் புகழ்பெற முயல வேண்டும். புகழினும் உயிருக்குத் தக்க ஊதியமொன்றுமில்லை.

"புகழ்பட வாழாதார் தம்நோவார் தம்மை
இகழ்வாரை நோவதெவன்."

புகழ்பட வாழாதவர் இகழப்படுவர். மேற்சொன்ன இல்வாழ்வே வள்ளுவரின் மனையறம்.

## 3.

### துறவறம்.

இனி இவ்வள்ளுவரின் துறவைப்பற்றி பேசுவாம்.

'மன்னுயிர் ஓம்பி அருளாள் வார்க்கில்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை."

நடமாடுங் கோயில்களான உலகத்துயிர்களை அருட்பணியால் காப்பவனுக்கு ஒரு தீமையும் இல்லை. அவன் விடுதலையடைவதற்குத் தடையேயில்லை. அருளே துறவின் அடிப்படை. தான், பிறர் என்று எண்ணாத அன்பே அருள். இன்சொல்லும், அடக்கமும், வெஃகாமையும், பயனில சொல்லாமையும், அவாவறுத்தலும், புறங்கூறாமையும், அழுக்காறாமையும், நல்லவர் சேர்க்கையும் துறவிக்கு முக்கியமான குணங்களாகும். தன்னயந் துறந்து, உணவு, உறக்கம், பொருள் முதலிய வற்றிற் பற்றற்றுத் தன் கருமம் செய்தலே தவம். இன்பதுன்பங்களை ஒன்



றாகக் கருதி, அவற்றினால் மனம் வேறுபடக் கூடாது.

"தன்னுயிர் தானறப் பெற்றானை யேனைய
மன்னுயி ரெல்லாந் தொழும்."

தவமுடையாருக்குச் சாவைத் தடுத்தலும் கூடும். வேண்டிய வேண்டி யாங்கெய்தும். உடலின் பொய்யுறவையும், ஆத்மாவின் மெய்யொளியையும் துறவி அறிந்து உறுதிப்படவேண்டும். நில்லாதவற்றை நிலையெனக்கொள்ளல் புல்லறிவாண்மை. குடம்பையினின்று புட்பறந்தற்றே, உடம்புடன் வாழ்க்கை.

"அடல்வேண்டும் ஐந்தின் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லாம் ஒருங்கு
யாதெனின் யாதெனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்"

என்றவாறு புலனடக்கமும், தியாகமும், பற்றறுத்தலும், போக இச்சைகளையெல்லாம்விட்டு விடலும் துறவிகளுக்கு அழகு. பற்றை விடத் துன்பம் விடும்.

"இயல்பாகும் நோன்பிற்கொன் றின்மை ; உடைமை
மயலாகும் மற்றும் பெயர்த்து."

உலக சம்பந்தமான யாதொரு பொருளும் இல்லாதிருத்தல் தவத்திற்கியல்பு. பொருளுடைமை பற்றிற்கும் மயக்கத்திற்கும் வித்தாகும். தன் பிறப்பறுக்கமுயல்வாருக்கு உடம்பும் மிகையெனில் மற்றும் தொடர்பாடு எது? பற்றற்ற கண்ணே பிறப்பறும். அப்போதுதான் உலகின் நிலையாமை காணப்படும்.

வள்ளுவரின் துறவை இல்வாழ்வோரும் புகலாம். அதுவே தற்காலத்திற்குப் பொருந்தியது. தன்னயம்விடுத்த பணியே தற்காலத் துறவு.

"மழித்தலும் நீட்டலும் வேண்டாம் உலகம்
பழித்த தொழித்து விடின்."

சந்நியாசம் காவி யாடையிலும், மொட்டையடித்துக்கொள்வதிலும், கூந்தல் பனைபோல் சடைவளர்ப்பதிலுமில்லை. பழிபாவங்களுக்கு அஞ்சிப் பற்றற்று வினை செய்வதிலேயேயுள்ளது. வள்ளுவர் உரைத்த மனையறம், மன்னறம், துறவறம் இம்மூன்றிலும் உலகை மறக்கவில்லை. அதன்பணியை வலியுறுத்துகிறார். மனைவியும், மைந்தரும், பொருளும், மனையும் அறநெறிப்படி அனுபவிப்பவருக்குக் குறையொன்றுமிலது. அவருக்கு முத்தியின்பம் தானே பணியும் என்பதே வள்ளுவரின் கோள். மூக்கைப் பிடித்துக்கொண்டு, இவ்வழகிய உலகைக் கூற்றென வெறுத்து, புலிபோற் குகைகளிற் பதுங்கி வாழ்வது வள்ளுவரின் சம்மதமல்ல. மாயைப் புலிக்குப் பயந்து ஒளிவது பேதமை. அதை உறுதியால் வெல்வதே வீரத்தனம். இனி வள்ளுவரின் சரித்திர வாயிலாக அவர் வேதத்தை அறிவோம். வள்ளுவரின் வாழ்வில் மனிதன் கற்றுக்கொள்ளவேண்டிய நீதிகளிருப்பதால் அதைப்பற்றித் தொடர்ந்து எழுதுவாம்.

## 4.

### ஆதிபகவன்.

வள்ளுவர் பிறப்பைக் குறித்துப் பலர் பலவகையாகக் கூறினும், படிப்போரை மயக்காது ஒருதலைத் துணிபுடனேயே எழுதுவல். இல்லறநெறியை ஒழுங்குபடவுரைத்துக் கடவுளின் கோயிலான உலகை மக்கள் அனுபவிக்கும் வழியையும் காட்டவந்த கடவுளென்பதே வள்ளுவரைப்பற்றி நான் வணக்கமுடன் கொள்ளும் கருத்து. "சமயக்கணக்கர் மதிவழி கூறாது, உலகியல் கூறிப் பொருளிதுவென்ற வள்ளுவர்" என்று கல்லாடனார் சொல்லியிருக்கிறார்.

ஒருகாலத்தில் பிரமன் தென்மொழியைச் சிறப்பிக்க ஒரு வேள்வி செய்தான். அதனின்று ஒரு குடம் எழுந்தது. அதில் கலைமகளும் அகத்தியரும் உதித்தார்கள். அகத்தியர் சமுத்திரகன்னிகையை மணந்து பெருஞ்சாகரனென

பவரைப் பெற்றார். பெருஞ்சாகார் திருவாரூர்ப் புலைச்சியை மணந்து பகவன் என்பவனைப் பெற்றார்.

பகவன் கல்விகேள்விகளிற் தேர்ந்து,முறைப்படி வேதமோதி அறிவிற் சிறந்தான். உலகவியல்பை யறியவும், மனவுறுதி பெறவும் கால்நடையாகக் காசியாத்திரை செய்யப் புறப்பட்டான். செல்லும் வழியில் மேலூர் ஆகாம் என்ற ஒரு சிறு கிராமச்சத்திரத்தில் தங்கிச் சமையல் செய்துகொண்டிருந்தான்.

அந்த சத்திரத்ததிபன் நீதி ஐயன் என்ற அந்தணன். அவனிடம் ஒரு உத்தமகுணம் வாய்ந்த ஒரு சிறு பெண் வளர்ந்து வந்தாள். ஒருகாலத்தில் தவ முனி என்பவர் அருள்மங்கை என்பவளை மணந்து ஒரு புதல்வியைப்பெற்று, அதை அவ்விடமே விடுத்துவிட்டுத் தவஞ் செய்யப் போய்விட்டார். அப்பெண்ணை உறையூரிலிருந்த ஒரு பறையன் எடுத்து வளர்த்தான். அவ்வூர் மண்மாரியால் அழிந்தது. அப்பிள்ளையை மட்டும் நீதிஐயன் என்னும் அந்தணன் தன் குழந்தையினும் அன்பாய் வளர்த்து வந்தான். இப்பெண் பகவன் தங்கியிருக்கும் சத்திரத்தில் வேலைசெய்து கொண்டிருந்தாள். பகவன் சமைத்துக் கொண்டிருக்குமிடத்திற்கு இப்பெண் வந்தாள். பார்ப்பனனான பகவன் யாதோ ஒரு புலைச்சி தம் அட்டிலுட் புகுந்தாள் என சீறிக்கடுத்து ஒரு சட்டுவத்தால் அவளை இரத்தம் சொரிய மண்டையில் அடித்தான். அப்பெண் அழுதுகொண்டு அப்புறம் போந்தாள். பகவன் மறுபடியும் நீராடிப் புதிதாகச் சமைத்துண்டு தன் யாத்திரையைத் தொடர்ந்தான். கங்கையில் நீராடிக் காசியில் சிங்காட்களிருந்து, காவடிகொண்டு திரும்பிவரும் வழியில் மறுபடியும் முற்சொன்ன கிராமச் சத்திரத்திலேயே தங்கினான்.

இப்போது அச்சத்திரத்தில்

அணங்குகொல் ! ஆய்மயில் கொல்லோ ! கனங்குழை
மாதர்கொல் ! மாலுமென் னெஞ்சு !

என்று பகவன் மயங்கும்படி ஒரு மடந்தை கண்டாருயிருண்ணுந் தோற்றத்தளாய் விளங்கினாள். கண்களவு கொள்ளுஞ் சிறு நோக்குகளால் இருவருக்கும் காதல் ஏற்பட்டது. கடலென்ன காமமுழலும் இவர்களைக்கண்ட நீதி ஐயன் தன் பெண்ணை மணம் புரிந்துகொண்டு அங்கேயே சுகமாயிருக்கலாமென்று பகவனுக்குச் சொன்னான். பகவன் தான் கொணர்ந்த காவடியை யேந்தி இராமேச்சுவரம் சென்று அபிஷேகித்துவிட்டுத் தன் மனம் நிலைபெற்ற அந்த சத்திரத்துள் நுழைந்தான். முன் சொன்னபடியே மணவினைக்கு ஏற்பாடானது. காதலர் இருவரும் மணவரையில் உட்கார்ந்தனர். மணம் வெகு சிறப்பாக நடந்தது. ஐந்தாவது நாள் பகவன் தன் மனைவிக்கு விதிப்படி எண்ணை தேய்க்கும்போது, பெண்ணின் தலையில் ஒரு வடுகண்டான். அதனால் முன்னே தான் சட்டுவத்தால் அடித்த பெண்ணே இவள் என அறிந்து திடுக்கிட்டு, "இவள் ஆதியளன்றோ" என்று சொல்லி, தான் ஒரு நீசப்பெண்ணை மணந்ததை எண்ணி நொந்து ஓடி ஒரு மண்டபத்துள் நுழைந்தான். அப்பெண் பெயர் அன்று முதல் "ஆதி" என்றானது.

தன் இனியனின் பிரிவு ஆதியைச் சுடுசரம் போல் தைத்தது. படர்மெலிந்திரங்கினாள். உலகில் மற்ற எல்லாவற்றையும் பழித்தாள், பகவனிடம் ஓடினாள். அவன் காலைப்பணிந்து "தாங்கள் என்னைப் பிரியின் உயிர் வாழேன். நாம் இருவரையும் கடவுளே கூட்டிவைத்தான்" என்று அலறினாள். பகவன் சற்று இரங்கினான். முன்செய்தவினை கூட்டிவைத்த தொடர்பே இது என்றெண்ணினான். "ஏ பெண்ணே ! உன் அன்பிற்காக உன்னை நேசிக்கிறேன். எனினும், யான் சொல்லும்படி யெல்லாம் நடத்தல்



வேண்டும்" என்றான். ஆதி "ஆருயிர்த்துணைவரே, அது எனதுகடமை யென்பதை நன்கு அறிவேன்" என்றாள். நமக்குப்பிறக்கும் குழந்தைகளைப் பிறந்த ஊரிலேயே விட்டுவிட்டு உடனே வேறூருக்குச்செல்ல நீ உடன்படுவாயாகில் நாம் ஒன்றாயிருப்போம்" என்றான் பகவன். அதற்கு ஆதி ஒப்புக்கொண்டாள். ஆதியும் பகவனும் பிரியாத காதலராயினர். ஊர்ஊராகச் சுற்றினர். ஊசிவழியே நூல் புகுவதுபோல் தன் கணவன் மனப்படியே ஆதி நடந்தாள். இவர்களுக்கு அற்புதமான குழந்தைகள் பிறந்தன. உறையூரில் ஒரு மண்டபத்தில் கலைமகள் வடிவாய் ஔவை பிறந்தாள். ஆதியானவள் இக்குழந்தையைப் பிரியவாற்றாது வருந்துகையில் அக்குழந்தை "பஞ்சமேயாயினும் பரமனே காப்பான் நெஞ்சமே அஞ்சாதே" எனப்பாடியதைக்கேட்டு தைரியத்துடன் அக்குழந்தையைப் பிரிந்தனர். ஔவை பாணர்களால் வளர்க்கப் பெற்றாள். தெய்வமணங்கமழும் பாக்களைப்பாடினாள்.

இப்படியே ஊற்றுக்காட்டில் உப்பை பிறந்து வண்ணார்களால் வளர்க்கப்பட்டாள். கருவூரில் அதிகமான் பிறந்து சேரமானால் வளர்க்கப்பட்டான். காவிரிப்பூம்பட்டினத்திற் பிறந்த உறுவையென்ற பெண்மகவைக் கள்விற்போர் வளர்த்தனர். திருவாரூரிற் பிறந்த கபிலரைப் பாப்பையனென்னும் ஓர் அந்தணன் வளர்த்தான். வேளின் மலைச்சாரலில் வள்ளியம்மை பிறந்தாள். அப்பிள்ளை மலைக்குறவரிடம் வளர்ந்தது.

இக்குழந்தைகளெல்லாம்பிறவிக் கவிகளாயும் ஞானிகளாயும் வளர்ந்தன. தம்தாய் தம் பிரிவை வருந்தும்போது, ஒவ்வொருபகவும் அவ்வப்போது "அற்பனோ அன்னாய் அரன், உயிரனைத்தினையுங் காப்பவன் என்னைக்காவானோ. கருப்பைக்குள் முட்டைக்கும் கல்லினுட் தேரைக்கும் உணவளிப்பவன் என்னை ஊட்டி வளர்க்கானோ. அரனுடைய வுண்மை நிலையறிவாயாக. நமக்குப் படியளப்பான் நாரியோர் பாகன்" என்று பலவகையாக உறுதிசொல்லித் தேற்றிப் போவிடுத்தது.

(தொடரும்.)

# தேகப் பயிற்சி.

(ஸ்ரீமான் ஆனந்தன்.)

தேகப்பயிற்சியினால் நமது உடல் பலமும் சுகமும் அடைகிற தென்பதைப் பல மேதாவிகளும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். அதன் உண்மையை உள்ளவாறுணர்ந்தவர்கள் பிரதிதினமும் பயிலாதிருப்பதில்லை. எத்தொழிலைச் செய்வதற்கும் தேகபலம் முக்கிய ஆதாரமாயிருக்கின்றது. உடலிற்குச் சரியான பயிற்சி இல்லாது வேறு வழிகளாற் சரீர சுகம் பெற விரும்புபவர்கள் மண்குதிரையை நம்பி ஆற்றிலிறங்கியதற்கொப்பாவார்கள். நல்லதசைக்கட்டுள்ள தேகத்தில் வீரம், வன்மை, திடசித்தம், சாந்தம் முதலிய நற்குணங்கள் இருக்குமே தவிர அற்ப குணங்களிரா. அல்லாமலும், நீண்டவாயுள், நோயற்றவாழ்வு முதலானசெல்வங்கள் அவர்களைத்தேடியடையும். ஒரு காதலனும் காதலியும் ஆழ்ந்த அறிவுடையவர்களாய் இருந்தால் மட்டும் போதுமா? அவர் ஜீவியகாலம் இன்பமாய் நிறைவேற வேண்டுமானால் திடகாத்திரத்தோடுகூடிய நோயற்ற தேகத்தையல்லவா பெறவேண்டும்? அறிவு, உறுதி, அழகமைந்த சரீரத்தோடு கூடிய வாழ்க்கை இவைகளை யடைய ஒவ்வொருவரும் விரும்புவார்கள். விரும்புவதினால்மாத்திரம் நினைப்பது கிட்டுமா? விரும்புவதற்கேற்ப முயற்சியல்ல

வா செய்யவேண்டும்? முயற்சியிலும் பல தவறுகள் நிகழலாம். விடாது முயற்சிக்கின் கோரியபலன் கிட்டுமென்பதே ஆன்றோர் துணிபு. இவைகளை உணர்ந்து சகோதரிகள் தேகப்பயிற்சி செய்ய முன்வரவேண்டும். குடும்பத்திற்காதியாயுள்ள பெண்மக்கள் தேகப்பயிற்சியைக் கவனியாதிருப்பது விசனிக்கத்தக்கதே. இது விஷயத்தில் ஆண்மக்கள் பெண்மக்களுக்கு உற்சாக மூட்டவேண்டும், உதவிபுரியவேண்டும். பெண்களும் நல்லதெனத்தோன்றும் ஒருவிஷயத்தை யடைய தைரியமாய் முன்வரவேண்டும். கேவலம் பொம்மைகளைப்போல் வீட்டினுட் பதுங்கிக் கிடத்தல் கூடாது. சோம்பேறியா யிருத்தல் கூடாது. சுகமான வாழ்வை விரும்பினால் குறிப்பிட்டகாலத்தில் தேகப்பயிற்சி செய்து எப்பொழுதும் சுறுசுறுப்புள்ளவர்களாயிருத்தல் வேண்டும். ஏதாகிலும் ஒருவேலை செய்யாமலிருப்பவர்கள் ஒருநாளும் சுகம் பெற முடியாது. மனோமுயற்சியில் அதிகம் ஈடுபட்டிருப்போர் கட்டாயமாகத் தேகப்பயிற்சி செய்து பலத்தை விருத்தியாக்கிக் கொள்ளவேண்டும். தேகபல மில்லாதவர்களால் எக்காரியத்தையும் பூர்த்தியாக முடித்தலியலாது. அவர்கள் எப்பொழுதும் எந்தவேலையிலும் மந்தமாகவே யிருப்பார்கள். நேசத்துடன் ஒரு காரியத்தையும் செய்யார்கள். அவர்களுக்கு உறக்கத்தில் அதிக பிரியம். இவ்விதம் தேக உழைப்பின்றி தூக்கம் பிடித்தவர்களாயிருப்பதால் அவர்களுடைய நரம்புகளும், இரத்தநாளங்களும் தளர்ந்து கெட்டுப்போகின்றன. தேகத்தில் நோய் குடிகொள்ளுகிறது. சிறிதும் தேக முயற்சியின்றிக் கண்டதை யெல்லாம் உண்டு உறங்கும் சீமாட்டிகளிற் பலர் சதா நோய் வாய்ப்பட்டு வருந்துகின்றனர். தேகப்பயிற்சியின்மையால் உடம்பு வலியெடுக்கிறது. இவ்வித பலவீனர்கள் ஒருபோதும் சந்தோஷமாயிருக்க முடியாது. இவர்களிடத்திற் துன்பந்தான் தாண்டவமாடும். சகோதரிகள் இதைக் கவனிக்கவேண்டும். பெண்களும் தேகப்பயிற்சி செய்வதாவென அறியாதசிலர் சொல்வதை நீங்கள் கவனிக்கவேண்டாம். அவர்கள் பிதற்றிக் கொண்டிருக்கட்டும். நீங்கள் தகாதகாரியம் ஒன்றும் செய்யவில்லை யென்பதை அவர்களுக்கறிவியுங்கள். எங்கள் உடல் நலத்தைப் பேணுவதில் ஏதேனும் குற்றம் உண்டாவென அவர்களைக்கேளுங்கள். நீங்கள் படிப்பில் சிந்தைவைப்பதுடன் தேகப்பயிற்சியையும் மறவாதீர்கள்! உங்கள் உடல் நலத்தைப் பாதுகாத்து தேகபலத்தை விருத்தி செய்துகொள்ளுங்கள்.

அமெரிக்கப் பெண்களுக்கிருக்கும் தேகபலம் இந்திய மாணவர்களுக்கில்லை யெனப் பத்திரிகையில் படித்தேன்; வெட்கம்! வெட்கம்!! இதைக்காட்டிலும் என் போன்ற ஆண்களுக்கு வேறென்ன அவமானம் வேண்டும்.

பூர்வத்திற் பெண்களின் மானத்தைக் காப்பது ஓர் சிறந்த தர்மம். எத்தனையோ வீரர்கள் கற்பைக் காப்பதின் நிமித்தம் உயிர் துறந்திருக்கிறார்கள். உயிரை விட மானத்தையே பெரிதென வெண்ணி மாண்ட மங்கையர்களெத்தனை! பண்டையப் பெண்மணிகள் எவ்வளவு உரம் பெற்றிருந்தார்கள்!

அக்பருடன் போர் புரிந்து யுத்த களத்தில் எண்ணிலா வீரரை மடித்த 'கிருஷ்ண குமாரி'யின் வீரமென்ன!

கட்டழகு வாய்ந்த காரிகையாம் தன் மகள் தாராவைக் கவர்ந்துகொண்டேக வந்த லல்ராஜுடௌலாவின் படைவீரர்களைக் கண்டு அஞ்சாது தம் படைகொண்டு எளிதில் வென்ற 'பவானிராணி'யின் திடசித்தமென்ன?

பொலிந்து விளங்கும் யானை ஏறி அமர்க்களம் புகுந்து பல யுத்தங்களிலும் தளராது வென்ற 'இண்டோர் அரசி'யின் அஞ்சாமையென்ன!



இன்னம் எத்தனையோ மாது சிரோன்மணிகள் தமது கற்பைக் காக்கவும், தேசத்தைக் காக்கவும் பகைவருடன் போராடி உயிர் துறந்திருக்கின்றார்கள். அத்தகைய வீரமாதுகள் பிறந்திருந்த இந்நாட்டில் பெண்கள் உடல் வன்மை மனவன்மையின்றி இருத்தல் வருந்தத்தக்கது. இவர்கள் தேகப்பயிற்சியினால் நல்ல பலத்தையும் திட சித்தத்தையும் பெற்றிருப்பார்களானால் நல்ல சந்தானங்களையடையலாம். ஆதலால், சகோதரிகள் தேகப் பயிற்சிக்கான பல வழிகளிலும் முயன்று, உடல் நலத்தில் ஊக்கமுடையவர்களாகி, பயங்கொள்ளித்தனத்தை அறவே நீக்கி பலமுடையவர்களாகியிருக்கவேண்டும்.

தேகப்பயிற்சியை சகோதரர்கள் கவனியாது அலட்சியஞ் செய்யும்பொழுது சகோதரிகளைப்பற்றிக் குறை கூறி என்ன! பண்டைய காலத்தில் நம் பாரத நாட்டு மக்களடைந்திருந்த வீரமெங்கே? ஆண்மை யெங்கே? கலங்காத திடச்சித்தமெங்கே? மானமெங்கே? எல்லாம் அவர்களோடழிந்து போயினவா? நமது மானத்தை நாம் இனி காத்துக்கொள்ள முடியாதா? முடியாதாயின் உயிர் வாழ்வது எங்ஙனம்? நம்மிடத்திற் பிறருக்கு நன் மதிப்பு ஏற்படாதவரை நமக்கு இவ்வித துன்பங்கள் நேர்ந்து கொண்டுதானிருக்கும். நமக்குப் போதியவன்மை அமையாதவரையில் நாம் அலட்சியமாய் நடத்தப்படுவோமென்பது நிச்சயம். மேலான பலம் பெறவேண்டுமென நமது சகோதரர்கள் எண்ணுகிறார்களாயினும், அதற்குரியவைகளைக் கைக்கொண்டு நடக்கவில்லை. நடவாவிடில் எவ்வாறு பலம் பொருந்திய தேகம் கிடைக்கும்? பெண்மக்கள் திடதேகத்துடனும் ஆரோக்கியத்துடனுமில்லாதவரை மக்கள் திட சரீரிகளாயிருப்பதெங்ஙனம்?

(தொடரும்.)

# நூர்ஜஹான் அல்லது பாரதகண்டத்துச் சௌந்தரியக் கொடி.

(ஸ்ரீமதி பாகிரதி அம்மாள்.)

## முதல் அத்தியாயம்.

கவிகுல மகுடமணி காளிதாசன் எழுதி அருளியிருக்கும் 'ருதுசம்ஹாரம்' என்னுங் காவியத்தில் காலத்தைப் பற்பல பாகங்களாகப் பிரித்து வர்ணிக்கப்பட்டவைகளிலொன்றாகிய 'கிரீஷ்மருது' சமயம். சூரிய நாராயணன் தனது நேத்திரங்களைத் திறந்து சிருஷ்டி தேவதையைக் கோபமுடன் நோக்கி யிருந்தான். வெயிலின் உக்கிரத்தைச் சகிக்கமாட்டாது எல்லாப்பிராணிகளும் 'உஸ், உஸ்' என்று இருந்த இடத்தைவிட்டு நகராது இளைப்பாறிக்கொண்டிருக்கும் வேளை. பூமிக்குக் கீழ் வாசஞ் செய்துகொண்டிருக்கும் கொடிய சர்ப்பங்களும் வெயிலின் கொடுமையைச் சகியாது பசுக்களைப்போல் சாந்தகுணமடைந்து தாங்களிருந்த இடத்தைவிட்டு விலகாதிருந்தன. சுருங்கச் சொல்லுங்கால், பிரளயகர்த்தா திருமூர்த்தியே அக்கினி நாராயணனது ஸ்வரூபத்தைக் கொண்டு நபோ மண்டலத்தை விடுத்து இப்பூமியிற் பதினோராவது அவதாரஞ் செய்ய வந்துகொண்டிருப்பதாகத் தோன்றியது. சிருஷ்டிதேவதை வியாகூலமடைந்து வேறொரு உபாயமு மறியாதவளாய் அக்கினியினின்றுந் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளக் கருதி மலைகளுக்குச் செல்ல உத்தேசித்தாள். ஆனால் அங்கு செல்லத் தனக்கு அனுமதி கிடைக்குமோ கிடைக்காதோ என்ற சங்கையுண்டாகவே, எப்படிப்பட்ட இடத்திலும் பிரவேசிக்கச் சாமர்த்தியசாலியான வாயுவைத் தன் வசப்

படுத்திக்கொள்ள, வாயுவும் இதே கஷ்டத்திற்குள்ளாகி இவளை விடுத்துச் சென்றனள். இவ்வண்ணம் எங்கும் உதவியைப் பெறாத சிருஷ்டி தேவதை வெப்பத்தைச் சகிக்கவொண்ணாது உயிரையே வெறுத்து, 'உஸ்,உஸ்' என்று சப்தித்துக்கொண்டு படுக்கையிற் படுத்திருந்தனள்.

இப்படிப்பட்ட பயங்கரமான கோடைகாலத்தில், பிரேம பாசத்திற்குட் சிக்கிய தருணதம்பதிகளிருவர் 'கந்தஹாரின்' பயங்கரமான பாலைவனத்தில் தமது வழியை நோக்கி நடந்துகொண்டிருந்தார்கள். ஆப்தமித்திரர்கள் ஒருவருமின்றி களங்கமும் கபடமுமற்ற பிரேமையையே ஆதாரமாகக்கொண்ட இத்தம்பதிகள் தமது ஜன்ம பூமிக்குக் கடைசியாக சலாம் செய்து இந்துஸ்தானத்தை நோக்கி நடந்துகொண்டிருந்தார்கள்.

கந்தஹாரின் ஆரண்யம்! பிரியவாசகர்களே! இப்பயங்கர ஆரண்யத்தைப்பற்றி நீங்களேதேனுங் கற்பனை செய்ய முடியுமா? இந்த வனப் பிரதேசத்தில் நாலா பக்கங்களிலும் மூங்கிற் புதர்கள் ஆகாயத்தையளாவி எங்கும் மறைத்து நின்றமையால் ஆகாயமும் பூமியும் ஒன்றாகத் தோன்றின. அடிக்கடி வீசிக்கொண்டிருந்த காற்றின் வேகத்தால் 'ஹோ ஹோ' என்ற சப்தமே எங்கும் வியாபித்திருந்தது.

இப்பயங்கரமான காட்சியைக் கண்டு மிக்க தைரியமுள்ள புருஷனும் இருந்த இடத்திலேயே ஸ்தம்பித்து விடுவான். கண்களை இறுக மூடிக்கொள்வான். அவனது மார்பு படபடவென அடித்துக்கொள்ளும். ஒருவேளை சுவாசம் நின்றாலும் நின்றுவிடும். ஒரு புருஷனே இப்பாடு படுங்கால், பாவம்! ஓர் அபலையின் கதி யெவ்வாறிருந்திருக்கும்?

அக்காட்சி மிக்க பயங்கரமாகவே யிருந்ததென்பதிற் சந்தேகமில்லை. அப்பிரம்மாண்டமான பயங்கரப் பிரதேசத்தில், சிறிது குளிர்ச்சியைக் கொடுக்கக்கூடிய மரஞ் செடிகள் யாதொன்றுந் தென்படவில்லை. வழியிற் கொஞ்சந் தாமதித்து சிரமப் பரிகாரஞ்செய்துகொள்ள வழிப்போக்கர்கள் நினைப்பது சகஜமே. ஆனால் இளைப்பாற இடமிருந்தாலல்லவோ? நாலா பக்கங்களிலும் சூரிய கிரணத்தாலுண்டான அக்கினிஜ்வாலை பொறுக்கமாட்டாது அப்பிரதேச முழுதும் தவித்துக்கொண்டிருந்தது. இப்படிப்பட்ட பயங்கரமான பாலைவனத்தில் முன் கூறப்பட்ட தருணதம்பதிகளிருவரும் கொஞ்சமேனுந் தாமதியாது நடந்துகொண்டே யிருந்தார்கள். இவர்களிருவரும் மிகவுங் கவலையோடும் துக்கத்தோடும் இருந்தார்களெனச் சொல்லவேண்டியது அனாவசியமே. ஆனால் பிரேமையின் பாசத்திற்குக் கட்டுப்பட்ட இத்தருணதம்பதிகள் இப்பயங்கரமான வனத்தைக் கடக்க நினைப்பதென்றால் பிரேமையின் பிரபாவமின்னதென இதை வாசிப்பவர்களே அறிவர்!

காலை வேளை. சூரியன் இளங்கிரணங்களைப் பரப்பி வெளிக் கிளம்பினான். சூரியோதயமானதும் இவ்வுலகில் ஆனந்தம், உல்லாசம் முதலியவைகள் ஆரம்பமாகின்றன. ஆனால் இத்தம்பதிகளிடத்தில் இவையாதொன்றுமில்லாது துக்கமே குடிகொண்டிருந்தது. காலைவேளையில் பக்ஷிகணங்களின் மதுர சங்கீதம், வண்டுகளின் ரீங்காரம், கால்நடைகளின் கனைப்பு, ஜனங்களின் சந்தோஷமான வார்த்தைகள் இவை யாதொன்றும் ஜனசஞ்சாரமற்ற இவ்விடத்தில் கேட்கப்படவில்லை. சூரியன் எவ்வளவுக்கெவ்வளவு உயரக் கிளம்பினானோ அவ்வளவுக்கவ்வளவு வெப்பமு மதிகரித்துக்கொண்டே வந்தது. சிருஷ்டி தேவதையினழகைப் பார்த்தவண்ணம் இவ்விரு பிரயாணிகளும் நடந்துகொண்டே யிருந்தார்கள். பிறகு சூரியனது வெப்பம் தணியும்வரை தாமதித்து மறுபடியும் தமது பிரயாணத்தைத் தொடங்கினார்கள். இப்பயங்கரமான வனத்தை இவ்விருவரும் எப்படிக் கடந்து செல்லுகிறார்களென நீங்கள் ஆச்சரியமுறலாம். இவர்களுடன் ஒரு குதிரையுமிருந்தது. போன ஜன்மத்தில் தான் செய்துள்ள கர்மங்களைப் போக்கடிக்கவே அக்குதிரையும் இவர்களுடன் வந்ததுபோலும்! அதனுடைய சரீரத்தில் எலும்புந் தோலுந் தவிர வேறொன்றுந் தென்படவில்லை. அது தனது கடனைக் கழிக்கவே இதுவரை உயிருடனிருக்கிறதென்று அதைப்பார்ப்பவர்களுக்கெளிதிற் தோன்றும். அதன் முதுகிலிருந்த ஒரு பெரிய மூட்டையில் ஒரு பக்கத்தில் அவர்களது ஆகாரத்திற்கு வேண்டிய சாமான்களும், மற்றொரு பக்கத்தில் அருந்தத் தண்ணீரும் சேமித்து வைக்கப்பட்டிருந்தன.



“இவ்வனப் பிரயாணத்தை எப்பொழுதுதான் கழிப்போமோ? இப்பயங்கரமார்க்கம் எப்பொழுதுதான் முடியுமோ? வழியில் ஒரு குருவியுங் காணவில்லையே! காலடிபேதேனுந் தெரியும்பக்ஷத்தில் அதை ஆதாரமாகக்கொண்டாகிலும் இப்பாலை வனத்தைக் கடக்கத் தைரியமுண்டாகுமே. ஹா! ஈச்வரா! எங்களுக்கு உன்னைத் தவிர யார் துணை? எங்களுக்கு நீயே ஆதாரம்! காப்பாற்று! இல்லையேல் இவ்வுலகை விடுக்கச் சீக்கிரம் வழி காட்டு!” என்று மிக்க நிராசையுடன் பெருமூச்சுவிட்டுப் பகர்ந்தனன் அப்புருஷன்.

அப்புருஷனுடைய திடகாத்திரமுள்ள சரீரத்தைப் பார்க்குங்கால் அவன் எத்துக்கத்தையுஞ் சகிக்கும் சாமர்த்தியம் வாய்ந்தவனெனத் தோன்றும். மார்போ அகன்று விசாலமாயிருந்தது. கண்கள் பிரகாசித்தன. முகம் மிக்க கம்பீரமாகவே தோன்றியது. சற்று உற்றுப் பார்க்குங்கால், அவன் இரானிய குலத்து ஒரு பெரிய சர்தாரின் வம்சத்தைச் சேர்ந்த புருஷனெனத் தோன்றும். அவனுடனிருந்த ஸ்திரீயோ மிக்க எழில்வாய்ந்த சுந்தரியாகவே யிருந்தனள். அவளது தேகத்திலுள்ள ஒவ்வொரு அவயவத்திலும் லாவண்ணியம் பூர்ணமாயிருந்தது. தேஜஸ் ராஜ்யபாரஞ் செய்துகொண்டிருந்த அவளதிரு நேத்திரங்களினின்றும் நீர் முத்துமுத்தாய் உதிர்ந்துகொண்டேயிருந்தது. சாராம்சம் யாதெனில், இச்சுந்தரியைச் சர்வாங்கசுந்தரி என்றழைப்பதே சிலாக்கியமாகும்.

களங்கமில்லாப் பிரேமையின் மிகுதியால் மிக்க கஷ்டத்தைக் கொடுக்கும்படியான இவ்வனப் பிரயாணத்தைக் கைப்பற்றி, கொடியானது விருக்ஷத்தைச் சுற்றிப் படருவதுபோல், தன் பிராணபதியைப் பின் பற்றியே நடந்தனள் அந்நங்கை. பதியின் சகவாசத்தால் அவளுக்கு ஆரணியம் அரண்மனையாகத் தோற்றியது.

பாவம்! அச்சமயத்தில் அவள் பூர்ண கர்ப்பவதியாயிருந்தனள். பிரசவிக்கும் நாளும் சமீபித்துக்கொண்டே வந்தது. சர்வ சுகத்திற்குங் காரணமான தன் பதி தனது சந்நிதானத்திலேயே யிருந்ததால் அவளுக்குத் துக்கமென்பது சிறிதேனுமுண்டாகவில்லை. ஆனால் அப்புருஷன் மிக்க வியாகூலத்தையே யடைந்திருந்தனன். தான் தனித்திருக்கும்பக்ஷத்தில் இத்துக்கத்தைக் கொஞ்சமேனுங் கவனித்திரான். எவளுக்காக இவ்வளவு கஷ்டத்தை அனுபவித்து எல்லாவற்றையும் துறந்தனனோ அவளுடைய அவஸ்தையைக் கண்டே மிக்க விசாரத்திற்குள்ளானான்.

“இச்சுகுமார தருணியை இன்று அக்கினிப் பிரளயத்தின்' வழியாக அழைத்துக்கொண்டு போகவேண்டுமென்று என் தலையிலெழுதியிருக்கிறதுபோலும்!” என வருந்தினான்.

"என்னை மோகித்துத் தன் மேலுள்ள பாரத்தை என்னிடம் சமர்ப்பித்துள்ள இவளை இப்பயங்கரப் பிரதேசத்தினின்றும் மீட்காவிடில் நானுமொரு புருஷனா? நானெதற்காகப் பிறந்தேன்? பிரேமையே! நீ உனது பாசத்திற்குட்பட்ட எவ்வளவு அபலைகளையும் புருஷர்களையும் இந்த அதோகதிக்குள்ளாக்கி யிருப்பாய்; ஆஹா! பிரேமை மீண்டு இஷ்டங்களை யனுபவிக்க மிக்க ஆனந்தங்கொண்டு இவ்வபலை என்னைத் தொடர்ந்து வந்தும் நான் தைரியத்தை விடுத்து இச்சங்கடத்தினின்றும் இவளைக் காப்பாற்ற முயற்சி செய்யாது இருக்கின்றேனே!"

இவ்வித விசாரங்களுக்குட்பட்ட அப்புருஷன் அந்த ஸ்திரீயுடன் கந்தஹாரின் வனத்தில் விடாது நடந்துகொண்டிருந்தானாயினும், ஹனுமாரின் வால்போல் அவ்வனத்தினெல்லையும் நீண்டுகொண்டே வந்தது.

வனப்பிரயாணம் இருக்க இருக்க நீடித்துக்கொண்டே இருந்ததால், இத்தம்பதிகள் தம்முடன் கொணர்ந்திருந்த நீர், மற்றும் உணவு பதார்த்தங்கள் யாவும் குறைந்துகொண்டே வந்தன. ஆனால் ஜனசஞ்சாரமற்ற அந்த ஸ்தலத்தில் யார் உதவி செய்ய வருவார்கள்? மிக்க நேரம் யோசனையிலாழ்ந்திருந்தபின், வேறொரு உபாயமுமில்லையென அறிந்த அந்த இரானியத் தருணன் பிரயாணத்தைத் தொடர ஆரம்பித்தான். தனது பிரிய பத்தினியைத் தூக்கிக் குதிரையின்மேலுட்கார வைத்தான். குதிரையும் போய்க்கொண்டேயிருந்தது. வெயிலின் உஷ்ணத்தைத் தணிக்க ஒரு குடையைப் பிடித்துக்கொண்டே குதிரையுடன் மெதுவாகச் செல்லலுற்றான். இதுவரை வயிறு நிறம்பக் கிடைத்துவந்த புல்லும் சில தினங்களாகக் கிடைக்காததால்,பாவம்! அக்குதிரையும் மிக்க கஷ்டத்துடன்சென்றுகொண்டிருந்தது. அதன் பிராணன் இன்று போகலாமா நாளை போகலாமா எனக் காத்திருந்தது. கொஞ்சதூரஞ் சென்றபிறகு சூரியனது தாபத்தாலுண்டான தாகத்தைச் சாந்தி செய்துகொள்ளும் பொருட்டுத் தங்களுடன் கொணர்ந்துள்ள நீரை அத்தம்பதிகள் ஒவ்வொரு வாய் பருகித் தொண்டைகளை நனைத்துக்கொண்ட பின்னர், அந்த ரணபூமியிலகப்பட்ட புற்களைச் சேகரித்து அக்குதிரைக்கு முன் போட்டனர். ஆனால் மரணமே கதியெனக் காத்திருந்த அப்பிராணி, கண்களில் ஜலந்ததும்ப, துர்ப்பாக்கியசாலியான தனது யஜமானனைப் பார்த்துக்கொண்டே அப்புற்களைத் தின்று தன் வயிற்றை நிரப்பிக்கொண்டது. அச்சமயம் அப்புருஷனது மனதில் தனது பத்தினியைச் சம்ரக்ஷிக்கும்பொருட்டுப் பற்பல விசாரங்கள் உதித்தன. அவ்விசாரங்களுக்குட்பட்ட அப்புருஷன் தனக்குள்ளாகவே, "இச்சங்கடங்கள் என்று நிவர்த்தியாகுமோ? ஆஹா! நானெனது பிராணேச்வரியை எவ்விதம் சம்ரக்ஷிக்கப் போகின்றேன்! யாருக்காக நானெனது தாய் தந்தைகளைத் தியாகித்து அவர்களுடன் சண்டையிட்டு வந்தேனோ, யாருக்காக எனது இஷ்டமித்திரர்களது கோபத்தை லக்ஷியஞ் செய்யாதிருந்தேனோ, யாருக்காக மறுபடியும் திரும்பிப் பார்க்கக்கூடாதென்ற க்ஷாத்திரத்துடன் எனது ஜன்மபூமியை விடுத்து இப்பயங்கரமான ஆரணியத்திற் பிரயாணஞ் செய்யப் புகுந்தேனோ அவளை நானெவ்வாறு இவ்வாயிரக் கணக்கான சங்கடங்களினின்றும் விடுக்கப் போகின்றேன்?" என்ற இவ்விசாரங்களுக்குட்பட்ட அப்புருஷனது மனம் பயம், நிராசை, அதைரியம் இவைகளாற் பீடிக்கப்பட்டது. ஆனால் அத்தருணஸ்திரீயின் வாயினின்றும் ஒரு வார்த்தையேனும் வெளிவரவில்லை. ஆகாயத்தில் எவ்வண்ணம் மேகங்கள் ஒவ்வொன்றாகச் சேருகின்றனவோ அவ்வண்ணமே இவனது மனதிலும் விசாரங்கள் ஒன்றின்பின்னொன்றாகச் சேர்ந்து



கொண்டே வந்தன. "ஆகார சாமான்களும் ஆய்விட்டன. இனிப்பசிப்பிணியைப் போக்குவதெப்படி? வனமே! மிக்க நேரம் உன்னையே உற்று நோக்கி நிற்க எனது அங்கத்தில் வலிமையுண்டு. ஆனால் எனது சுகுமார பிராண சஞ்சீவினி உனது ராக்ஷஸ ஸ்வரூபத்திற்கு முன் எவ்வண்ணம் நிற்கக்கூடும்? அக்கினியின் ஜ்வாலைக் கெதிரில் தேனீக்கள் விழுந்திறப்பதுபோல் உனது ஜ்வாலையால் நீ எனது பஞ்சப்பிராணனையும் பஸ்மமாக்கக் கருதி நிற்கும்போழ்து நான்தான் யாது செய்ய வல்லேன்? ஆனால் இப்பிராணனெனக்கெம்மாத்திரம்? எனது பிராணன் என் பிரிய பத்தினியே! அவளையும் அவளது கர்ப்பத்திலிருக்கும் சிசுவையும் நினைத்தே சிந்திக்கின்றேன். நான் தனித்திருக்கும்பக்ஷத்தில், ஏ, வனராக்ஷஸி! உனக்கு எனது வல்லமையை முன்னாலேயே காட்டியிருப்பேன்."

இவனது மனம் இவ்விசாரங்களுக்கதிக நேரம் உட்பட்டிருக்கவில்லை. வெப்பத்தால் தாகம் மதிகரித்துக்கொண்டே வர மிகவுங் களைத்து அதைரியமடைந்தான். இதுவரை தைரியத்துடனிருந்தானாயினும், விசாரங்கள் ஒன்றின்பின்னொன்றாக அதிகரிக்கவே, நிராசையுற்று, "ஈச்வரா! ரக்ஷி! ரக்ஷி! இனிமேல் என்னாற் கொஞ்சமேனுஞ் சகிக்கமுடியாது. இன்னும் எவ்வித கஷ்டங்களுக்கெங்களை உள்ளாக்கப் போகின்றாய்? சர்வ கஷ்டங்களையும் எங்கள் மேல் ஒரே சமயத்தில் வர்ஷித்து எங்களுக்கு உடனே மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடாதா?" என்றனன்.

தனது பிராணபதியின் வாயினின்றும் வெளிவந்த வார்த்தைகளைக் கேட்ட மாத்திரத்தில் அத்தருணி குதிரையை உடனே நிறுத்தி அவனை நோக்க, பயம், நிராசை முதலிய சின்னங்கள் இவனது முகத்திற் தோன்றக் கண்டனள். தனது பர்த்தா இவ்வண்ணம் பீதியடைந்ததை இதுவரை இவள் கண்டதில்லையாகையால், மிக்க ஆச்சரியத்திலாழ்ந்தனள். இதற்குள் அவ்வாலிபனுக்குத் தன் மனைவியின் ஞாபகம் வர, உடனே அவளை நோக்கிப், "பிரியே! பயப்படக் காரணமில்லை. நடந்த சங்கதிகளைப்பற்றி ஈச்வரனை ஸ்மரிக்கின்றேன்" என்று அவளைத் தைரியப்படுத்த, அத்தருணி, "பிராணேசா! கடந்த சங்கதிகளை நினைத்து வருந்துவதிற் பலன் யாது? எச்சங்கதி மனதிற்கு மிக்கக் கஷ்டத்தைக் கொடுக்கின்றதோ அதை அடியோடு மறப்பதுமேலல்லவா?" எனப்பகர்ந்து தன் பதியைச் சமாதானப்படுத்தினாள். ஆனால் உடனே அவளது மனதில் தனக்கு நேரிட்டிருக்கும் ஆபத்துகள் ஒன்றன்பின்னொன்றாகத் தோன்றவே விதியை நொந்து கொண்டாள்.

(தொடரும்.)

# நாயகத் திருமொழிகள்.

ஜனாப் வ. மி. ஷம்சுதீன் ஸாகிப்.

(உரிமை ஆசிரியருக்கு).

"சிந்தாமணியின் வாசகர்களுக்காக திருநபி சரித்திரத்திலிருந்து சில முக்கியமான விஷயங்களை இங்கு எழுதப்பட்டிருக்கிறது."

தன்னுடைய தகப்பனையும், மகனையும் மற்றும் எல்லா ஜனங்களையும் விட என்னை (நபி பெருமானவர்களை) அதிகமாக நேசிக்கும்வரை உங்களில் எவனும் விசுவாசம் கொண்டவனாகமாட்டான்.

உங்களுடைய தோற்றங்களையும் உங்களுடைய உடைமைகளையும் ஆண்டவன் கவனிக்கமாட்டான். ஆனால் உங்களுடைய இரு

தயங்களையும், உங்களுடைய செய்கைகளையுமே அவன் கவனிக்கிறான்.

ஒருவருக்கொருவர்பகைமைகொள்ளாதீர்கள். பொறாமை கொள்ளாதீர்கள். ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துவதை விடாதீர்கள். (அல்லாவுடைய) கடவுளுடைய அடியார்களே! ஒருவருக்கொருவர் சகோதரர்களாகயிருங்கள். மூன்று இரவுகளுக்கதிகமாக தன் சகோதரனை (முஸ்லீமை) வெறுத்திருப்பது ஒரு முஸ்லீமுக்கு அனுமதிக்கப்பட்டதல்ல.

உங்களில் இறந்து போனவர்களிடமிருந்த நல்விஷயங்களை மட்டும் பிரஸ்தாபியுங்கள். அவர்களிடமிருந்த கெடுதிகளைப்பற்றி பிரஸ்தாபிக்காதீர்கள்.

சிநேகிதனிடம் நிதானமாகப் பிரியம்வையுங்கள், ஏனெனில் அச்சிநேகிதன் ஒருவேளை உங்களின் பகைவனாகவும் ஆகலாம். இன்னும் பகைவனிடம் நிதானமாக விரோதங் கொள்ளுங்கள், ஏனெனில் ஒருவேளை அவன் உங்கள் சிநேகிதனாக ஆகவும் கூடும்.

மனிதர்களில் மிகப்பலமுள்ளவனாகவேண்டுமென்று விருப்பமுள்ளவன் ஆண்டவன்மீது முழு நம்பிக்கை வைக்கட்டும்.

கல்வியைத் தேடுவதற்காக எவன் வெளியில் புறப்பட்டானோ அவன் திரும்பிவரும் வரையிலும் ஆண்டவனுடைய பாதையிற் செல்கின்றவனாகின்றான்.

ஆண்டவனைப்பற்றியல்லாமல் அதிகம்பேசாதீர்கள். ஏனெனில், ஆண்டவனைப்பற்றி யல்லாமல் அதிகம் பேசுவது இருதயத்தைக் கடினமாக்கும். கடினமான இருதயத்தை உடையவன் ஆண்டவனிடமிருந்து அதிக தூரமுள்ளவனாக யிருப்பான்.

ஒருவனுக்குப் பின்ளை பிறந்தால் அப்பிள்ளைக்கு நல்ல பெயரை இடட்டும். அவனுக்கு நல்லொழுக்கத்தை போதிக்கட்டும். பருவம் வந்தபோது அவனுக்கு விவாகத்தை நடத்தி வைக்கட்டும். வயதுவந்தபின் அவனுக்கு விவாகம் செய்யாத காரணத்தினால் அப்பிள்ளை ஏதாவது பாவத்தை செய்வானானால், அப்பாவம் அவனுடைய தகப்பன்மீது ஏற்படும்.

ஆண்டவனுக்கு இணைவைப்பதும்,தாய் தகப்பனுக்குக் கீழ்படியாமலிருப்பதும், உயிர்களைக் கொல்வதும், பொய் சத்தியம் செய்வதும் பெரும் பாவங்களாகும்.

உங்களில் கெட்ட செய்கையை யாராவது பார்த்தால் அக்கெட்ட செய்கையை தன் கையினால் மாற்றட்டும். அப்படிச் செய்ய சக்தி இல்லாது போனால் தன்னுடைய நாவினலாவது செய்யட்டும். அதற்கும் சக்தி போதாது போனால் மனதினலாவது செய்யட்டும். அச் செய்கை கெட்டதென்று மனதில் வெறுக்கட்டும்.

ஒருவர் நபி பெருமானவர்களிடம் வந்து தாம் மதத்தை காப்பாற்றுவதற்காக யுத்தம் செய்ய வேண்டுமென்று நாடுவதாகவும், அதைப்பற்றி பெருமானவர்களின் அபிப்பிராயம் கேட்க வந்திருப்பதாகவும் சொன்னார். அப்போது பெருமானவர்கள் அவரை நோக்கி "உமக்குத் தாயிருக்கிறார்களா?" என்று வினவ அவர் "ஆம்" என்றார். "அவளுக்கு ஊழியஞ் செய்யும். ஏனெனில் அவளுடையபாதங்களின் கீழ் சுவர்க்க மிருக்கின்றது" என்று எமது பெருமானவர்கள் சொன்னார்கள்.

பிதாவினுடைய பொருத்தத்திலே ஆண்டவனுடைய பொருத்தமும், பிதாவினுடைய கோபத்திலேயே ஆண்டவனுடைய கோபமும் இருக்கிறது.

" உங்களில் யாரை நீங்கள் பலசாலியாகக் கருதுகின்றீர்கள் " என்று ஒரு சமயம் நபி பெருமானவர்கள் கேட்க, "மனிதரால் தோற்கடிக்கப் படமுடியாதவனை" என்று அவர்களின் சிஷ்யர்கள் பதில் சொன்னார்கள். அப்போது நபி பெருமானவர்கள் "அப்படியல்ல. கோபம் உண்டான சமயத்தில் தன்னை அடக்கிகொள்கிறானே அவனேதான்" என்று சொன்னார்கள்.

துன்பம் எவ்வளவு பெரிதாக யிருக்குமோ அவ்வளவிற்குக் கூலியும் பெரிதாகயிருக்கும்.

ஆண்டவன் எந்த கூட்டத்தாரின் மீது பிரியம் வைக்கிறானோ அக்கூட்டத்தாரைத் துன்பத்தில் போடுகின்றான். அவர்களில் எவன் அதற்கு பொருந்திக் கொள்வானோ ஆண்டவனும் அவனைப் பொருத்திக் கொள்வான். எவன் அதை வெறுப்பானோ அவனை ஆண்டவன் வெறுப்பான்.

(தொடரும்.)



# மார்க்கோ போலோவின் யாத்திரைகள்.

ஸ்ரீமான். T. R. அனந்த நாராயண அய்யர்.

(622-ம் பக்கத் தொடர்ச்சி.)

## பத்தாம் அத்தியாயம்.

அஸ்ஸாஸின்களது சரித்திரம்— லபுர்கான்— படாக் — தைகன் — ஸியஸ்ஸம்—படக்ஷான் பாஷிபா—காஷ்மீரம்— வகான்— பாமர்—பாலோ—காஷ்கர்.

ஸிரேஸர் பாஷையில் 'அலாமத்' என்றால் மதத்துவேஷிகளது இடமென்று பெயர் இவ்விடத்திலுள்ள ஜனங்களுக்கும் அலாமதிசிகளென்றுபெயர். அலாமதிசிகளென்றால் மதத்துவேஷிகளென்று அர்த்தம். (நமது மத விரோதிகளை நாம் பாடரீன்ஸ் என்று சொல்வதுபோல.)

இங்கு அந்த தேசத்தைப்பற்றிப் பிரஸ்தாபிக்கிறபடியால், 'மலைக்கிழவன்' என்னும் அன்னாட்டு அரசனைப்பற்றிச் சொல்லுகிறேன், கேளுங்கள். அவனைப்பற்றி வெகுபேர்கள் என்னிடம் பேசி யிருக்கின்றனர். அவனது பெயர் அலாவுடீன். அவன் மஹமதியன். அவன் மிகவுயர்ந்தனவும் சாமான்ய மனிதர்களுக்கு எட்டாதனவுமான இரண்டு மலைகளின் மத்தியிலுள்ள ஒரு ரமணீயமான பள்ளத்தாக்கில் தனக்குக் கிடைத்த சிறந்த புஷ்பச் செடிகளையும், பழவிருக்ஷங்களையும் பயிராக்கி மெருகு தீட்டிய அறைகளும் சித்திரப் படங்களும் பட்டுப் படுதாக்களுங் கொண்ட ஒரு சிங்கார வனத்தை நிர்மிக்கச் செய்தான். இவ்வனத்தின் வழியே, இங்கு நிர்மிக்கப்பட்ட பல அரண்மனைகளுக்கும் சாறாயமும், பாலும், தேனும், நல்ல தண்ணீரும் குழாய்களின் மூலமாகப் போகின்றன. இங்கு அவன் வாய்ப்பாட்டிலும், வாத்தியங்களை வாசிப்பதிலும், நாட்டியத்திலும் தேர்ந்த அழகு நிறைந்த கன்னிகைகள் அனேகரைச் சேர்த்து வைத்திருந்தான். அவர்களுக்கு அங்கு வரும் மனிதருடன் அவரது மனம்போனபடிக் கூடிக் களித்து அவர்களுக்கு இன்பம் புகட்டவேண்டியதே தொழில். இவர்கள் விலையுயர்ந்த பொன்னாபரணங்களும் பட்டாடைகளுந் தரித்துக் கொண்டு, இவ்வுத்தியான வனத்திலும், அரண்மனைகளிலும் சதா உல்லாசமாகக் காலங் கழித்து வந்தனர்.

இவன் இவ்வனத்தை நிருமித்ததற்குக்காரணமென்னவெனில், மஹமது நபி தமது சிஷ்யருக்கு இவ்விதமான சிற்றின்பந்தரும் சுவர்க்க லோகம் கிடைக்குமென்று சொல்லியிருந்தாராம். இவ்வனத்துள் புறமனிதன் ஒருவனும்

போக முடியாது. பள்ளத்தாக்கின் வாயிலில் ஒரு பலமான கோட்டை யிருந்ததுமன்றி அதற்கு உள்ளே போகும் வழியும் இரகஸியமானதாக விருந்தது. அலாவுடீன் இவ்விடத்தில் தைரியமும் துணிவுமுள்ள பனிரண்டு முதல் இருபதுவரை வயதுள்ள சில சிறுவர்களைக் கூட்டி தினந்தோறும் அவர்களுக்கு மஹமதுவின் சுவர்க்கத்தில் மனிதர் அனுபவிக்கக்கூடிய சுகங்களையும், அந்த சுவர்க்கத்திற்குத் தான் அவர்களைக் கூட்டிச் செல்லும் வழியையும் போதித்து வந்தான்.

இச்சீடர்கள் பக்குவ மடைந்தனரென்று தனக்குத் தெரிந்தபொழுது அவன் அவர்களில் பத்துப் பன்னிரண்டு பெயர்களுக்கு ஒருவித கஷாயம் கொடுப்பித்துத் தூக்கத்தை யுண்டாக்கிச் செத்தவர்களைப்போல் மயக்கி, மேற்கூறிய அரண்மனைகளிலுள்ள எண்ணிறந்த அறைகளுள் அவர்களைத் தூக்கிச் செல்லுமாறு ஏற்பாடு செய்வான். அங்கு சீடர்கள் மேற்குறித்த அற்புதக் காக்ஷிகளைக் கண்ணுறுவர். மயக்கந் தெளிந்து எழுந்தவுடன் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஸ்திரீ விதம் விதமான ருசியான தின்பண்டங்களும் சிறந்த சாறுபங்களும், வேறு விதமான சுகங்களையுந் தந்து, பணிவிடை செய்வாள். இவைகளை யனுபவித்த அம்மூடர்கள் "இதுவே சுவர்க்கம்" என்று நினைத்தனர்.

இச்சுகங்களை நாலைந்து நாள் அனுபவித்தபின் அவர்கள் முன்போலவே மறுபடியும் மயக்கி வெளியேற்றப்பட்டனர். பின்பு அலாவுடீன் அவர்களைத் தன்னெதிரில் வரவழைத்து "எங்கு போயிருந்தீர்கள்?" என்று வினவுவான் அவர்கள், "தங்கள் சித்தப்படி சுவர்க்கம் போயிருந்தோம்" என்று சொல்லி அங்குக் கூடியிருந்தோரெல்லாங் கேட்கும்படி மேலேவிவரித்த சங்கதிகளைச் சொல்வார்கள்.

அப்பால் இந்த மலைக்கிழவன், "இதுதான் நமது ரிஷியின் கட்டளை. எவனொருவன் தனது எஜமானனைக் காப்பாற்றுகிறானோ அவன் சுவர்க்கம் சேருகிறான். ஆதலால் நீங்கள் எனக்குக் கீழ்ப்படிந்து நடந்தால், உங்களுக்கு இந்த பாக்கியம் கிடைக்கும்" என்பான். இவ்வாறு குதூகலிக்கப்பட்ட ஒவ்வொருவனும், "இக்கிழவனது ஆக்ஞை எந்த பாக்கியவானுக்குக் கிடைக்குமோ? இவனது ஆணையை நிறைவேற்றப் பிராணனையுங் கொடுக்கலாமே!" என்று அவனது ஆணையை ஆவலுடன் எதிர்பார்த்திருப்பான். இவ்வாறு எந்த ஆபத்துகளுக்கும் அஞ்சாமலும் தம் முயிரை பொருட்டாக நினையாமலுமிருக்கப் பயிற்றுவிக்கப்பட்ட இக்கொடியர்களால் அந்நாட்டிலுள்ள வேறு பிரபுக்களும் கொல்லப்பட்டனர்.

இக்காரணங்களால் இக்கொடியோனது பெயரைக் கேட்டமாத்திரத்திலேயே இத்தேசத்தவரெல்லாம் பயந்து நடுநடுங்குவர். இவனுக்கு இரண்டு ஸ்தானாதிபதிகளுமுண்டு. அவர்களிலொருவன் டாமஸ்கஸ்ஸிலும் மற்றவன் குருடிஸ்தானத்திலுமிருந்து இவனைப்போலவே அந்நாடுகளிலுள்ள சிறுவர்களைப் பழக்கி வந்தனர்.

இந்த அலாவுடீன் தனது இருப்பிடத்தின் வழியே செல்வோரையெல்லாம் கொள்ளையடித்தும் வந்தான். இப்படி யிருக்கையில், கி.பி. 1262-ல் உலான்கான் தனது ஆட்களை யனுப்பி இவனது கோட்டையை முற்றுகை போட்டான். கோட்டைக்குள்ளிருந்தவர்கள் இலகுவில் இணங்கவில்லை. மூன்று வருஷகாலம் எதிர்த்து நின்று, உணவு குறைந்த பின்னரே பணிந்தனர். அப்பொழுது உலானது சேவகர்கள் இம்மலைக் கிழவனைப் பிடித்துக் கொன்று அவனது நந்தவனத்தையும் வேரோடு அழித்துவிட்டனர்.



மேற்குறித்த பிரதேசத்திற்கப்பால் மிகவும் ரம்மியமானதும், மலைகளும் மைதானங்களும் பசும் புற்றரைகளுமுள்ளதும், பழவகைகள் விசேஷமாக விளைவதுமான மிகச்செழிப்பான பிரதேசம் ஒன்றுளது. இதைக் கடக்க ஆறு நாட் செல்லும்.

அதற்கப்பால் தண்ணீரில்லாத ஒரு பாலைவனமுண்டு. அது 40 அல்லது 50 மைல் தூரமுள்ளது.

இதற்கப்பால் ஸபுர்கான் என்ற பட்டணம் இருக்கிறது. இப்பட்டணத்தில் எல்லாச் சரக்குகளும் ஏராளமாகக் கிடைக்கின்றன. இங்குண்டாகும் சக்கரைக் கும்மட்டிக் காய்கள் தேனைப்போல்ருசியானவை. அவைகள் உலகத்திலேயே சிறந்தவை.

ஸபுர்கானை விட்டுப் புறப்பட்டு படாக் நகரம் வந்து சேர்ந்தோம். அது முற்காலத்தில் சலவைக் கல்லாற் கட்டப்பட்ட அரண்மனைகள் நிறைந்த பிரசித்தமான பெரிய பட்டணமாக விருந்தது; அதைத் தார்த்தார்கள் அழித்துப் பாழாக்கிவிட்டனர். இவ்வூரில் அலெக்ஸாண்டர் டேரயஸ்ராஜாவின் மகளைக் கலியாணம் செய்து கொண்டதாகச் சொல்லுகின்றனர். இவ்வூருக்குக் கிழக்கிலும் வடகிழக்கிலும் பாரஸீக ராஜ்யமே எல்லையாயிருக்கிறது; திருடர்களது தொந்தாவிற்குப் பயந்து அந்நாட்டார் மலைகளுக்கு ஓடிப் பத்திரமான இடங்களில் ஒளிந்துகொள்ளுகின்றனர்; ஆதலால் இரண்டு நாட் பயணம் முடியும்வரை அங்கு ஒரு வீடுகூடக் காணப்படுவதில்லை. இங்கு அநேகம் நதிகளும் வேட்டை மிருகங்களும் உண்டு; சிங்கங்களுங்கூடக் காணப்படுகின்றன. இங்கு தின்பண்டங்கள் ஒன்றும் கிடைப்பதில்லை யாதலால் யாத்திரிகர்கள் இரண்டு நாட்களுக்கு வேண்டிய சாமான்களைக் கொண்டு செல்வது வழக்கம்.

இரண்டு நாட் பிரயாணம் செய்தபின் நாங்கள் தைகன் என்ற கோட்டையை வந்தடைந்தோம். அங்குள்ள கண்ணுக்கினிய வயல்களில் தானியங்கள் ஏராளமாக விளைகின்றன. அதன் தென் பாகத்தில் உயர்ந்த மலைகள் இருக்கின்றன. அவைகளிற் சிலவற்றில் வெளுத்த கெட்டியுப்பு விளைகின்றது; அவ்வுப்பு உலகத்திலேயே சிறந்தது; மிகக் கெட்டியானது. இருப்பாயுதங்களால் மாத்திரமே பெயர்க்கக் கூடியது; உலகோர் எல்லோருக்கும் வேண்டியதளவும் விளைகின்றது; ஆதலால் முப்பது நாட் பிரயாணத்திலுள்ள ஜனங்களுங்கூட அங்கு வந்து அந்த உப்பைக் கொண்டு போகின்றனர். மீந்த மலைகளிற் பலவிதமான வாதுமைகள் விளைகின்றன.

இதற்குக் கிழக்கிலும் வடகிழக்கிலும் ஒரு [illegible]ப்பான தேசமிருக்கிறது. அந்நாட்டில் கொலைபாதகர்களும், விசுவாசமில்லாத மகமதியர்களும், குடிகாரர்களுமே மிகுந்திருக்கின்றனர். அவர்கள் சாறுயத்தைக் காய்ச்சிக் குடிப்பார்கள். அது அதிக ருசியா யிருக்கின்றது. அவர்கள் தலையில் வஸ்திரம் கட்டிக்கொள்வதில்லை. புருஷர்கள் மாத்திரம் பத்துச்சாண் கயிற்றைத் தலையில் சுற்றிக்கொள்ளுகின்றனர். அவர்கள் துஷ்ட மிருகங்களின் தோல்களைக் கொண்டு அரைச்சல்லடங்களும் ஜோடுகளுஞ் செய்துகொள்ளுகின்றனர். வேறு எவ்விதமான உடையும் அவர்கள் தரிப்பதில்லை.

அங்கு விட்டு மூன்று நாட்பயணத்திற்கப்பால், ஸியல்லம் என்னும் பட்டணம் இருக்கிறது. அது ஒரு மைதானத்திலுள்ளது. சுற்றிலுமுள்ள மலைகளில் அநேகம் கோட்டைகளுண்டு. அவற்றின் மத்தியில் ஒரு பெரிய நதியும் ஓடுகின்றது. இங்கு முட்பன்றிகள் விசேஷம். அவற்றை இந்நாட்டார் நாய்களைக்

கொண்டு வேட்டையாடுகின்றனர். அப்போது அம்முட்பன்றிகள் தங்களது உடல்களைக் குறுக்கிக்கொண்டு அதிகக் கோபத்துடன் தங்களது முள்ளிறகுகளை மனிதர்களின்மேலும் நாய்களின்மேலு மெறிந்து அவர்களைக் காயப்படுத்துகின்றன.

இன்னாட்டார் ஒரு தனிபாஷையை வழங்குகின்றனர்.

இங்குள்ள இடையர்கள் குகைகளையே இருப்பிடங்களாகக் கொண்டு மலைகளில் வசித்து வருகின்றனர்.

இங்கிருந்து மூன்றுநாட் பிரயாணத்திற்கப்பால் படக்ஷான் தேசம் இருக்கிறது. அத்தேசம் போகும் வழியில் ஒரு நரப்பிராணியும் நடமாடுவதில்லை. படக்ஷானிலுள்ளவரெல்லாம் மகமதியர்கள். அவர்களது பாஷையும் வேறு. அவர்களது அரசர்கள் தந்தைக்குப்பின் மகனாகப் பட்டத்திற்கு வருவது வழக்கம். அவர்கள் மகா அலெக்ஸாண்டருக்கும் டேரயஸ் அரசனது குமாரத்திக்கு முண்டான சந்ததியார்களாம். ஆனதுபற்றி அவர்களுக்கு டல்கார்லான் அல்லது அலெக்ஸாண்டிரியரென்று பெயர். இங்கு பல்லாஸ்ஸாவும், மற்ற விலையுயர்ந்த வேறு இரத்தினங்களும் அகப்படுகின்றன. அவைகளை ஒருவரும் அரசனது உத்திரவும் சம்மதமுமின்றித் தோண்டியெடுக்கவாவது, அன்னாட்டைவிட்டு வெளியே கொண்டுபோகவாவது கூடாது. அப்படிச்செய்தால் அவர்கள் மரணதண்டனையடைவார்கள். இவ்விரத்தினங்கள் அனைத்தும் அரசனுக்கே சொந்தமானவை. அவன் இவற்றைத் தன் இஷ்டப்படித் தனக்கு வேண்டியவர்களுக்கு வெகுமதியாகவோ, அல்லது கப்பமாகவோ அனுப்புவான். மிதமிஞ்சிக் கிடைக்கும் இக்கற்கள் அதிகமாக குவிந்துவிட்டால் இவற்றின் விலை குறைந்துபோமென்று கருதி, அரசன் மிகுதியானவற்றை விலைக்கு விற்றுவிடுகிறான். இம்மகாணத்திலுள்ள வேறு மலைகளில் வைடூர்யங்கள் கிடைக்கின்றன. இந்த நீலங்களுக்கு சமானமான நீலங்கள் உலகத்தில் வேறெங்கும் உண்டாவதில்லை. இச்சுரங்கங்களில் வெள்ளி, பித்தளை, ஈயம் ஆகிய மற்றய உலோகங்களும் கிடைக்கின்றன.

இன்னாடு மிகக் குளிர்சியுள்ளது. இங்கு குதிரைகள் கணக்கில்லாம லிருக்கின்றன. அவை அழகும், பருமனும், பலமும், வேகமுமுடையவை. அவற்றின் குளம்புகள் வெகு கெட்டியாகவும் உறுதியாகவு மிருப்பதினால் அவை கற்பாறைகளின்மேல் ஓடினாலும் அவற்றிற்கு லாடம் கட்டவேண்டிய அவசியமேயில்லை. இன்னாட்டு அரசனது சிற்றப்பனிடத்தில் அலெக்ஸாண்டருடைய பூஸிபாலஸ் ஜாதியைச் சேர்ந்த குதிரைகள் இருந்தனவென்றும் அவற்றின் நெற்றியில் பூஸிபாலஸ் சுழியிருந்ததென்றும், அவற்றில் சிலவற்றைத் தனக்குக் கொடுக்க மறுத்த பொழுது அரசன் அவனைக் கொன்றுவிட்டதாகவும், அதைக்கேட்ட அவனது மனைவி அக்குதிரைகளின் வர்க்கத்தையே யழித்துத் தன்பழி தீர்த்துக்கொண்டனளென்றும் இன்னாட்டார் சொல்லிக்கொள்ளுகின்றனர். இந்த சம்பவம் சமீபத்தில் நிகழ்ந்ததாகத் தெரிகிறது.

இங்கு நேர்த்தியான இராஜாளிகளுண்டு. இன்னாட்டு வயல்களில் கோதுமையும், உமியில்லாத வாற்கோதுமையும் விளைகிறது. இங்கு நிலக்கடலையையும் சணல் விதைபோன்றிருக்கும் கடுகையும் ஆட்டி எண்ணெயெடுக்கிறார்கள். அது வேறு எண்ணெய்களை விட அதிக ருசியாகவிருக்கிறது.

இங்கு ஒடுக்கமான கணவாய்களும் நடக்கக் கஷ்டமான இடங்களுமுண்டு.

இன்னாட்டு மனிதர்கள் வில்வித்தையிலும் வேட்டையிலும் தேர்ந்தவர்கள். இவர்களது ஆடைகளெல்லாம் மிருகங்களின் தோல்களே.



இங்குள்ள குன்றுகள் செங்குத்தாக உயர்ந்தவை; மைதானங்கள் விசாலமானவை; நதிகள் வெகு அழகுடையன.

தங்களுக்கு முறைக்காய்ச்சல் வந்தால் இன்னாட்டார் இரண்டு மூன்று நாள் மலைவாஸம் செய்வார்கள் ; காய்ச்சலும் நின்றுபோய்விடும். (இதன் உண்மையை ஒருவருஷம் வியாதியினால் பீடிக்கப்பட்ட மார்க்கோவே தன் அனுபவத்தில் அறிந்தார்.)

இந்த தேசத்து ஸ்திரீகள் அறுபது அல்லது எண்பது கஜம் நீளமுள்ள துணிகளை ஆடைகளாக அணிகின்றனர். பெருத்த உருவமே பெண்டிற்கழகென்பது இன்னாட்டாரின் அபிப்பிராயம்.

படக்ஷான் நாட்டுக்குத் தெற்கே பத்துநாட் பயணத்தில் பாஷியா மாகாணமிருக்கிறது.

அப்பிரதேசம் அதியுஷ்ணமாக விருப்பதினால் அங்குள்ள ஜனங்கள் கபில நிறமுள்ளவர்களா யிருக்கின்றனர். அவர்களது பாஷையும் வேறு. அவர்கள் முத்தும் இரத்தினமும் பதித்த பொன் வெள்ளியாபரணங்களைத் தங்களது காதுகளில் அணிந்து கொள்ளுகின்றனர். மீனும் அரிசியுமே அவர்களது உணவு. அவர்கள் விக்கிரகாராதனைக்காரர்கள். மோசமும் குரூரமுமுள்ளவர்கள்.

பாஷியாவிலிருந்து ஏழுநாட் பயணத்தில் காஷ்மீர தேசமிருக்கின்றது. அத்தேசத்தாரது பாஷையும் வேறு. அவர்களும் விக்கிரகங்களை விசேஷமாக ஆராதிப்பவர்கள்தான். தவிர, அவர்கள் மகா மாயக்காரர்கள். அவர்கள் தங்களது விக்கிரகங்களைத் தங்களுடன் பேசவைக்கவும், மத்தியானத்தில் அஸ்தமிக்கச் செய்யவும் வல்லவர்கள். இத்தேசத்திலிருந்து இந்து ஸமுத்திரத்திற்குப் போகலாம். இத்தேசத்தில் உஷ்ணம் கொஞ்சம் குறைவாயிருப்பதினால் இங்குள்ள புருஷரும் ஸ்திரீகளும் அட்டக்கரியா யில்லாமல் கபில வர்ணமுடையவரா யிருக்கின்றனர். இவர்கள் மாமிசமும் அரிசியுமே புசித்துவந்தாலும் மிகவும் மெலிந்திருக்கின்றனர். இத்தேசத்தில் அனேக நகரங்களும் பட்டணங்களு மிருக்கின்றன. இத்தேசத்தரசன் வேறொருவருக்கும் கீழ்ப்படிந்தவனல்லன்.

இத்தேசத்தில் மதுமாமிசங்களை விலக்கி, பிரமசரிய விரதமே யனுஷ்டித்துக்கொண்டும் அதிபக்தியுடன் தெய்வங்களைக் கொண்டாடிக் கொண்டும், தங்களது விக்கிரகங்களுக்கு கோபம் வாராமல் வெகு ஜாக்கிரதையுடன் நடந்துகொண்டும், ஆச்சிரமங்களிலும் குகைகளிலும் அவ்விக்கிரகங்களை ஆராதித்துக் கொண்டும், வெகுநாள் ஜீவித்துவரும் துறவிகள் சிலரிருக்கின்றனர். இவர்களிலனேகர் மகான்களென்று கருதப்படுவார். அவர்களுக்கு இன்னாட்டிலுள்ளோர் உயர்ந்த மரியாதைகள் செய்கின்றனர். இன்னாட்டார் ஜீவஹிம்சை செய்வதேயில்லை. ஆதலால் இங்கு இரத்த வெள்ளமே கிடையாது.

மாமிசபோஜனம் பண்ணவேண்டுமென்று நினைத்தால் அதற்காக இன்னாட்டார் ஸரேஸர்கள் மூலமாக மிருகங்களைக் கொல்விப்பார்கள்.

பவழத்திற்கு இன்னாட்டிலுள்ள விலை வேறெங்குமில்லை.

இனி இந்தியாவுக்குச் செல்லும் வழியை விட்டுவிட்டு பலக்ஷியம் (படக்ஷான்) நாட்டுக்குத்திரும்பிக் கிழக்கு வடகிழக்குத்திசைகளை நோக்கி "கத்தே"க்குச் செல்வோம்.

பலக்ஷியத்திற்கப்பால் ஒரு நதியிருக்கிறது. அதன் கரையில் அன்னாட்டரசனது தம்பிக்குச்சொந்தமான அனேகம் கோட்டைகளும் கிராமங்களு மிருக்கின்றன. அதற்கு மூன்றுநாட் பிரயாணத்திற்கப்பால் வகான் தேசமிருக்கிறது. அன்னாட்டின் ஓரெல்லையிலிருந்து

மற்றுரொல்லைக்குத் தென் வடலாகவாவது கீழ் மேலாகவாவது போக வேண்டுமென்றால் மூன்றுநாட் செல்லும். இன்னாட்டார் தங்களுக்கே சொந்தமான ஒரு பாஷையைப் பேசுகின்றனர். இவர்கள் மகமதுவை வணங்குகின்றவர். இங்கு துஷ்ட மிருகங்கள் விசேஷமாக இருப்பதினால் இன்னாட்டார் மிகத் தைரியமுள்ள வீரர்களாகவும் தேர்ந்த வேடர்களாகவுமிருக்கின்றனர்.

இங்குவிட்டுப் புறப்பட்டு வடகிழக்கு நோக்கி மூன்றுநாள் மேட்டின்மேலேயே ஏறிச் சென்றால் ஒரு மிகவுயர்ந்த மலை வந்து சேரலாம். அதைவிட உயர்ந்தமலை உலகத்திலேயே யில்லை யென்று சொல்லுவார்கள். அங்குள்ள இரண்டு குன்றுகளினிடையில் ஒரு பெரிய ஏரியும் மைதானத்தை யூடுருவிச் செல்லும் மிக நேர்த்தியான ஒரு நதியுமுண்டு. இந்நதிக்கரையில் சிறந்த மேய்வு அகப்படுவதினால் இளைத்த குதிரையாவது எருதாவது ஒன்று இங்கு மேய்ந்தால் அது பத்துநாளில் கொழுத்துப் பெருத்துவிடும். அங்கு ஏராளமான துஷ்டமிருகங்களுமுண்டு. அவற்றில் விசேஷமானவை மிகப்பெருத்த காட்டாடுகள், அவைகளின் கொம்புகள் ஓரோர் சமயம் ஆறுசாண் நீளம் வளருகின்றன. அக்கொம்புகளைக் கொண்டு இன்னாட்டார் பலவிதமான பாத்திரங்கள் செய்கின்றனர். இங்குள்ள மைதானம் பன்னிரண்டு நாட் பயணமுள்ளது. அதற்குப் பாமர் என்று பெயர். அங்கு ஜன சஞ்சாரமே கிடையாது. ஆதலால் வழிப்போக்கர்கள் தங்களுக்கு வேண்டிய போஜன பதார்த்தங்களைத் தாமே கொண்டு செல்லவேண்டும். இத்தேசம் அதிகக் குளிர்ச்சியுள்ளதாதலின் இங்கு ஒரு பறவை கூடக் கிடையாது. தவிற இங்கு நெருப்பு மூட்டினால் மற்ற விடங்களில் போலில்லாமல் பிரகாசம் குறைந்தும், காய்கறிகளைப் பக்குவஞ்செய்ய முடியாத தணிந்த சூடுள்ளதாகவும் இருப்பதாகச் சொல்லுகின்றனர்.

இங்கிருந்து கிழக்கு வடகிழக்காக நாற்பது நாட் பிரயாணஞ் செய்து, மனித சஞ்சாரமும் மாநிழலுமில்லாத அனேகம் மலைகளையும் குன்றுகளையும் பள்ளத்தாக்குகளையும் அவற்றினூடேயோடும் பல நதிகளையுந் தாண்டிச் சென்றால் பாலோ வென்னும் தேசம் தென்படும். அங்குள்ள உயர்ந்த மலைகளின் சிகரங்களிற் சில குடிசைகளும் சாலைகளுமே யிருக்கின்றன. அவைகளில் வசிக்கும் குடிகள் சிறிதும் நாகரிகமில்லாத கொடியர்கள்; விக்கிரகங்களை வணங்குபவர்கள். இவர்களுக்கு வேட்டையாடுவதே தொழில். இவர்கள் கொல்லும் மிருகங்களின் தோல்களே இவர்களுக்கு உடைகளாகின்றன.

இதற்கப்பால் காஷ்கர் சீமையிருக்கிறது. அது சீனமகாராஜனுக்குக் கீழ்பட்டது. அன்னாட்டு ஜனங்கள் மகமதியர்கள். அங்கு திராக்ஷைக் கொடிகளும், உத்தியான வனங்களும், பழந்தரு மரங்களும் இருக்கின்றன. பூமி வளமுள்ளதினால் பருத்தி, சணல், கஞ்சா முதலியவை உண்டாகின்றன. இன்னாட்டார் தங்களுக்குச் சொந்தமான ஒரு பாஷையைப் பேசுகின்றனர். இவர்களுக்கு வியாபாரமும் கைத்தொழிலுமே ஜீவனம். இவர்கள் பேராசை பிடித்தவர்களாதலினால் விலக்கப்பட்ட பதார்த்தங்களையும், மிகக் கேவலமான பானங்களையு முட்கொள்ளுகின்றனர். இங்கு நெஸ்டோரியக் கிறிஸ்தவர்கள் சிலரிருக்கின்றார்கள். அவர்களது கோவில்களும் இங்குண்டு. இத்தேசம் ஐந்துநாட் பயண விஸ்தீரண முள்ளது.

(தொடரும்.)

# செலிமாபேகம் அல்லது மொகல் மன்னரின் அந்தப்புரம்.

(650-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஸ்ரீமதி பாகீரதியம்மாள்.



## ஆருவது அத்தியாயம்.

அந்தப்புரமெங்கும் செலிமாவைக் குறித்தே எல்லோரும் பேசிக்கொண்டிருந்தார்கள். சிலர் துக்கித்தனர்; சிலர் சந்தோஷங்கொண்டு சிரித்தனர்; மற்றும் பலர் ரங்கமஹாலில் முன்னம் இம்மாதிரி நடந்துள்ள பூர்வ சரித்திரங்களைப் பற்றிப் பேசத் தொடங்கினார்கள்.

மும்தாஸ் பேகம் வழக்கப்படித் துக்கமே குடிகொண்டிருந்தவதனத்துடன் தனது அறையில் ஏகாந்தமா யுட்கார்ந்திருந்தனள். கொரான் கிரந்தத்தைக் கையிலேந்தி தனது விசாரத்தை மறந்திருக்க வாசித்துக்கொண்டிருந்தனள். இதற்குள் இவளது தாசி பதிமா உள்நுழைந்து செலிமாவிற்கு விதிக்கப்பட்டுள்ள தண்டனையைக் குறித்து சவிஸ்தாரமாய்ச் சாற்றினாள். இவற்றைக் கேட்டமாத்திரத்தில் மும்தாஸ் விசனக் கடலிலாழ்ந்தாள். கையிலிருந்த கிரந்தத்தை வீசியெறிந்து எழுந்திருந்து நின்று "இது வாஸ்தவமாயிருக்குமா?" என்று உரக்கக் கதறிக்கொண்டே ஒரு முறை பெருமூச்செறிந்தனள். மறுபடியும், "ஈச்வரா! நீயே சாக்ஷி! நானவளைக் குறித்துக் கொஞ்சமேனுந் துவேஷங்கொண்டவளல்ல" என்றனள். தாசியை நோக்கி "பதிமா! இப்பொழுது மகாராஜா எங்கிருக்கின்றார்?" என வினவினாள்.

"முத்து மஹாலில்."

"நீ போய் நானவரைத் தரிசிக்க இச்சைகொள்ளுவதாகச் சொல்."

"அவரைப் பார்க்க முடியாதெனத் தோன்றுகிறது. தன்னிடத்திற்கொருவரும் வரக் கூடாதென ஆக்ஞை செய்துள்ளார்."

"ஆஹா! இதுவுமப்படியா! நீ போய் இதற்கு வேண்டிய முயற்சியைச் செய். நானவரைப் பார்க்காமலிருக்க முடியாது. அவ்வபலையை இச்சங்கடத்தினின்றுங் காப்பாற்றுவது எனது கடமை."

"மகாராணியம்மையே! தமது வழியிலிருந்த முட்களை ஒன்றுமில்லாமலகற்றுவதால் சந்தோஷப்படுவதை விடுத்து இப்படிப் பகருவது பைத்தியமல்லவா?"

"சீ, சீ! பதிமா! நானவ்வளவு நீச கபாவமுள்ளவனென நீ மனதில் நினைக்க உனக்கு வெட்கமில்லையா? இனிமேலிப்படிப்பட்ட வார்த்தையைச் சொல்லாதே. ஜாக்கிரதை. இவள் எனது சுகத்திற்கு இடையூறாயிருந்தபோதிலும் நானவளிடம் பிரேமை கொண்டுள்ளேன். அவளோ, பாவம்! அபலை. ஒன்றுமறியாதவள். கபடமற்றவள். ரங்கமஹாலில் இப்படிப்பட்ட நிஷ்கபட பாலிகைகளிருப்பதற்கு யோக்கியதையே யில்லை."

"ஆனால் பிரதி உபகாரத்தைக் கருதி நானிக்காரியத்தைச் செய்தேனென மாத்திரஞ் சொல்லக்கூடாது."

"பதிமா! நீயே இதைச் செய்தாய்! பிரதி உபகாரத்தைக்கருதியோ, கருதாமலோ, எனக்கென்ன தெரியும்?"

"பேகம் நிரபராதியே! தன்னிடமிருந்த தாசியைப் புருஷனென அவள் கொஞ்சமேனு மறிந்தவளல்ல. நானே அவளை ஸ்திரீ வேஷந் தரிக்கச் செய்து தாசியாக அமர்த்தி வைத்தேன்."

மும்தாஸ் கோபத்தாற் கண்கள் சிவக்க, உரத்த குரலில் "ராக்ஷஸி! சண்டாளி! என் நன்மையை நாடி நீ இக்கோர பாதகத்தைச் செய்து அவளது பெயருக்குக் களங்கத்தை வருவித்ததாக உனது வார்த்தைகளாற் தெரிய வருகிறது. அடி துஷ்டை! என்னெதிரில் நில்லாதே. செல். உனது முகத்தை மறுபடியும் என்னெதிரிற் காட்டாதே. ஆஹா! ஈச்வரா! சர்வ சக்தி நிறைந்த தீனதயாளு! இந்த அபலையை இச்சங்கடத்தினின்று காப்பாற்றுவதுனது கடமையல்லவா?" என்றனள்.

மும்தாஸ் பேகத்தின் மார்பு படபடவெனத் அடித்தது. ஒரு குழந்தையைப்போற் தேம்பித் தேம்பி அழுதனள். கொஞ்ச நேரஞ் சென்றபின் கண்களைத் திறந்து எதிரில் நோக்கப் பதிமா அங்கேயே நின்றிருக்கக் கண்டு கோபமதிகரிக்க, "இன்னும் நீ இங்கிருக்க உனக்குப் பீதியுண்டாகவில்லையா? இதை விட்டுச் செல், அரண்மனையை விடுத்து ஓடி ஒளிந்துகொள். இல்லையேல் செலிமாவிற்குண்டான தண்டனை உனக்குங் கிடைக்குமென்பதை ஞாபகத்திலிறுத்திவை" என்றனள்.

தான் செய்த காரியத்திற்குப் பலன் இவ்விதமாகக் கிடைக்குமென்று பதிமா கனவிலுங் கருதியவளல்ல. நிராசையுடன் அங்கிருந்து வெளிக் கிளம்பினாள்.

இதற்குள் மும்தாஸின் மனதிற் சில எண்ணங்களுதிக்கவே பதிமாவைக் கூவி யழைத்து "பதிமா! வெகுமதிகளை யுத்தேசித்தே நீ இவ்வளவு காரியத்தையுஞ் செய்தாய். இதை நீக்கவேண்டியவற்றைச் செய்து முடிப்பாயாகில் நீ எதிர் பார்த்திருந்த வெகுமதிகள் உனக்கு இரட்டிப்பாய்க் கிடைக்குமென்பதிற் சந்தேகமில்லை" என்றனள்.

"எனது கபடம் பாதுஷாவிற்காவது அல்லது இராஜ குமாரிக்காவது தெரியும்பக்ஷத்தில் எனக்கு மரண தண்டனை கிடைக்குமென்பதில் ஐயமில்லை. ஆனாலும் பேகத்தைக் காப்பாற்ற வேண்டி என்னாலானவற்றைச் செய்கின்றேன்."

"இச்சைப் படுவதை இழந்த பின் அவ்வாழ் நாட்களுக்கென்ன சுகம்? பாதுஷா அப்பாலிகைமேல் அளவில்லாப் பிரீதி வைத்திருந்தாரென்பது எனக்குந் தெரியும். நான் நினைப்பது வாஸ்தவமாயிருந்தால் அவளினி உயிரை வைத்துக்கொண்டிருப்பதை விட ஆனந்தமுடன் இறப்பதே மேலெனக் கருதுவாள். என்னால் என்ன செய்ய முடியுமோ அதையுஞ் செய்து பார்க்கின்றேன்."

பதிமா இவ்வார்த்தைகளைக் கேட்டிருந்த பின், இடம் விட்டகன்றனள். மும்தாஸ் செய்வது யாதென்றறியாமற் திகைத்தாள். அவ்வறைக்குள் பைத்தியம் பிடித்தவள்போல் அங்குமிங்கும் நடந்துகொண்டிருந்தாள்.



அப்படியே சூனிய மனதுடன் நேராகப் பாதுஷா இருக்குமிடத்தை நோக்கிச் சென்றாள். பாதுஷாவின் கதவருகிற் காத்திருந்த நீக்ரோ ஸ்திரீகள் பாதுஷா அசௌக்கியமாயிருப்பதைச் சொல்லியுங் கேட்காதவளாய் உள் நுழைந்து பாதுஷாவினெதிற் போய் நின்றாள்.

பாதுஷாவோ அச்சமயம் சுவர்ணமஞ்சத்திற் படுத்து மகமற் தலையணைகளில் முகத்தை மறைத்துத் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தனன். மும்தாஸ் மெதுவாக அவனருகிற் சென்று, கரங்களைக் கூப்பி மிக்கப் பிரீதியுடன் அவனை நோக்கி "பிராண நாதா! நான் பிக்ஷை கேட்கவே இவ்விடம் வந்துள்ளேன்" என்றனள்.

பாதுஷா திரஸ்கரிக்கும் முகத்துடன் அவளையுற்று நோக்கிய பின் "மும்தாஸ்! நான் துக்கக் கடலிலாழ்ந்துள்ளேன்" என்றனன்.

தன் பிராணநாதனது இருதய வேதனையை யறிந்த மும்தாஸும் மிக்க துக்கமடைந்தனள். பிராணனைக் கொடுத்தாகிலும் தன் பிராணபதியினது துக்கத்தைப் போக்கடிக்கத் தனது மாசற்ற மனதில் நிச்சயித்துக்கொண்டாள். ஆனால் செய்வது யாதென்றறியாமற் திகைத்தனள். வாயினின்றும் ஒரு வார்த்தையேனும் வெளிவந்தபாடில்லை. யாது பேசுவதெனத் தெரியாதிருக்கவே மிக்கநேரமிருவரும் மௌனமாயிருந்தார்கள். இந்நிச்சப்த ஸ்திதியில் இருவரது அந்தக்கரணங்களுமே சம்பாஷித்துக் கொண்டிருந்திருக்க வேண்டும்.

அதிக நேரஞ் சென்றபின் பாதுஷா, "என்ன பிக்ஷை?" என்றனன்.

"பிராணநாதா! தங்களது கோபத்திற்குப் பாத்திரமாயிருக்கும் ஒரு குற்றமற்ற பாலிகையின் பிராணனைக் குறித்த பிக்ஷை."

பாதுஷாவின் முகத்திற் தென்பட்ட துக்கக் குறிகளதிகரித்தன. கொஞ்சநேரம் மௌனமாயிருந்தபின் ஒரு முறை பெருமூச்செறிந்து, "என் துக்கத்தை யதிகரிக்கும் பொருட்டோ இவ்விரவில் என் ஏகாந்தத்தைப் பங்கஞ் செய்யவந்தாய்?" என்றனன்.

"மகாராஜ்! நானுங்களுக்குத் தொந்தரவு கொடுப்பதுபற்றி மன்னிக்கவும். ஆனால் பிராணநாதா! நான் கேட்கும் பிக்ஷை சிறு பேகத்தைக் குறித்தல்லாது உங்களைக் குறித்தேயுள்ளது. தாங்கள் இவ்வளவு துக்கமடையக் காரணமென்ன? தாங்கள் அவள்மேற்கொண்டிருக்கும் அளவில்லாப் பிரேமையாலல்லவோ? தாங்கள் செலிமாவிற்கு மரணதண்டனை விதித்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். அப்பாலிகையோ தங்களது இஷ்டத்தைப் பூர்த்தி செய்யும்பொருட்டுத் தன் பிராணநாதனது ஆக்ஞையை வீணாக்காது இறக்க ஒருபோதும் பின்வாங்காள். ஆனால் பிராணநாதா! இதனால் உங்களுக்குச் சமாதானமும் மனதிற்குச் சாந்தமும் கிடைக்கும்பக்ஷத்தில் தாங்கள் செய்வது சரியே. நானோ ஸ்திரீ. நீங்கள் அவள்பாற் கொண்டுள்ள பிரேமையினெல்லையை நானறிந்துள்ளேன். அப்பிரேமைக்குரிய அவளுக்கு மரணதண்டனை யளிக்கத் தயாராயிருக்கிறீர்கள். இதனால் உங்கள் மனதிற்கும் சமாதானமுண்டென நினைக்கிறீர்கள். ஆனால் நானோ இவள் நிரபராதியென உங்களுக்குத் தெரியும்பக்ஷத்தில் இப்பொழுதுண்டாயிருக்கும் வேதனை பன்மடங்கதிகரிக்குமென்பதை நினைத்துப் பாருங்கள். நாதா! கோபத்தின் ஆவேசத்தால் பாவகாரியங்களைச் செய்து ஏன் இருதய வேதனைக்குள்ளாகவேண்டும்? இவளுக்கு ஜீவதானங் கொடுங்கள்."

பாதுஷா மந்தமான ஸ்வரத்தில், "எனது மனதிலுள்ள வேதனையைப்பற்றி உனக்கென்ன தெரியும்?" என்றனன்.

"இருதயேச்வரா! நான் யாவற்றையுமறிந்துகொண்டதாலேயே தங்களுடன் பேசவந்தேன். இந்த அபவாதமான காரியத்தைச் செய்து வீணில் உமது ஜன்மத்தைத் துக்கத்திற்குள்ளாக்கிக்கொள்ளவேண்டாமெனச் சொல்லவே நானிவ்விடம் வந்துள்ளேன். செலிமா அபவாதமான காரியத்தைச் செய்தாளென உங்களுக்கு நிச்சயமாகத் தெரியுமா? அவளை அபராதியென ருஜூப்படுத்த உங்களிடம் வேண்டிய சாட்சிகளிருக்கின்றனவா? அவளை அபராதியெனச் சொல்லுவதற்கு முன் அவளைக் கண்டு பேசி நடந்த சங்கதியாதென அவள் வாயினின்றுங் கேட்டீர்களா? வேண்டாம், வேண்டாம். நாதா! என்னையுற்று நோக்க வேண்டாம். நீங்கள் அவளைக் கண்டு பேசவுமில்லை. அவளபராதியென நீங்கள் நிச்சயப்படுத்திக்கொள்ளவுமில்லை. நிர்த்தோஷியாயிருக்கும்பெண்ணை இக்கடுந் தண்டனைக்குள்ளாக்குங்கால் நமது வம்சத்திற்குக் களங்கமேயுண்டாகும். இவள் அபராதியென அறிந்தபின்னர் தண்டிக்கவும். ஆனால் முதலில் அவள் சங்கதியைக் கேட்டு அறிந்த பின்னரே யாவற்றையுஞ் செய்யும்படி மன்றாடுகின்றேன். பிராணேச்வரா! இந்தப் பிக்ஷையைப் பிறருக்கன்றி தங்களுக்காகவே கேட்கின்றேன்."

பாதுஷா மிக்க நேரம் யோசனையிலாழ்ந்தபின், "மும்தாஸ்! நீ சொல்வது வாஸ்தவமே. அவள் சொல்வதையுங் கேட்கவேண்டியதுதான். ஆனாலவளைக் காணும் மாத்திரத்தில் எனக்கடங்காக் கோபமுண்டாகிறது. நடந்த சங்கதியை நினைத்தமாத்திரத்தில் என்னுடல் கொதிக்கின்றது! நீயே அவளைக் கேட்டறிந்துகொள். இன்றிரவு அவளுக்கு ஜீவதானங் கொடுத்திருக்கின்றேன். நீ உன்னிருப்பிடஞ் செல். நான் கொஞ்சந் தனித்திருக்கவேண்டியிருக்கிறது" என்றான்.

மும்தாஸ் தன்னிடத்தை யடைந்தாள். மிக்க நேரந் தூக்கமின்றிப் பதிமாவின் வரவை நோக்கிக் காத்துக்கொண்டிருந்தாள். பதிமா இதற்கு வேண்டியவற்றைச் செய்து திரும்பி வந்து தன்னைப் பார்ப்பாளென்று இவள் எண்ணியது பொய்த்தது. பதிமா திரும்பி வந்தாளில்லை. அவள் தற்கொலை புரிந்துகொண்டிருக்கவேண்டுமென மும்தாஸ் எண்ணினாள்.

(தொடரும்.)


## ஜோதிடம்.

(மகாத்மாவின் விடுதலையைத் தெரிவித்த ஜோஸ்யர்).

தர்ம நியாயமான 5கேள்விகள் எழுதியனுப்பினால் எதிர்காலப் பலனைத் தெரிவிப்போம். லெட்டர் எழுதும் நேரத்தையும் குறித்தனுப்பவேண்டும். 5 கேள்விகளுக்கு ரூ. 1-0-0. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் ரூ. 0-4-0. ஒரு வருஷம் மாதவாரி பலன் ரூ. 2-0-0. (8-2-24 சென்னை ஆந்திரபத்திரிகை பின்வருமாறு எழுதுகிறது:—திருத்தணி ஹனுமாந்உபாஸி சடகோபாசாரியார் ஸ்வாமி மகாத்மா காந்தியடிகள் 5—2—24ல் விடுவிக்கப் படுவாரென்று 12—11—23ல் எங்கள் பத்திரிகையில் பிரசுரம் செய்திருந்தார். அதன்படியே மகாத்மா விடுவிக்கப்பட்டார். இவரது ஜோதிடத் திறமையை மனப்பூர்வமாக விக்கியாபனம் செய்து கொள்ளுகிறோம்.) மற்றும் விவரத்திற்கு எழுதவும்.

ஆஞ்சனேயஸ்வாமி ஜோதிடாலயம்,
திருத்தணிகை, சித்தூர் ஜில்லா.


# யேசு வரலாறு


கலைமாணி அழக சுந்தர தேசிகர்

Rev. F. KINGSBRUY, B. A.


காப்பு

நேரிசை வெண்பா

காசினியுள் ளார்க்குக் கடவுள் இயல் பைக் [காட்டும்
யேசுவர லாற்றை இயற்றமிழிற்—பேச
எனக்கு வரந்தா; எழில்கதையைக் கேட்கச்
சனர்க்கும் வரந்தா, எந் தாய்.

## முதற் படலம்

பெற்றோர் இயல்பு, பிறப்போ டிளமை
உற்ற பயிற்சி உரைக்கும் இப் படலம்,

### பெற்றோர்; பிறப்பு; இளமை; பயிற்சி

நிலநடுக்கடல் எனப் பெயரிய பெருங்கடலைச் சூழ்ந்துள்ள நாடுகளை எல்லாந் தன்னுள் அடக்கிப் பார்த்து சிறந்த உரோமாபுரியில் வேந்தர் வேந்தன் அகுத்து சீசர் செங்கோல்செலுத்து காலில், பெருங்கடலின் கீழ்த்திசையிலே உள்ள பலஸ்தீன நாட்டிலே கலிலேயா மாகாணத்திலே நசரைப்பதியிலே கடவுள் அடியார் ஒருவர் வாழ்ந்துவந்தார். இவர் ஒரு யூதர். பெயர் சூசையார். இவர் அறங்கிடந்த நெஞ்சினர்; கடவுள் திருவடிகளைக் கனவிலும் மறவாதவர். கடவுளது திருவருள் நிரம்பப் பெற்றும், பொருட்செல்வமும் கல்விச்செல்வமும் குறைந்தவர். தச்சு வேலை செய்து அதனால் வரும் வருவாயைக்கொண்டு பிழைத்துவந்தார். இவருக்கு மனைவியாக வாய்த்தவர் மரியம்மையார். இவரும் கணவனாரைப்போலவே கடவுளிடத் தன்பும் அறம் அகலாத நெஞ்சம் உடையவர். இருவருக்கும் உடல் இரண்டாயினும் உயிர் ஒன்றே என்பர் இவ்விருவரையும் நன்கறிந்தவர். இவ்வாறு இவர்கள் இல்லறம் நடாத்தி வரும்நாளிலே கடவுளுடைய திருவருளினாலே இவர்களுக்குப் புதல்வர் ஐவரும் புதல்வியர் சிலரும் பிறந்தனர். மக்கள் அனைவருள்ளும் மூத்தவரே யோசுவா என்னும் பிள்ளையார். யோசுவா என்னும் பெயர் யேசு என மருவிற்று.

யேசுவின் தம்பிமார் பெயர்கள்: யாகப்பர், சூசையார், யூதையார், சீமோனார் என்பன. இவருட் பிந்தியவர் இருவர் முறையை மாற்றிச் சீமோனார், யூதையார் எனக்கொள்வர் "மத்தையர் சுசமாசார" நூலுடையார். தங்கையர் பெயர் ஒன்றும் ஒரு நூலிலும் சொல்லப்படவில்லை. பெண்களைத் தக்கபடி மதிப்பது அக்கால வழக்கத்திற்குப் பொருந்தியதன்றுபோலும்.

சுக்கிலபக்ஷத்துச் சோதியம்புலிபோல, யேசு சரீரத்தில் மாத்திரமன்று, அறிவினும் நல்லொழுக்கத்திலும் வளர்ந்துவந்தனர்.

அக்காலத்தில் அந்நாட்டில் அவர் நிலையில் உள்ள மற்றப் பிள்ளைகளுக்கு எவ்வகைப் பயிற்சி, எத்துணைப்பயிற்சி கிடைத்ததோ, அவ்வகைப்பயிற்சி, அத்துணைப்பயிற்சி யேசுவுக்குங் கிடைத்தது என்பதில் ஐயம் இன்று. பெற்றோர் இருவரும் கடவுள் அடியார் என்பதும் அறங்கிடந்த நெஞ்சினர் என்பதும் உண்மையாகலின், தங்கள் பிள்ளைகள் எல்லாரையும் தக்கபடி வளர்த்துவந்தார் என்பது ஒருவருஞ் சொல்லாமலே யாம் அறியத்தக்கது.

யேசு கூரிய மதியினாராயினும், பிஞ்சிற் பழுத்தவரல்லர். எல்லாப் பிள்ளைகளையும் போல

வே படிப்படி வளர்ந்துவந்தனரே யன்றி அவரிடம் விசேஷமொன்றும் காணப்படவில்லை. வீட்டிலுள்ள பிள்ளைகளோடும் ஊர்ப்பிள்ளைகளோடும் விளையாடிவந்தார். பெற்றோரிடத்தும் ஊர்ப்பள்ளிக்கூடத்திலும் படித்துவந்தார். யேசு "ஓதாதுணர்ந்தவர்" அல்லர். மனிதருக்குள்ள அறிவெல்லாம் கல்வி, கேள்வி, கவனம், அனுபவம் என்னும் நால்வகைச் சாதனங்கள் மூலமாய் வருவனவாம். யேசுவுக்குள்ள அறிவும் இவ்வாறே வந்த அறிவாம். அவரது பெற்றோர் அதிகங் கல்விபெற்றவரல்லர். எழுத வாசிக்கத் தெரிந்தவர்கள். நமது நாட்டிற் கிராமவாசிகளுக்கு இராமாயணக்கதை, மகாபாரதக்கதை, பாகவதக்கதை, கந்தபுராணக்கதை, பெரியபுராணக்கதை, திருவிளையாடற் புராணக் கதைகள் தெரிந்துள்ளதுபோல பலஸ்தீன நாட்டிலுள்ள யூதஸ்திரீ புருஷர் யாவரும் "பழைய ஏற்பாட்டுக் கதைகள்" நன்கறிந்தவர்கள். பெற்றோர் பிள்ளைகளுக்கு இக்கதைகளைச் சொல்லி வருவார்கள். இவ்வாறே யேசுவும் தம் பெற்றோர் இக்கதைகளைச் சொல்ல, "செவிவாயாக நெஞ்சுகளனாக"ப் பிள்ளைப்பருவத்திற் கற்றார். நசரையில் இருந்த ஊர்ப்பள்ளிக்கூடம் பெருங்கலாசாலையன்று. இதிற் சிறுவர் சிறுமியர் எழுத வாசிக்கக் கற்பிக்கப்பட்டனர். இப்பள்ளிக்கூடம் ஊர்ப்பள்ளியைச் சேர்ந்தது. (பள்ளியின்கூடமே பள்ளிக்கூடம். பள்ளி என்பது ஊரார் தொழும் இடம்.)

இங்கே சென்று உபாத்தியாயர் கற்பித்தவைகளையும் கற்றறிந்தார். இவற்றைத் தவிர யேசு கற்றவை கவனத்தாலும் அனுபவத்தாலும் வந்தவைகளாம். வீட்டிலும், பள்ளிக்கூடத்திலும், கடைத்தெருவிலும், வயலிலும், மலையிலும், சோலைகளிலும், மற்ற இடங்களிலும், இரவிலும் பகலிலும், மாலையிலும் காலையிலும், பூமியிலும் வானமண்டலத்திலும், கண்ணாற் காணக்கூடியவைகள் எல்லாம் கண்டனர். கேட்கக்கூடியவைகளை எல்லாம் கேட்டனர். இவ்வண்ணமே ஏனைய புலன்கள் மூலமாகவும் அறிந்தனர். இவை எல்லாம் "ஞாபகம்" என்னும் திரைச்சீலையிலே பல்வகைப் படங்களாகப் பதிந்தன. ஞாயிறும் திங்களும், விண்மீன்களும் முகிற்படாங்களும், அவர் கண்ணிலும் உள்ளத்திலும் விளங்கின. புள்ளும் விலங்கும், புல்லும் பூவும், மணியும் பதரும், மாமுஞ் செடியும், மழையும் வெயிலும், பனியுங் காற்றும், தீயும் நீரும், அவரோடு பேசின. அவரும் அவைகளிடம் கற்றுவந்தார். இவைகளேயன்றி, வீட்டிலும் நாட்டிலும் இருந்த சிறுவர் சிறுமியர், ஆடவர் பெண்கள், செல்வர் வறியவர், ஆண்டார் அடியார், கணவர் மனைவியர், பெற்றோர் பிள்ளைகள், நல்லார் பொல்லார், விற்பார் கொள்வார், கடன்கொடுப்பார் கடன்வாங்குவார் யாவரையுங் கவனித்து உலக இயல்பு இவ்வகைத்து என்பது அறிந்தார்.

கடவுள் ஒருவர் உளர் என்பதும், அவரை வணங்கும் வகை இவ்வகை என்பதும் தாய் தந்தையரும் உபாத்தியாயரும் போதிக்க, அப்போதனையைக் கடைப்பிடித்து அவரைத் திரிகரண சுத்தியோடு வணங்கிவந்ததுமன்றி அவரைக்குறித்து அறியும் அறிவெல்லாம் எவ்வெவ்வகைகளாற் கற்கலாமோ அவ்வவ்வகைகளாற் கற்றுவந்தார். கற்றுவரவே கடவுள் தம்தந்தை தாம் பிள்ளை என்னும் அறிவு தலைப்பட்டது. இவ்வறிவு நாளொருவண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்துவந்தது. கடவுளைப்பற்றிய அறிவு, கல்வியறிவு, கேள்வியறிவோடு நில்லாது உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெளிந்து விளங்கிற்று.



யேசுவின் தாய்தந்தையர் செல்வர் அல்லர், வறியவர். சூசையார் சீவனோபாயத்தின் பொருட்டுத் தச்சவேலை செய்து வந்தார் என முன்னமே கண்டோம். யேசுவும் தந்தையார் தொழிலறையிற்சென்று அவருக்கு உதவிசெய்தும் அவர்பாற் தச்சவேலை செய்யப் பயிற்சியடைந்தும் வந்தார். யேசு காளைப்பருவமடையுமுன்னரே தந்தையார் பரமபத மடைந்தனர். அன்றுமுதல் அன்னையாரையும் தம் உடன்பிறந்தாரையும் ஆதரிப்பது தம் கடன் என உணர்ந்து நெற்றிவியர்வை நிலத்தில் ஒழுகத் "தச்சன்மகன் தச்சன்" என முப்பது வயதுவரையும் உழைத்து வந்தனர்.

(தொடரும்.)

# ஒரு கடிதம்.

சர்வ ரக்ஷகனும் நியாயத்தீர்ப்பு நாளின் நீதிபதியுமாகிய எல்லாம் வல்ல இறைவனின் திருவருளாலும் ஆசிரியை சகோதரி வி. பாலம்மாள் அவர்களின் முயற்சியாலும், "சிந்தாமணி"யின் வாசகர்களாகிய சகோதர சகோதரிகளின் பேருதவியாலும், சிந்தாமணிக்காக மிகவும் உழைப்பெடுத்து அரிய பல கட்டுரைகளும் வியாசங்களும் எழுதிய அறிஞர்களுடைய ஆதரவினாலும் சிந்தாமணியின் முதலாவதாண்டு பூர்த்தியாகி இரண்டாவதாண்டு தொடங்கியிருப்பதைப்பற்றி மிகவும் சந்தோஷிக்கிறேன். பெண்களின் சுதந்திரத்திற்காக மிகவும் உழைக்கும் நாலாசிரியாகிய ஸகோதரி வி. பாலம்மாள் அவர்களுக்கும், அவருடைய பத்திரிகையாகிய "சிந்தாமணி" வாசகர்களுக்கும் விஷயதானம் செய்யும் அறிஞர்களாகிய ஸகோதர சகோதரிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியறிதலைச் செலுத்துகிறேன்.

நான் அறிந்தமட்டில் முதல் வருடம் சிந்தாமணிக்கு பெருத்த நஷ்டமேற்பட்டிருக்கிறது. இப்படியிருந்தும், சகோதரி தேசமுன்னேற்றத்தைக் கருதியும், ஸ்திரீகளின் முன்னேற்றத்தைக் கருதியும் பத்திரிகையைச் செவ்வனவே நடத்திவந்திருப்பது மிகவும் போற்றத் தக்கது. இது அவருடைய மாசற்ற தேசாபிமானத்தைக் குறிக்கிறது. இவ்வருடமும் பத்திரிகை செவ்வனவே நடைபெறவேண்டுமானால், ஏராளமான சந்தாதார்கள் இருக்கவேண்டும். இன்றேல் பத்திரிகை ஒழுங்காய் நடத்துவது மிகவும் கஷ்டம். பத்திரிகாபிமானமில்லாத இந்தியாவில், ஒரு பத்திரிகையை சரிவர நடத்த அதன் ஆசிரியர்களிடமாவது சொந்தகாரர்களிடமாவது தகுந்த மூலதனமிருக்கவேண்டும். எனவே தனவந்தர்களும், ஸ்திரீ வித்தியாபிமானிகளும் சிந்தாமணிக்குப் போஷகராகயிருக்க வேண்டியது மிகவும் அத்தியாவசியம். சிறுதொகையினரைக் கொண்ட இங்கிலாந்தில் ஸ்திரீகளின் முன்னேற்றத்திற்காக எண்ணிறந்த பத்திரிகைகள் நடைபெற்று வருகின்றன. ஆனால் நம் நாட்டில் ஸ்திரீகளின் முன்னேற்றத்திற்காக உழைக்கும் பத்திரிகைகளைக்காண்பதரிது. ஏனெனில் நம் நாட்டு ஆண் பெண்கள் பத்திரிகை படிப்பதலாலுண்டாகும் நன்மைகளை அறியவில்லை. அறிவிலிகள் மகளிருக்குக் கல்வியே வேண்டாமென சொல்லிக்கொண்டிருக்கும்போது அவர்கள் பத்திரிகை படிப்பதெங்ஙனம்? பத்திரிகைகளை வாசியாமல் தேசாபிமானம் வந்துவிடாதென்பதை ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைக்கவேண்டும். இறுதியாக, எனது அன்புள்ள சகோதர சகோதரிகளுக்கு ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். நீங்கள் உங்கள் தாய் நாட்

டின் க்ஷேமத்தை விரும்புவீர்களாயிருந்தால், சமூக ஆசார சீர்திருத்தத்தையும், பெண்களின் முன்னேற்றத்தையும் கருதி உழைப்பவர்களாயிருந்தால் நீங்கள் ஒவ்வொருவரும் கூடுமானவரை சிந்தாமணிக்குச் சில சந்தாதார்களை சேர்த்துக் கொடுக்கவேண்டியது. இது பெரிய சிரமமான காரியமாக பிராது. இப்படி நீங்கள் செய்தால் "சிந்தாமணி"யை இன்னும் பல சிறந்த வியாசங்களுடனும் மேல்நாட்டு பத்திரிகைகளைப் போல் சித்திர சகிதமாகவும் வெளியிட அதன் ஆசிரியை முயற்சிப்பார் என்பது திண்ணம்.

சிந்தாமணி நீடூழி நடைபெறவேண்டுமோய் பிரார்த்திக்கும்

தங்கள் ஊழியன்,
வ. மி. ஷம்சுதீன்.

# ராணி சாண்ட் பீபி.

(ஸ்ரீமான் V. நடராஜன் B.A., L.T.)

(664-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவ்விதமாகப் பல நாட்கள் சென்றன. இருகட்சியினரும் இவ்விதம் யாதொரு முடிவுமின்றி வீணாகச் சண்டையை வளர்த்திக்கொண்டு இருப்பதால் அதிருப்தி யடைந்தார்கள். பல ஜனங்களை ஒரே நிலையில் வெகுநாட்கள் அடக்கிக் கட்டுப்பாடாக வைத்திருப்பது அதிக கடினம். மேலும் மூராத் அடிக்கடி தூதர்களை அனுப்பி, சரணமடைந்தால் ஜனங்கள் உயிரும்பொருளும் தப்புமென்றும், இல்லையெனின் ஆமத் நகரம் தரையோடு தரையாக இடிக்கப்படும் என்றும் சொல்லி வந்தான். சில ஆமத் நகர வீரர்களும் "நாம் எவ்வளவு நாள் எதிர்த்து நிற்க முடியும்? இனி சரணம் என மூராத் காலில் விழுவோம்" என்று எண்ணினார்கள். ஆனால் சாண்ட் ராணியோ கொஞ்சமும் மனச்சஞ்சல மடையவில்லை. "வீரர்களே! வெள்ளம் மிதந்து வரும்போது தாழியை உடைப்பவருண்டா? இவ்வளவு நாள் தைரியமாக எதிர்த்து நின்று நாளை நாம் ஜயம்பெறுங் காலம் நெருங்க, இன்று சரணம் என்று சொல்வது என்ன புத்தியீனம்! எதிரிகள் காலில் விழுவது புருஷ லட்சணமா? நான் எளிய ஸ்திரீயாயினும் என் உயிரைக்கொடுத்து இந்த இடத்தைப் பாதுகாத்து நிற்பேன். என்னுடன்கூட நிற்பவர் யாருளர்?" என்று கூறினாள். உடனே எல்லா வீரர்களும் ஒரே மனதாக "சாண்ட் அரசியின் பொருட்டு நான் இறப்பேன், நான் இறப்பேன்" என்று உற்சாகமாகக் கூவினர். உடனே பலர் கோடரி, கடப்பாரை இவைகளைக்கொண்டு முகலாயர் ஏற்படுத்தியிருந்த சுரங்கத்தை அழித்து, அதில் இருந்த வெடி மருந்தை எல்லாம் எடுத்து விட்டனர். இச்செய்தி மூராத் காதில் எட்டியவுடன் அவன் உடனே இன்னொரு சுரங்கத்தில் உள்ள வெடிமருந்துக்குத் தீயிட உத்தரவளித்தான். அதனால் கோட்டைச் சுவர் இடிந்தவுடன் உள்ளே ஓடி விழுவதற்குத் தயாராக சைனியத்தை இருக்கும்படி செய்தான.

திடீரென்று பேரிடி இடித்ததுபோல் சத்தம் உண்டாயது. புகை மேகம் ஆகாயத்தில் எழும்பியது. மண்ணும் கற்களும் வாரி வீசப்பட்டன. சற்று நேரத்திற்கெல்லாம் கோட்டைச் சுவற்றில் ஒருபாகம் இடிந்து விழுந்தது காணப்பட்டது. முகலாயர்கள் வீராவேசத்துடன் ஓடி உட்புகுந்தனர். இந்த விபத்தைக் கண்ட ராணி சற்றுத் தயங்கி நின்றாள். இதற்குள் சிலர் முதுகு திரும்பி ஓடி விடத்தயாராக இருந்தனர்.



ஏது! முகலாயர் ஜயித்துவிடுவர் போலிருந்தது! என்ன செய்வாள் ராணியும்!

உடனே ஆவேசத்துடன் வீரர்களைக் கூவினாள். "என்னை விட்டுப்போவதில்லை என்று சத்தியம் செய்துவிட்டு இப்போது ஓடுகிறீர்களே? வாருங்கள்! என்னுடன் நின்று எதிரிகளை விரட்டுங்கள்! இதோ நாங்கள் ஸ்திரீகள் நின்று யுத்தம் செய்கிறோம்" என்று கூச்சலிட்டாள். அவளுடன் இரண்டு மூன்று தோழிகள் நின்றனர். அவள் கவசத்தை அணிந்துகொண்டு கத்தியை வீசிக்கொண்டு எதிரிகள் மத்தியிற் புகுந்து சென்றாள். அவள் போவதைக்கண்ட மற்றவர்களும் உடனே கத்தியை வீசிக்கொண்டு பாய்ந்தார்கள். ஒரு நாழிகைப் பொழுதிற்குள் முன்னேறி ஓடி வந்த முகலாய வீரர்கள் சின்னா பின்னமாக விழுந்தனர். கோட்டைச்சுவர் மீதிருந்த துப்பாக்கிகள் எல்லாம் இருந்தவிடம் திருப்பி முகலாயர் மீது பிரயோகித்தனர். மறுபடியும மறுபடியும் முகலாயர் மேல் வந்து மோதினர். என்ன செய்தென்? சாண்ட் ராணி அந்த இடத்தை விட்டு நகர்ந்தாலல்லவா?

நிர்ப்பயமாக நின்று வீரர்களை நடத்தும் ராணியை வெகு தூரத்தில் கூடாரத்தில் இருந்த மூராத் இளவரசனும் பார்த்தான். "ஆகா! இவ்வித அரசி ஒவ்வொரு ஊரிலும் இருந்தால் நமது முகலாய ராஜ்யம் இருக்குமிடமே தெரியாமற் போகும்" என்று எண்ணினான். பகல் முழுதும் சண்டை நடந்தது. இரவு நெருங்கியும முகலாயர் ஒரு அடி தூரம் கூட கோட்டைக்குள் செல்லவில்லை. மகா புகழ் பெற்ற முகலாய வீரர்கள் வெட்கமாக முகத்தைத் தொங்க விட்டுக்கொண்டு இளவரசனிடம் வந்து நின்றனர். "இனி என் செய்வது! ஒரு பெண் பிள்ளையினால் நீங்கள் பல வீரர்கள் தோல்வியடைந்தீர்கள். சரி! இனி சில காலம் சமாதானம் செய்துகொள்வோம். நம்மில் அநேகர் இறந்து விட்டனர். அவர்கள் பிரேதங்களை எடுத்துப்போக அனுமதி கொடுக்கும்படி ராணியைக் கேட்டு வாருங்கள்" என்று மூராத் உத்தரவிட்டான். அத்துடன் மகாதீரமாகப் போர் புரிந்த ராணியின் சாமர்த்தியத்தைத் தான் மிகவும் சிலாகிப்பதாகவும் மூராத் அறிவித்தான்.

சாண்ட் அரசியோ கொஞ்சமேனும் கர்வமடையாமல் யுத்தகாலத்தில் காயம்பட்டு விழுந்தவர்களுடன் இருந்து அவர்களுக்கு வைத்திய சகாயம் செய்துகொண்டு நின்றாள். மூராத் இளவரசர் கேட்டுக்கொண்டபடி சமாதானத்தை ஒப்புக்கொண்டு எதிரிவீரர்களில் காயம்பட்டு விழுந்தவர்களையும் எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்தாள். ஆமத் நகரத்துப் பிரபுக்களும் ஜனங்களும் ஒன்றுகூடி அரசியை வாழ்த்தி அவளைப் புகழ்ந்தார்கள். ஆனால் அவள் எல்லாரையும் முழந்தாட்படியிட்டுக் கொண்டு ஆண்டவனுக்கு வந்தனம் செலுத்துமாறு சொன்னாள்.

சாண்ட் ராணியின் பெரும் புகழும் நமது தேச சரித்திரத்தில் இன்னும் வயிரம்போலப் பிரகாசித்து விளங்குகிறது.

(தொடரும்.)




# அதிருஷ்டம்

(சிறுகதை

சகோதரி வி. பாலம்மாள்

காபிரைட்

"பொழுது விடிந்து ஏழுமணியும் அடித்துவிட்டதே, சானம்மாள் பாவி வரக்காணோமே. மாதம் ஏழுரூபாய் அவல்போல் கொடுக்கிறேனே. இத்தனைநாழிகைக்குமேல் காப்பி சாப்பிடுவதைக்காட்டிலும் பேசாது இருக்கலாமே. என்னெஞ்சு வரண்டுபோகிறதே. என்றைக்கும் சுகமென்பதில்லாது கஷ்டப்படவே நான் பெண் பிறந்திருக்கிறேனே. என்னைப்போல் துரதிருஷ்டமுள்ளவள் ஒருத்தியுமிராள். இதெல்லாம் ஜனனகாலவிசேஷம். அஷ்ட தரித்திரத்தின் பெண்கள் எல்லாம் வைர வளையும் மோட்டார்கார் சவாரியுமாக மதிக்கவில்லையா? வேளைக்குக் காப்பியும் சோறுங்கூட எனக்குப் பஞ்சமாய்விட்டிருக்கிறதே. சுகவாசிகளெல்லாம் அற்பாயுசாகப் போய்விடுகிறார்களே. அந்தச் சாவு எனக்கு வந்தாலாகாதா?" என்று மனம்நொந்து பேசினாள் மீனாக்ஷி.

"ஏன், நீ சேலைகட்டியபெண்பிள்ளைதானே. உட்கார்ந்தவிடத்தில் ஒப்பாரி வைக்கிறாயே. அடுப்பை மூட்டிக் காப்பி காய்ச்சக்கூடாதா? சானம்மாள்வந்தால்தான் காப்பியும்சாப்பாடும் கிடைக்குமென்று இருப்பதுடன் பிரமாதமாய் வெறுத்துக்கொள்ளுகிறாயே. 'ஏருபிடித்தவன் என்னசெய்வான், பானைபிடித்தவள் பாக்கியம்' என்று உன்னை என்று மணந்தேனோ அன்றே எனக்குப் பிடித்தது சனியன். இன்னும் விட்டபாடில்லை. வீட்டுவேலைக்கு நடுக்கு. அடுப்பங்கரை என்றால் அஞ்சியழும் பெண்பிள்ளையிருக்கும் வீட்டில் மூதேவிதான் வசிப்பாள். இதற்கென்ன ஆக்ஷேபம். சூரியோதயமாய் எத்தனை நேரமாயிருக்கிறது பார்த்தாயா? அடுப்பங்கரை மெழுகாமலும் தெருவில் கோலமிடாமலும். கிடக்கிறதைக் கண்டும் நிம்மதியாய் உட்கார்ந்திருப்பாயாகில் உன்வீட்டில் லக்ஷ்மி காலெடுத்து வைக்கவும் அஞ்சி ஓடிவிட மாட்டாளா" என்றார் மீனாக்ஷியின் கணவன்.

இதற்கிடையில் கோடுவாய்க்கரை கன்னத்திற்படிய கண்ணைக் கசக்கிக்கொண்டு பன்னிரண்டு வயதுள்ள பெண் ஒருத்தி "அம்மா, காப்பி காய்ச்சியாகவில்லையா" என்று முணுமுணுத்துக்கொண்டு மீனாக்ஷியினருகில் உட்கார்ந்தாள். "இன்னம் காப்பி காய்ச்சவில்லையே! நல்ல வேளை, இன்று பத்துமணிக் கொழுந்தால் போறும்" என்று சொல்லிவிட்டுப்படுக்கையிற்படுத்திருந்த சிறுவன் கணபதி மீண்டும் தூங்க ஆரம்பித்தான். "அம்மா, சில்லரை இரண்டணா கொடு, ஓட்டல்சென்று காப்பி சாப்பிட்டுவிட்டு வருகிறேன்" என்றான் மணியன். "எதிர்வீட்டு சுந்தரியைப்பார். உனக்கும் சிறியவள், வீட்டு வேலைகளெல்லாம் அவள்செய்கிறாளே. உனக்குத் தடிபோல வயதாயிற்றே, போய் அடுப்பைமூட்டிக் காப்பிபோடக்கூடாதா" என்று தன் மகள் சங்கரியை மீனாக்ஷி அதட்டினாள். இவ்வார்த்தை கேட்டதும் நாராயணனுக்குக் கோபம் பொங்கிற்று. "எதிர்வீட்டுக் கமலம் உன்னைப்போலதான் சோம்பேரியாய்க் காலங் கழிக்கிறாளா? 'தாயைப்போல் மகள், நூலைப்போல் சேலை,' 'தாயைத் தண்ணீர்துறையிற் கண்டால் மகளை வீட்டிற்பார்க்கவேண்டா'மென்பதுபழமொழி. தாய் வீட்டுவேலை செய்தாலல்லவா பெண்ணும் கூடக்கூட சிறுவயதிலிருந்து வீட்டு வேலை கற்றுக்கொள்ளும்" என்றார். "ஆம் நான் பிறந்தேன் அளகாபுரியிலே. என்னைப்போல என் பெண்ணும் கையசக்காமல் இருப்பதென்றால் முடியுமா? இன்றைக்கும் என் தகப்பனார் என் பெயரால் பாங்கியில் கட்டிய பணம் பத்தாயிரம் கிடக்கிறதே. உங்கள் பெண்ணுக்கு ஆயிரம் ரூபா வரதக்ஷிணை கொடுத்து நல்ல வரனுக்குக் கலியாணம் செய்துவைக்க முக்காலமுடியாதே. நீங்கள் எந்தத் தரித்திரன்வீட்டில் சங்கரியைத் தள்ளலாமென்றுதானே இருக்கிறீர்கள். அவளுக்கு வீட்டுவேலை தெரியாமலிருந்தால் கட்டுப்படியாகுமா" என்றுவக்கணித்தாள் மீனாக்ஷி.

"அவளுக்கு அதிருஷ்டமிருந்தால் நல்ல வரன் தானாகவே தேடிவருவான். உனக்கு இடுப்பு வணங்காவிடின் குழந்தையை அதட்டி மிரட்டி மசிக்கலாமென்று பார்க்கிறாய். உனக்கு உன் தந்தை பணமெழுதிவைத்ததாலேயே நீ இவ்வாறு கர்வங்கொண்டு நடக்கிறாய். 'என்பணம், என் பணம்' என்று பெருமை பேசுகிறாய். பெண்களுக்கு அதிருஷ்டம் புருஷனால் உண்டானால் நிலைக்குமன்றி பிறந்த வீட்டுக் காசும் பெருமையும் ஒரு நாளும் ஒட்டாது. அதிலும் அண்ணன் தம்பிகளைத் துரோகம் செய்து பூர்வார்ச்சிதத்தையெல்லாம் சுயார்ச்சிதசொத்தென்று உன் தந்தை ஒளித்து உன் தாய் பேரால் வட்டிக்குப் போட்டதிலிருந்து உனக்கும் பத்தாயிரம் கிடைத்ததன்றி வேறில்லை. குடும்பத்தை வஞ்சித்த அந்தப் பணம் என் வீட்டிற்கு வந்ததுதான் தாமதம். அன்றிலிருந்து என் படிப்பும் கெட்டு உயர்தரப் பரிக்ஷையொன்றும் தேறாது இவ்வாறு முப்பது ரூபாய் சம்பளத்திற்கு நெற்றித்தண்ணீர் நிலத்தில் விழ நான் பாடுபடுகிறேன். 'பணக்காரன் வீட்டில் பிறந்தேன், பாங்கியில் பணமிருக்கிற'தென்று நீ இவ்வாறு அட்டகாசஞ் செய்து உட்கார்ந்தவிடம் விட்டசையாது, 'என் பணத்தில் நான் வேலைக்காரி போட்டுக்கொண்டால் உங்களுக்கு என்னகஷ்ட'மென்று பேசித்திரிந்து தெரித்துக் காலங் கழித்து வருகிறாய். ஏருது

சொல்ல காக்கை அறியாதென்றபடி கலியாணத்திற்குப் பெண் ஒன்று இருக்கிறதே, மூத்தபிள்ளைக்கு வயது பதினெட்டுக்கு மேலாகியும் மெட்ரிக்குலேஷன் பரிக்ஷைகூடத் தேறவில்லையே என்று. நானல்லவா கஷ்டப்படுபவன். இன்று சாணம்மாள் வாராததால் வயற்றில் மண்தான். எக்கேடு கெட்டுப்போ. இந்தக் குடும்பம் ஒருநாளும் வாழப்போவதில்லை. பாஸாசென்றால் நல்ல உத்தியோகம் கிடைக்குமாம். உன் முகத்திலும் விழிக்காது, உன் உபத்திரவமுமில்லாது சிறிது நாளாவது கழிக்கலாம்" என்று நாராயணன் கோபத்துடன் பேசி முடித்தார்.

மீனாக்ஷியின் தந்தைக்கு நெடுநாள் ஆண்மகவின்றி யிருந்தமையால் மகளை வெகு அன்புடனும் அருமையுடனும் வளர்த்தார். இவருடன் பிறந்த நான்கு சகோதரர்களும் மூத்தவராகிய இவரைத் தந்தை ஸ்தானத்தில் வைத்து அடங்கி நடந்தனர். கோவிந்தன் சால்ட் இன்ஸ்பெக்டராயிருந்து ஏராளமாகச் சம்பாதித்து வந்தார். தம்பிமார் பாகமெல்லாம் இவர் வசமே இருந்தபடியால் அதன் வருமானக் கணக்கு வழக்குகளும் இவரிடமே இருந்தன. கோவிந்தன் தன் மனைவி பேரால் அடிக்கடி தோட்டந் துறவுகளை வாங்கி வைக்கலானார். மீனாக்ஷிக்குப் பன்னிரண்டாவது வயதில் நாராயணனுக்கு மணம் முடித்தார். அச்சமயம் நாராயணன் பி. ஏ. வகுப்பில் படித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது கோவிந்தனுக்கு ஓர் ஆண்மகவு பிறந்தது. இக்குழந்தைக்கு ஐந்து வயது நிறையும் முன் கோவிந்தன் காலகதியடைந்துவிட்டார். ஏற்கனவே தன் பேராலிருக்கும் சொத்துக்களைத் தவிர்த்து பூர்வார்ச்சிதத்தில் தன் மகனுக்கு பாகம் கேட்க உரிமையிருப்பதினால் அவ்விவகாரத்தைத் தீர்க்கும்படி அன்னம்மாள் தன் தம்பியைத் தூண்டினாள். தமக்கை புருஷன் கோவிந்தன் இறந்துவிட்டதிலிருந்து அக்குடும்பத்திற்கு சேஷன் சர்வாதிகாரியாய் விளங்கினான். மைனராக விருக்கும் தமக்கைமகனை சிற்றப்பன்மார் துரோகம் செய்வதாயும் தமையன் வீட்டில் பொறுக்கித் தின்றுவந்த போக்கிரிகளென்றும் அவர்களைப் பேசித் திரிந்தான். இதனால் மனஸ்தாபமதிகரித்து பாக வியாஜ்யம் கோர்ட்டில் தாக்கலாயிற்று. பூர்வார்ச்சிதத்தின் வருமானங்களை எல்லாந் தமையனே அனுபவித்து வந்ததாயும், தங்களை வெகுநாள் ஏமாற்றியதாலேயே மனைவி பெயரால் அவ்வளவு சொத்துக்கள் வைக்கமுடிந்ததென்றும், கோவிந்தன் மாதம் நானூறு ரூபாய் சம்பளத்தில் இவ்வளவு ஆஸ்திகள் சேர்த்திருக்க முடியாதென்றும், அன்னம்மாளின் தகப்பன் சோற்றுக் கடைவைத்திருந்தவனானதுபற்றிப் பெண்ணுக்கு ஸ்ரீதனமாகக் கொடுத்திருக்கவும் முடியாதென்றும் கோவிந்தன் தம்பிமார் விவகரித்தனர். 'அரைக்காசு சம்பளமானாலும் அரசாங்க உத்தியோகமல்லவா. இடக்கையாலும் வலக்கையாலும் கோவிந்தன் கூசாது அள்ளி அள்ளி சம்பாதித்துவிட்டார்' என்று ஊரார் வம்பளந்தனர். உலகம் பலவிதம். ஊர்வாயை மூட ஒருவராலுமியலாது. சேஷன் செய்து வந்த மானேஜ்மெண்டில் சிறுவன் முத்துகிருஷ்ணன் நிரக்ஷாகுக்ஷியாய் விளங்கினான். செல்லப்பிள்ளை செய்யும் வீண் செலவுகளாலும் தம்பியின் தந்திரத்தாலும் அன்னம்மாளின் கைக்காசில் பாதி கரைந்துவிட்டது. இது கண்டு சகியாத அன்னம்மாள் சென்னையிலிருக்கும் தன் மகள் மீனாக்ஷியுடன் வசிக்கலானாள். ஊரிலுள்ள நிலபுலங்களை எல்லாம் விற்றெடுத்துப் பணம் முழுதையும் அர்பத்நாட் பாங்கியில் கட்டிய மறுமாதமே பாங்கி முழுகிவிட்டதிலிருந்து அன்னம்மாள் பாடு அந்தரமாய்விட்டது. தெய்வாதீனமாக மீனாக்ஷியின் பணம் பத்தாயி



ரமட்டும் சென்னை சென்டிரல் அர்பன் பாங்கியில் கட்டப்பட்டிருந்ததால் மீனாக்ஷியின் செல்வாக்குச் சிறிதும் குறையவில்லை. நாராயணன் பி. ஏ. பாஸ் செய்யாமையால் சுதேசப் பத்திரிகாலயம் ஒன்றில் வேலை பார்த்துவந்தார். அன்னம்மாள் வீட்டுவேலைகளை எல்லாம் கவனித்துக்கொண்டு வந்ததிலிருந்து மீனாக்ஷி குடும்ப நிர்வாகத்தில் சிறிதும் கவலையென்பதில்லாமலிருந்தாள். அருமை மகன் முத்துகிருஷ்ணன் ஒருவரிடமும் சொல்லாது சிங்கப்பூருக்கு ஓடிவிட்டதறிந்த அன்னம்மாள் நோய் வாய்ப்பட்டு முடிவில் பரமபதமடைந்து ஒரு வருஷகாலமாயிற்று. இந்த ஒரு வருஷகாலமாக சாணம்மாளை மீனாக்ஷி சமையல் வேலைக்கு மாதம் ஏழு ரூபாய் சம்பளத்திற்கு அமர்த்தியிருந்தாள். சாணம்மாளுக்கு வீட்டில் நாலைந்து குழந்தைகளிருப்பதால் அதிகாலை ஐந்து மணிக்கு மீனாக்ஷிவீட்டிற்குவந்து காப்பி சமையல்களை முடித்துவிட்டு இரவில் தன் வீட்டிற்குச்சென்றுவிடுவது வழக்கம். அன்று வழக்கம் போல் சாணம்மாள்வாராததினால் காலை ஏழுமணியடித்தும் காப்பி கிடைக்கவில்லையே என்று மீனாக்ஷி வருத்தப்பட்டாள். கணவனும் மனைவியும் வாதாடி ஓய்ந்த பின் மூலைக்கொருவராக வாய் பேசாது உட்கார்ந்திருந்தனர்.

இச்சமயம் சுமார் ஏழு வயதுள்ள சிறு பெண் ஓடிவந்து 'எங்கம்மாளுக்குக் காய்ச்சல். இன்னிக்கு வரமாட்டா' என்று மீனாக்ஷியிடம் கூறிச் சென்றாள். ஒருகால் சாணம்மாள் வருவாளோ என்ற சந்தேகமும் நீங்கிவிட்டது. மீனாக்ஷி இருந்தவிடமவிட்டசைவதாகக்காணோம். நாராயணன் தம் தலைவிதியைநொந்துகொண்டு வெண்கலக் கூஜாவை எடுத்துச் சென்று ஓட்டலிலிருந்து காப்பி வாங்கிவந்தார். அதைச் சாப்பிட்ட பிறகே மீனாக்ஷிக்குச் சற்று மனச் சமாதானமேற்பட்டது. சாணம்மாள் வாராததால் தாய்க்கு உதவியாக ஏதேனும் வேலை செய்ய நேரிடுமோவென பயந்து மணியன் அன்று ஒரு நாளுமில்லாத திருநாளாகத் தன் பாடங்களைப் படிக்க ஆரம்பித்தான். மகள் சங்கரி அடுத்த வீடுசென்று நலங்குப் பாட்டுச் சொல்லிக்கொண்டு வருவதற்குத் தயாரானாள். கணபதி பெருக்கல் வாய்ப்பாடுகளைச் சொல்லிக்கொண்டிருந்தான். ஓட்டல் சென்று சோற்றுமூட்டையைத் தூக்கிவா அஞ்சி நாராயணன், அன்று லீவு வாங்கிவந்திருந்தும், ஆபீசுக்குச் செல்லவேண்டுமென்று புறப்பட்டுக்கொண்டிருந்தார். இச்சமயத்தில் தபாற்காரன் மீனாக்ஷியம்மாள் என்று விலாசமிட்டிருக்கும் பார்ஸல் ஒன்றையும் கடிதம் ஒன்றையும் நாராயணனிடம் கொடுத்துச் சென்றான். இதைக்கவனித்தமீனாக்ஷி "இங்கே கொடுங்கள். அந்தக்கடிதத்தை யார் எழுதியிருக்கிறார்களென்று பார்க்கிறேன்" என்றாள். "எனக்குத்தான் வந்திருக்கிறது. நானே படித்துப் பார்க்கிறேன்" என்று நாராயணன் கூறினார். "ஐயோ, போரும் வெட்கக் கேடு. அக்காளா, தம்பியா, திக்கா, திசையா ஒன்றிலொன்றுண்டா உங்களுக்கு. என் தம்பி ஒருவேளை எழுதியிருந்தாலும் உண்டு" என்றாள் மீனாக்ஷி.

"தம்பி சிங்கப்பூர்சென்று சப்கலெக்டர்வேலை செய்கிறானல்லவா. அக்காளுக்கு ஏதேனும் அனுப்பியிருப்பான் என்றே நினைக்கிறேன்" என்று நாராயணன் மனைவியைப் பரிகசித்தார். "நல்லவேளை, அவன் கலெக்டர்வேலை செய்யாவிட்டாலும் நீங்களாவது கலெக்டராயிருக்கிறீர்களே, அதுபோறும்" என்று மீனாக்ஷி கோபத்துடன்மொழிந்தாள். "அம்மா, அதில் மீனாக்ஷி என்று போட்டிருக்கு" என்று கணபதி கூவியதும் மீனாக்ஷி குதித்தெழுந்து கணவன் கையிலுள்ள கடிதத்தையும் பார்ஸலையும் வெடுக்கென்று பறித்துச் சென்றாள். அக்கடிதத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது :—

"மாதுஸ்ரீ அக்காளுக்கு முத்துகிருஷ்ணன் அநேக நமஸ்காரம். உபய க்ஷேமம். நான் நெடு நாளாகக் கடிதமெழுதாமலிருந்ததற்கு மன்னிக்கவும். அம்மாள் இறந்து விட்டதாகக் கேள்விப்பட்டேன். உனக்கு இனி வீட்டுவேலைகளை யார் செய்து கொடுப்பார்கள்? நிற்க, இவிடம் ஒரு அவதூத சாமியார் இருக்கிறார். அவர் எல்லாரையும்போல் ஆகாரமொன்றும் சாப்பிடுவதே கிடையாது, வாயுபக்ஷணம் ஒன்றையே செய்து வருகிறார். அவர் இவிடம் வந்தபுதிதில் ஊருக்கு வெளியே ஒரு மரத்தடியிலேயே காலங்கழித்துக் கொண்டிருந்தார். அவர் ஒரு பெரிய சித்தபுருஷர் எனத் தெரிந்து இவ்வூரார் அவரைப் பூசிக்கவாரம்பித்தனர். சாமியாருக்கிருக்கும் மந்திரசித்தியை எழுதிமுடியாது. கூன், குருடு, செவிடு, தீராப்பிணியாளர், மக்களில்லாதார், பொருளில்லாதார், மனஸ்தாபமுற்ற தம்பதிகள் அனைவரும் அவரைச்சூழ்ந்து தொண்டுசெய்கின்றனர். இவ்வூர் பிரபு ஒருவருக்குவியாபாரத்தில் பெருத்த லாபங்கிடைத்ததாம். அவர் தமது சொந்தச் செலவில் மடங்கட்டி அதில் சாமியாரை வசிக்கச்செய்திருக்கிறார். சாமியார் திருநீர் பிரசாதத்தை நினைத்தபடி பெறமுடியாது. சுவாமியின் உத்திரவானால் மட்டும் கிடைக்கும். என்றேனுமொருநாள் சுவாமி உத்திரவு செய்தால் சாமியாரிடம் திருநீறு பெறலாமென்ற தைரியத்துடன் பலர் மடத்தில் சேவை செய்து வருகின்றனர். இன்னமோர் விசேஷமென்னவென்றால் சாமியார் பொன்வெள்ளி முதலியவற்றைக் கையால்தொடுவதில்லை. அவரிடமுள்ள விக்கிரகத்தின் பாதத்தில் காணிக்கைகளைச் செலுத்தி விடுகிறார்கள். மறுநாள் பார்த்தால் பணம் அங்கிருப்பதில்லை. விக்கிரகம் பிரத்தியக்ஷமாகி இரவில் சாமியாருடன் பேசுவது வழக்கமாம். அச்சமயம் பொன்னாசை பொல்லாதென அவற்றை சுவாமி மறையச்செய்து விடுகிறாராம். நான் வேலைசெய்யும் ஆபீஸ் தலைவருக்கு ஓர் ஆண் குழந்தை இருக்கிறது. அதற்குப் பிறந்ததிலிருந்தே வலதுகால் ஊனமடைந்திருக்கிறது. குழந்தையை ஊனமின்றி செய்துவிடுவதாகச் சாமியார் வாக்களித்திருக்கிறார். கணவனை சுவாதீனப்படுத்திக் கொடுப்பதாயும் எஜமானிக்கு வாக்களித்திருக்கிறாராம். இது மெத்த ரகசியம். சுவாமியின் உத்திரவு சீக்கிரம் கிடைத்தல் பற்றி தினம் சாமியார் தவமிருக்கிறார். பூஜைச்செலவுகள் மட்டும் நாள் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாயாகிறது. பூஜைக்குவேண்டிய பொருள்களை நான்தான் நாள் தோறும் கொண்டுபோய்க்கொடுப்பது வழக்கம்.

சாமியார் ஒருநாள் என்மீது இரக்கமுற்று ஒரு இரசமணியை யளித்தார். அதைத் தாயத்தில் அடைத்து ரக்ஷையாக அணிந்துகொண்டால் நினைத்தகாரியங்களெல்லாம் கைகூடுமாம். அஷ்டைசுவரியம் பொங்குமாம். பிரம்மசாரியாகிய என்னிடமிருப்பதைக் காட்டிலும் சம்சாரியாகவிருக்கும் உன்னிடமிருப்பதால் சிலாக்கியமென்பதாக அதை இத்துடன் அனுப்பியிருக்கிறேன். இந்த ரக்ஷையை பக்திசிரத்தையுடன் அணிந்துகொள்பவருக்கு நினைத்ததெல்லாம் கிடைக்குமாம். இவ்வாறு ரக்ஷையினால் பிள்ளையில்லாதார்க்கு மக்கட்பேறு, பணமில்லாதார்க்கு ஐசுவரியம், தீராநோய் தீருதல், முதலியன உண்டாகுமாம். ஆணுக்குப்பெண்ணும், பெண்ணுக்கு ஆணும் வசியப்படுவார்களாம். சாமியார் படமொன்றும்இத்துடனுப்பியிருக்கிறேன். இதை சிரத்தையுடன் நாள்தவறாது பூஜித்துவா. சாமியாரை சாதாரணமாக எண்ணிவிடாதே. பிறர் தம்மைபற்றிச் சற்று அவமதிப்பாய் எண்ணிவிடின் அவர் அதை ஞானதிருஷ்டியா லறிந்துகொண்டு விடுவார். பிறகு ரக்ஷை பலிக்காது போய்விடும். ஒரே சமயத்தில்காசி, இராமேச்வரம், ஹரித்துவாரம் மூன்று இடத்திலும் இந்த அவதூத சாமியார்



ஸ்னானம் செய்ததைப் பார்த்ததாக சாமியாரின் சிஷ்யரிலொருவர் என்னிடம் சொன்னார். இப்பேர்ப்பட்ட மகானின் பிரசாதத்தை யனுப்பியிருக்கிறேன். நான்சிக்கிரத்தில் ஊர்வரப்போவதால் என் விலாசத்தை இதில் எழுதவில்லை. மகா-ள-ள-ஸ்ரீ அத்தம்பியருக்கு என் நமஸ்காரம். குழந்தைகளுக்கு ஆசீர்வாதம்.

இப்படிக்கு,
முத்துகிருஷ்ணன்.

மீனாக்ஷி இக்கடிதத்தைக் கணீரென வாய்விட்டுப் படித்தாள். பார்ஸல் டப்பியைத் திறந்து பார்க்கவேண்டுமென்ற ஆவல் அதிகமிருந்தும் ஸ்னானம் செய்து மடியாக அதைப்பார்க்க வேண்டுமென்று மீனாக்ஷி நினைத்தாள். அந்த ரக்ஷையை யார் போட்டுக்கொள்ளுவதென்ற தர்க்கம் அவர்களிடையே உண்டாயிற்று. "எனக்குப் பரிக்ஷை தேறவேண்டும். நான் போட்டுக் கொள்கிறேன்" என்றான் மணியன். "அம்மா, சார் என்னை 'முட்டாள், உன் மூளையில் படிப்பேறவில்லை' என்று தினம் தலையில் குட்டுகிறார். எனக்கு ரக்ஷையைப் போட்டால் நான் குட்டுப் படாமலிருப்பேன்" என்று கணபதி கெஞ்சினான். "எனக்கு நகைகள் உடம்பு நிறையப்போட்டுக்கொள்ள ஆசை. ஆகையால் நான்தான் தாயத்தைக் கட்டிக்கொள்வேன்." என்று சங்கரி அழுதாள்.

"பத்திரிகாசிரியனுக்கு எழுதத் தெரியாவிடினும் அவன் மாதம் ஆயிரம் ரூபாய் சம்பளத்தைக் கொள்ளையடித்துப் போகிறான். புருப் திருத்தக்காரன் என எனக்குப் பெயர் வைத்துள்ளபடி வேலை வாங்கிக் கொண்டு முப்பது ரூபாய் சம்பளத்திலேயே என்னை ஏமாற்றிவருவதால் நான் அந்த ரக்ஷையைக் கட்டிக்கொண்டால் பெரிய சம்பளம் கிடைக்கும். குடும்பத்திற்கு எஜமானாகிய நான் ரக்ஷையைக் கட்டிக்கொள்வதால் நன்மை பதிகமுமுண்டாகும்" என்று நாராயணன் மெதுவாய் பிரஸ்தாபித்தார். "உங்களெல்லோருக்கும் நல்லகாலம் வரவேண்டுமென்று பிரார்த்திப்பவள் நான்தானே. ஆகையால் நானே அந்த ரக்ஷையைக் கட்டிக்கொண்டு சாமியார் படத்தையும் பூஜிக்கிறேன்" என்று மீனாக்ஷி தெரிவித்தாள். மற்றவர்களுக்கு இது உசிதமென்றே தோன்றியதால் அவர்களும் இதற்குச் சம்மதித்தார்கள். இதற்கிடையில் சானம்மாளைப் பார்த்து வரச் சென்றிருந்த வேலைக்காரி திரும்பி வந்து "அம்மா! அடுத்த தெருவில் இருக்கும் கலியாண வீட்டில் சானம்மாள் சமையல் செய்ய ஒப்புக்கொண்டிருக்கிறாள். 'காய்ச்சலென்று ஏன் புளுகினாய்' என்றுகேட்டேன். 'ஆமாம், தினம் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் கிடைப்பதை விட்டு உங்கம்மாள் கொடுக்கும் ஏழு ரூபாய் மாதச் சம்பளத்திற்குக் கை கட்டி ஓடிவருவேனோ' என்று பதில் சொன்னாள்" என்று கூறினாள். "ஆமாம், ஓட்டலிலிருந்து காப்பிவாங்கி வரும்போது நான் கூட சானம்மாளைப் பார்த்தேனே. தீர்த்தக் குடத்துடன் சென்றுகொண்டிருந்தாள்" என்றார் நாராயணன். "காய்ச்சலென்று பொய் சொன்னாயே, வீட்டிற்கு வா என்று கூப்பிடக் கூடாதோ" என்று மீனாக்ஷி கேட்டாள். "காய்ச்சலென்று அவள் சாக்குச் சொல்லியனுப்பியதை நான் மறந்துவிட்டேன்" என்று நாராயணன் சமாளித்துக்கொண்டார். தன்னிடம் சானம்மாள் பொய் பேசியதுபற்றி மீனாக்ஷிக்குக் கோபம்பொங்கிவிட்டது. 'இந்த தரித்திரத்தை வீட்டுவேலைக்கு வைத்ததிலிருந்து வீட்டிலும் தரித்திரம் வந்துவிட்டது. நல்லதிருக்கட்டும், அவளைத் தொலைத்துவிட்டு இனி நானே சமைத்துவிடுகிறேன். அதிருஷ்டம் வரும் வேளையில் அந்த மூதேவியைத் திரும்ப வேலைக்கு அமர்த்தவே வேண்டாம்' என்று மீனாக்ஷி தீர்மானித்தாள்.

ரக்ஷையை மீனாக்ஷி கட்டிக்கொண்டதிலிருந்து அக்குடும்பத்தில் ஒவ்வொருவருக்கும் சுறுசுறுப்பு உண்டாயிற்று. சங்கரி தன் தாய்க்கு உதவியாகப் பலவேலைகள் செய்யலானாள். மணியன் ஊக்கத்துடன் பாடம் படித்ததுடன் வீட்டிற்கு வேண்டிய தண்ணீரை நிறப்பி வேஷ்டிகளைத் தோய்த்து உலர்த்தி வேளா வேளைக்குப் பள்ளிக்கூடம் செல்லவாரம்பித்தான். அதிருஷ்டம் வரப்போவதற்கறிகுறியாக கணபதி சரிவரத் தனது பாடங்களை ஒப்புவித்து வாத்தியாரிடம் குட்டுப்படாமலிருந்தான். விடிந்து ஜாமம்வரைப் புகையிலை போட்டு மெல்லும் துர்வழக்கத்தை நாராயணன் விட்டுவிட்டதுடன் பத்துமணிக்கு ஆபீஸ் என்றால் ஒன்பது மணிக்கே ஆபீஸ் வாயிலிற் தயாராகவிருக்கலானார். மீனாக்ஷிக்கு அவள் தேகத்துடன் பிறந்திருந்த மமதையும் சோம்பலுமொழிந்து வீட்டு வேலைகளைப் பொறுப்புடன் செய்ய வாரம்பித்தாள். இவ்வாறு அக்குடும்பத்தினர்கள் தமது சோம்பலை விடுத்து அதிருஷ்டத்தை வரவேற்பதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தனர். மீனாக்ஷி குடும்பக்காரியங்களைக் கவனிக்க ஆரம்பித்ததிலிருந்து வீடு சுத்தமாகவும் சமையல் ருசியுள்ளதாகவும் இருந்தது. சமையலறையின் ஒட்டடைகளையடிக்க மீனாக்ஷி மூன்றுநாள் சிரமப்பட்டாள். ஒரு மாதகாலம் வரை இவ்வீட்டிலிருந்து வெளிப்படும் குப்பை குப்பைவண்டிக்கடங்காது தெருவிற் போர்போலக் குவிந்து கிடந்தது. தீர்த்தப் பாத்திரங்களின் உட்புறம் சுத்தமாக இரண்டு மாதம் பிடித்தது. சுத்தமாய்த் தேய்த்துத் தண்ணீர் பிடித்து வைத்திருக்கும் பித்தளை அண்டாவும், அடுக்காய்வைத்து மூடியிருக்கும் சாமான்கள்கொண்ட சட்டிபானைகளும், மெழுகிக் கோலமிட்டிருக்கும் அடுப்பங்கரையும், விடிவதற்குமுன்னதாகவே சாணி தெளித்துத்தெருவிலிடப்பட்டிருக்கும் அழகிய கோலமும் அதிருஷ்டத்தை 'வா! வா!!' என்று கூவியழைப்பது போலிருந்தன. ரக்ஷையின் மகிமையால் மணியன் பரிக்ஷையில் முதற் பையனாகத் தேறியதுடன் உபகாரச் சம்பளத்துடன் மேல் வகுப்பிற் சேர்ந்தான். எல்லாருக்கும் முதலில் வந்துவிடும் நாராயணனைக் கண்டு ஆபீஸிலுள்ள மானேஜருக்கு திருப்தியேற்பட்டதினால் அவரை சப் எடிடர் வகுப்பிற்கு உயர்த்தி மாதம் நூறு ரூபாயாகச் சம்பளத்தையும் உயர்த்தினார். விருந்தாளியாக வந்திருந்த கனவான் ஒருவர் மீனாக்ஷியின் குடும்ப நிர்வாகத்தையும், சங்கரி ஓடி ஓடி வீட்டு வேலை செய்வதையும் கண்டு மனமகிழ்ந்து தமது மகனுக்குச் சங்கரியை விவாகம் செய்து கொள்ளுவதாயும், மனப்பொருத்தமே போதுமென்றும், தமக்கு வரதக்ஷிணை பைசாவும் தேவையில்லை என்றும், மருமகளுக்கு ஐயாயிரம் ரூபாய் நகைகளிட்டு நிச்சயதாம்பூலம் செய்து கொள்ளுவதாயும் தெரிவித்தார். கணவனுக்கு சப் எடிடர் வேலையும் நூறு ரூபாய் சம்பளமும், மணியனுக்கு உபகாரச் சம்பளத்துடன் மேற்படிப்பும், வயது வரும் தருணத்திலிருக்கும் பெண்ணுக்கு வரதக்ஷிணையின்றி நல்ல இடமும் கிடைத்ததும் இவைகள் எல்லாம் தன் கழுத்திலுள்ள ரக்ஷையின் மகிமையாலென்றே மீனாக்ஷி மனம் பூரித்திருந்தாள்; அதிருஷ்டம் என்பது சாமனியமா? அது மனம் வைத்தாற் பாழ் குடிசையும் மறு நிமிஷத்திற் பெரிய அரண்மனையாய்விடுமன்றோ! அதிலும் மகானாகிய சாமியாரால் அளிக்கப்பட்ட ரக்ஷையினால் ஏற்படும் அதிருஷ்டத்திற்குக் காலதாமதமுண்டா? கெடுநாட்களாகத் தம்பியுடன் சாவு வாழ்வு முகவிழியற்று அடுத்த தெருவில் வசித்துக்கொண்டிருந்த நாராயணனின் தமையனார் தமது மரணாந்த காலத்தில் கணபதியை சுவீகார புத்திரனாக ஏற்றுக்கொண்டார். இதனால் சுமார் லக்ஷம் ரூபாய் பொறுமானமுள்ள ஐவேஜிகள் நாராயணனின் ஆதீனத்திலகப்பட்டன. அதிருஷ்டம் அதிகரிக்க அதிகரிக்க சாமியாரின் படத்திற்கு பூஜை நிவேதனங்களும் பூமாலைகளும் அதிகரிக்கத் தொடங்கின. ஏராளமானசெல்வம் கிடைத்தும் மீனாக்ஷி குடும்பவேலைகளையும் நாராயணன் ஆபீஸ்உத்தியோகத்தையும் விட்டுவிடாமல்சிரத்தையுடன் கைக்கொண்டிருந்தனர்.

சங்கரிக்கு விவாக முகூர்த்தம் நிச்சயிக்கப்பட்டது. நிச்சய தாம்பூல காலத்தில் அணியப்பெற்ற ஐயாயிரம் ரூபாய் நகைகளுடன் மணமகள் விளங்கினாள். விவாக சமயத்தில் அம்மான் தோள் தூக்குவது வழக்கமாயிற்றே. அதிலும் மீனாக்ஷிக்கு உடன்பிறந்தானென்றால் சாமானியமா. அவனால் அனுப்பிய ரக்ஷையின் மகிமையாலன்றோ இவ்வளவு உன்னதஸ்திதி அக்குடும்பத்திற்கேற்பட்டிருக்கிறது. அத்தகைய அம்மான் தோள் தூக்காவிடின் மீனாக்ஷிக்கு மனம் வருந்தாதா? தன் தம்பி தோள் தூக்கி, நூறு ரூபாயில் சோமன் ஜோடும் வைர மோதிரமும் அவனுக்கு மரியாதை செய்யவேண்டுமென்பது மீனாக்ஷியின் ஆசையாகவிருந்தது. "எல்லாருக்கும் உடன்பிறந்தான், எனக்கும் உடன்பிறந்தானா. நாய் பேய்களுடன் பிறந்ததெல்லாம்— பெருமை பேசிக்கொள்ளுகிறதே. கஸ்தூரிபோல ஒரே தம்பி இருக்க அவன் இல்லாது நான் எப்படி என் மகளுக்கு விவாகம் நடத்துவேன். சாமியார் ரக்ஷை எனக்கே இவ்வளவு அதிருஷ்டமளித்திருக்கிறதே, சாமியார் அருகிலேயே இருக்கும் அவன் இப்பொழுது ஒரு கோடீசுவரனாகவே இருப்பான். கடிதமெழுதுவோமென்றால் விலாசம் தெரியவில்லையே. மகாகணபதே! விக்கினேசுவரா! என் உடன்பிறந்தான் வந்து சேர்ந்தால் உமக்கு ஆயிரத்தெட்டு மோதகம் நிவேதனம் செய்கிறேனே" என்று மீனாக்ஷி அங்கலாய்த்துக்கொண்டிருந்தாள்.

முகூர்த்த நாள் வந்துவிட்டது. வாழைக் கமுகுகளால் அலங்கரிக்கப்பட்ட கொட்டகைப் பந்தல் தெருவை யடைத்து நின்றது. மங்கள வாத்தியம் கோஷிக்க மணச் சடங்கு துவங்கிற்று. "சரி, பெண்ணுக்கு அம்மான் எங்கே? ஓகோ, சரிதான். இந்தகாலத்தில் பெரிய உத்தியோகஸ்தருக்கு லீவு கிடைப்பது கடினம். அதனாலென்ன, பாதகமில்லை. தோள் தூக்கும் வழக்கமே இந்த காலத்தில் ஒழிந்துவிட்டதே. சரி, நாழிகையாயிற்று" என்று முன்னுக்குப்பின் பேசி வாத்தியார் துரிதப்படுத்தினார். இச்சமயம் முத்துகிருஷ்ணன் கலியாண வீட்டிற்குள் வருவானாயின் இதைக் காட்டிலும் மீனாக்ஷிக்கு வேறு சந்தோஷமுண்டோ. ஓடிச் சென்று அவனை எதிர்கொண்டழைத்து வந்தாள். அவசரமாக அவனுக்கு காப்பி பலகாரங்களளித்து, மணப்பெண்ணைத் தோள் தூக்கச்செய்து, சோமன் ஜோடு வைரமோதிரம் இவைகளை மரியாதை செய்து மகிழ்ந்தாள். "மாமா! உங்கள் பெட்டி படுக்கை இவைகள் எல்லாம் எங்கே" என்று மணியன் விசாரித்தான். நாராயணன் மைத்துனனுக்கு என்றுமில்லாத மரியாதை காட்டி அன்புடன் பேசிக்கொண்டிருந்தார். தமக்கையின் வைபவங் கண்டு ஒன்றுந் தோன்றாது முத்துகிருஷ்ணன் ஆச்சரியத்திலாழ்ந்து கிடந்தான். "என் தம்பி என்றைக்கும் பெரிய மனிதன்தான். அவனுடைய அடக்கவணக்கத்தைப் பாருங்கள். அவனுக்கிருக்கும் அந்தஸ்திற்கு இன்னொருவனானால் எவ்வளவு டாம்பீகமாயிருப்பான் தெரியுமா" என்று கணவனிடம் மீனாக்ஷி பெருமை பேசிக்கொண்டாள். விவாகச் சடங்குகள் முடிவுற்றுப் பகல் போஜனமும் நடைபெற்றது. சிங்கப்பூரிலிருந்து வந்திருக்கும் தம்பி சாமியாருடைய அனுக்கிரகத்தால் பவுனும் மோகராவும் கோட்டுமாக ஏராளமாய்க் கொண்டு வந்திருப்பதைக் கண்டு களிக்க வேண்டுமென்ற ஆசையால் மீனாக்ஷி தன் தம்-

பிலை பழைத்துத் தனியான விடத்தில் இரகசியமாய் யோகக்ஷேமம் விசாரிக்கத் தொடங்கினுள். "அக்கா! நீ இவ்வாறு சௌக்கியமாயிருப்பது கண்டு எனக்குச் சந்தோஷமாக விருக்கிறது" என்றுன் முத்து.

உன்னுடன் பிறந்ததிலிருந்தே நான் அதிருஷ்டசாலிதான். நான் நன்றுயிருக்க வேண்டுமென்பதுதானே உன் கோரிக்கை. அந்தப்படியே நல்ல ஸ்திதியிலு மிருக்கிறேன். நல்ல வேளையாய் நீ இன்று வந்து சேர்ந்தாயே. இதுவும் எனக்கொரு அதிருஷ்டமே" என்றுள் மீனுக்ஷி. "இச்சமயம் நீயிருக்கும் நிலமை அதிருஷ்டத்தாலன்றி முயற்சியால் கிடைப்பதன்று. மெத்த சந்தோஷம்" என்று முத்து சொல்லவும் "ஆம், அதற்கென்ன தடை. இதுவெல்லாம் நீயனுப்பிய தாயத்தின் மகிமையால்தான் உண்டாயிருக்கிறது. இதோபார்! அதைக்கழுத்திலேயே அணிந்து கொண்டிருக்கிறேன்" என்று மீனுக்ஷி ரக்ஷையைத் தொட்டுக் காட்டினுள். "எலலாம சரிதான், இதில ஒருதவறுதல ஏற்பட்டிருந்து நான் சென்றவாரமவரை அதைத்தெரிந்துகொள்ளாமலேஇருந்துவிட்டேன. என்னவெனில உன் கழுத்திலிருக்கும் தாயத்தில அந்த இரசமணி அடைக்கப்படவிலலை. வெறும் கூடுமட்டுமே இருக்கிறதென்றுன் முத்து. "இரசமணியில்லாமல் இவ்வளவு அதிருஷ்டம் திடீரென்று உண்டாகுமா" என்று மீனுக்ஷி ஆச்சரியத்துடன் வினவினுள். "தாயத்தைச செய்து கொடுத்த தட்டான்தான் இவ்வுண்மையை எனக்கெடுத்துச் சொன்னுன்." "ஆனுல் தட்டான் அதைத் தனது சொந்த உபயோகத்திற்குத் திருடிக்கொண்டானு?" "ஆம், அதையவன வாயைக்கொண்டே வெளியிட்டுக்கொண்டான்." "ஆனுல் அவன இப்பொழுது பெரும் பணக்காரனுயிருப்பானே." "இல்லை, இல்லை. நான் சொனன சாமியார் போலிச்சாமியாராம். ரங்கூனில் ஏதோ பெருத்த குற்றங்கள் பலபுரிந்து போலீசாருக்கொளிந்து சிங்கப்பூருக்கு ஓடிவந்து அவதூதசாமி என்று வேஷமிட்டு நடித்தாராம். முடிவில் போலீஸ் சிப்பாயிகள் சென்றவாரம் சாமியாரைக் குற்றவாளி மலையாண்டியென வறிந்து அரஸ்ட் செய்து ஜெயிலுக்குச் சென்றுர்கள். இதனுலேதான் இரசமணியைத் தாயததில் அடைத்துத் தன்கழுத்திலணிந்து கொண்டிருந்த தட்டான் என்னை பரிகாசம் செய்து உண்மையை வெளியிட்டுவிட்டான். எனக்கு அங்கு ஒருவேலையும் கிடைக்காது போகவே சில கனவான்களிடம் கப்பல் சார்ஜுக்கு யாசகம் வாங்கி வந்து சேர்ந்தேன்" என்று முத்துகிருஷ்ணன்சொல்லி முடித்தான். "ஆனுல் இந்தத் தாயத்தில ஒன்றுமில்லையா? சாமியார் போலிச் சாமிதானு. அது போனுல் போகட்டும். இப்போது ஒன்றும் அம்பலத்தில் அவல்பொரியவிழ்த்துவிடாதே! சுபமென்று வாயை மூடிக்கொண்டிரு. எல்லாம் ரக்ஷையின் அதிருஷ்டமென்றே இருக்கட்டும். நீயும் என்னிடமே இருந்துகொண்டு பசியாது சாப்பிடலாம. உள்ளதை உன் அத்தம்பியர் அறிந்து கொண்டால் எல்லாம தமையனுக்கு சுவீகாரமளித்ததால் ஏற்பட்ட அதிருஷ்டமென்று சொல்லி உன்னையும் வீட்டைவிட்டுத் துரத்திவிடுவார். என்ன இருந்தாலும் உன்னுடு பிறந்துவிட்டபடியால் எனக்குப் பாசமவிடாது. எல்லாம உன்னுல், உன் ரக்ஷையால கிடைததாகவே இருக்கடடும" என்றுமீனுக்ஷிகூறினுள். "அக்கா! இச்சமாசாரத்தைப பததிரிகைகளில் படித்துவிட்டால் அத்தம்பியர் தெரிந்துகொள்ளமாட்டாரா"வென்றுன முதது. "நமக்கு சாமியார் கொடுத்த ரக்ஷை பலிததுவிட்டது. இனி சாமியார் எக்கேடுகெட்டால் என்ன என்று நான் அவருக்குச் சமாதானம் கூறிவிடமாட்டேனு" என்று மீனுக்ஷி பெருமை பேசிக் கொண்டாள். சாணமமாள் வழக்கம்போல வீட்டு வேலைக்கு வந்திருக்கும பக்ஷத்திலும போலிசசாமியாரின ரக்ஷையை முததுகிருஷ்ணன் அனுப்பாமலிருந்தவிடினும மீனுக்ஷி உடம்புவணஙகி வீட்டுவேலை செய்யவோ அக்குடுமபத்தினர் தமக்குள்ள சோம்பலைவிட்டு உழைக்கவோ இடமேற்பட்டிருதல்லவா! ஆகையால அககுடுமபத்தின நற்காலத்திற்கு மூலகாரணர்களான சாணமமாள் சாமியார் இருவருக்கும் மீனுக்ஷி நன்றிபாராட்டல் அவசியந்தான. பிறகு அவளிஷ்டம்!

சுபம்.

# கூட்டுறவு சங்கங்களும் மாதர்களின் உரிமையும்.

ஸ்ரீமான் எஸ். கே. எக்ஞ நாராயணய்யர், M.A.

நமது இந்திய நாட்டின் கூட்டுறவு சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு 21 வருடங்களாயின. நமது மாகாணத்திலேயே 8000 சங்கங்கள் ஆங்காங்கு கிராமங்களிலும் நகரங்களிலும் ஸ்தாபிக்கப்பட்டு, சில மங்கியும், தூங்கியும், சில வர்ஜிதமாகவும், வேறு சில சுமாராகவும் வேலை செய்துகொண்டு வருகின்றன. இச்சங்கங்களில் 100 க்கு 99-ம் ஜில்லாபாங்குகளிலிருந்து கடன் வாங்கி மெம்பர்களுக்கு குறியகாலக் கடனுகவும் நீண்டகாலக்கடனுகவும் கொடுத்து பொருளுதவி செய்து வருகின்றன. திருவல்லிக்கேணியிலிருக்கும் பெயர்பெற்ற ஸ்டோர் போல மளிகை சாமான்கள் மெம்பர்களுக்கு ரொக்க விலைக்கு விற்றுவரும் பண்டகசாலைகள் மிகக்குறைவே. கோயமுத்தூர், மதுரை, விழுப்புரம் முதலான சில ஊர்களில்மாத்திரம் நமது தமிழ் நாட்டில் விருத்தியாய் வரும் ஸ்டோர்கள் இருக்கின்றன. ஆங்கில தேசத்திலோ என்றுல் கூட்டுறவு சங்கம் என்பது ஸ்டோருக்குப் பெயரே தவிரக் கடன் கொடுக்கும் பாங்குகளுக்கு அப்பெயரளிப்பது வழக்கமில்லை. 40லக்ஷம் ஜனங்களுக்குமேல் கூட்டுறவு ஸ்டோர்களில் மெம்பர்களாயிருக்கிறுர்கள். இந்த மெம்பர்களுக்கு வேண்டும் துணிமணிகள், அப்பம், தேயிலை முதலிய தினசரிச் சாமான்களை எல்லாம் அந்த சங்கத்தின் சொந்தத் தொழிற்சாலைகளிலேயே செய்கிறுர்கள். அந்த சங்கத்திற்கு இந்தியாவிலும் இலங்கைத்தீவிலுமாக 20 ஆயிரம் ஏக்கருவிற்கு மேலான தேயிலைத் தோட்டங்கள் இருக்கின்றன என்பதிலிருந்து அவர்களின் வியாபாரத்தின் அபிவிருத்தி ஸ்திதியை நாம் தெரிந்துகொள்ளலாம். சீமையிலிருக்கும் கூட்டுறவு சங்கங்களில் மெம்பர்கள் பெரும்பாலும் ஸ்திரீகளே. புருஷன் கஷ்டப்பட்டுச் சம்பாதித்துக்கொண்டு வரும் பணத்தை சிக்கனமாய் செலவிடவேண்டியது மாதர்களேயாகையால் அவர்கள் இந்தக் கூட்டுறவு சங்கத்தின் நன்மையை உணர்ந்து லக்ஷக்கணக்காகச் சேர்ந்துஅதனுல்கிடைக்கும் குணங்களை அனுபவித்துவருகிறுர்கள். நமது ராஜ்யத்திலும் ஆயிரக்கணக்காக ஸ்திரீகள் இந்தக்கூட்டுறவு சங்கங்களிற் சேர்ந்து பண்டகசாலைகளை விருத்தி பண்ணினுல்மாத்திரம் கூட்டுறவானது செழித்தோங்கும். இல்லாவிடில் கேவலம் கடன் வாங்கும் சங்கங்களாகக் கூட்டுறவு சங்கங்கள் இருந்துவிடும். அதனுல், என் பிரிய சகோதரிகளே, கூட்டுறவு பண்டகசாலைகளிற் சேருங்கள். அவைகளால் உண்டாகும் பயன்களை நீங்களும் அனுபவித்து அப்பயன்களை உங்கள் புருஷர்களும் சகோதரர்களும் குழந்தைகளும் அடையும்படிச் செய்யுங்கள்.

அப்படிக்குக் கூட்டுறவு பண்டகசாலைகளிற் சேர்ந்தால் என்ன பயன் என்பதைக் கீழ்க்கண்ட சம்பாஷணையைப்படித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

# ஸ்திரீகளும் கூட்டுறவுப் பண்டகசாலையில் ஏன் மெம்பராக இருக்கவேண்டும்?

கும்பகோணம் கூட்டுறவுப் பண்டகசாலைப் பிரசுரம்.

(ஐயராமன் தெரு—மாலை)

காமாக்ஷி:-மாமி, எங்காத்துக்குள்ளே கொஞ்சம் வாருங்கள்.

மாமி:வரேன், கொஞ்சம் வேலையிருக்கு; சாலுவாத்துக்குப் போகவேணும்.

கா. சீக்கிரம் போய்விடலாம்.

மா. சரி, என்ன விசேஷம்?

கா. ஒன்றுமில்லை; எங்காத்துக்காரர் மத்தியானம் தஞ்சாவூருக்குப் போயிருக்கார். ராத்திரிமட்டுக்கும் எனக்குத் துணையாக வந்து எங்காத்தில் படுத்துக்கொள்ள மாட்டேளா?

மா. அதற்கென்ன, வரேன். இதுக்குக்கூட நான் உபகாரமில்லாமல் இருப்பேனா? அதென்ன, மஞ்சளா உணத்தியிருக்கிறது. நன்னா இருக்கே. எந்தக் கடையில் வாங்கினது?

கா. பெரியதெருவிலே பல சாதாரண மனிதர்கள் சேர்ந்து (புதிய ஸ்டோர் என்று) ஒரு சரக்குச்சாலை வைத்திருக்கார்கள். அதிலே வாங்கினது; கடையில் வாங்கவில்லை.

மா. அதென்ன அது? போஜன சாலை, பாடசாலை என்பதுபோலவா அது? பலசரக்குச் சாமான்களெல்லாம் இனாமாகக் கொடுப்பாளா?

கா. இல்லை மாமி, அப்படியில்லை. அது பண்டங்களெல்லாம் வைக்கப்பட்டிருக்கும் ஒரு சாலை. சாதாரணக் கடைகளில் சாமான்கள் விற்பதுபோல, அங்கேயும் அந்தச் சாமான்களை விற்கத்தான் செய்கிறார்கள். ஆனால் கடைக்காரன் எல்லா ஜனங்களுக்கும் தன் சாமான்களை விற்பான். இங்கே அந்தச் சாமான்களை அதில் சேர்ந்த மெம்பர்களுக்குத்தான் கொடுப்பார்கள்.

மா. ஆனால் நான் போய்க்கேட்டால் கொடுக்க மாட்டார்களா?

கா. நீங்கள் மெம்பராயிருந்தால் கொடுப்பார்கள். முட்டிப்போனால் ஒரு மெம்பர் பேரில் எழுதிக்கொண்டு மற்றவர்களுக்குங் கொடுக்கிறார்கள்.

மா. மெம்பரென்றாலென்ன?

கா. அது ஒரு இங்கிலீஷ் வார்த்தை. ஏதாவது ஒரு கூட்டம், சபை இவைகளில் சேர்ந்த ஒவ்வொரு மனுஷாளுக்கும் ஏற்பட்ட பொதுப் பெயர்.

மா. ஆனால் அதில் நான் மெம்பர் ஆகலாமோ?

கா. ஆமாம்; மெம்பராகலாம். ஸ்திரீகளும் புருஷர்களும் மெம்பராகலாம். பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர்களாக இருக்கவேண்டும்.

மா. மெம்பர் ஆனால் என்ன பிரயோஜனம்? இந்தச் சாலையில் வாங்குவதை வேறு கடையிலே தான் வாங்கிவிட்டுப்போகிறோம். மெம்பர் ஆவதற்கு என்ன செய்யணும்?

கா. ஐந்தேகால் ரூபாய்கொடுத்து ஒரு பங்கு முதலில் எடுத்துக் கொள்ளணும். அல்லது ஒரு கால்ரூபாய் முதலில் கொடுத்துவிட்டு அப்புறம் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுக்கலாம்.



19037

மா. நன்னா ஆச்சு. முதலில் பணம்கொடுத்து மெம்பராகணும்; அப்புறம் ஒரு காதம் கடந்து பெரிய தெருவிலே போய்ச் சாமான் வாங்கணும். அப்படியாவது கடனாவது கொடுப்பாளா?

கா. கடன்என்பதுகொஞ்சங்கூடக்கிடையாது. எல்லாம் ரொக்கவிலைக்குத்தான் கொடுப்பார்கள். ஆனால் உங்கள்பேரில் ஒரு நம்பர் போட்டு ஒரு ரோக்கா (ரசீது) கொடுப்பார்கள். நீங்கள் சாலுவாத்துக்குப் போகணும் என்று சொன்னீர்களே.

மா. ஆமாம், போகணும். நீ ஏதோ ஒரு புது சமாசாரம் சொன்னையே என்று கேட்டுக்கொண்டிருந்தேன். கொஞ்சநாழிகழித்துத்தான் போகிறேனே. நீ என்னமோ நம்பர் போட்டுக் கொடுப்பா என்று சொன்னாயே; என்ன அது? வியாச்சியம் போடாளே அதுவா?

கா. இல்லை. நம்பர் என்பதும் ஒரு இங்கிலீஷ் வார்த்தை. அதற்கு எண், இலக்கம் என்று அர்த்தம். நீங்கள் மெம்பராகச் சேரும்போது வரிசைக் கிரமப்படி உங்கள் பெயருக்கு எதிரே ஒரு நம்பர் எண்ணிக்கைபோட்டு ரசீது கொடுப்பார்கள். அந்த எண்ணிக்கையையும் உங்கள் பெயரையும் நீங்கள் சாமான் வாங்கும் போதெல்லாம் ஒரு அச்சுப்போட்ட கடிதத்தில் எழுதி வாங்கின சாமான் வகையையும் அவைகளின் அளவையும் விலையையும் குறிப்பிட்டு அதை ரசீதாகக் கொடுப்பார்கள்.

மா. நம்ம செட்டிகடையில் கூடத்தான் தருகிறான். இதிலென்ன விசேஷம்? அவன்கூட இப்போ அச்சுக்கடுதாசி வைத்துக்கொண்டிரு[illegible]யெல்லாம் ஓலைக் கணக்காயிருந்தது. பிறகு வெறுங்கடுதாசியிலே எழுதிக் கொடுத்தான். இப்பொழுது அச்சுக் கடுதாசி ஆய்விட்டது.

கா. இப்பொழுது என்றால் எத்தனை மாசமாச்சு?

மா. அஞ்சாறு மாசமாச்சு.

கா. சரிதான். நான் நினைத்தது சரியாய்ப் போச்சு. இந்த ஸ்டோர் ஏற்பட்டு ஒரு வருஷமாச்சு. இங்கே நடக்கிற நடவடிக்கைகளைப் பார்த்துக்கொண்டு உங்க மாப்பிள்ளைச் செட்டியும் நடக்க ஆரம்பித்து விட்டான். ஆனால் இந்த இரண்டுக்கும் ரொம்ப வித்தியாசம் உண்டு.

மா. அதென்ன; அது?

கா. ஸ்டோரிலே உங்களுக்கு ரசீதுகள் கொடுக்கும்போதெல்லாம் அவைகளுக்கு ஒவ்வொரு காப்பி எடுத்து வைத்துக்கொண்டிருப்பார்கள்.

மா. பாழும் இழவு காப்பி இங்கேயும் வந்து விட்டதா?

கா. இது நம்மாங்களிலே சாப்பிடுகிற காப்பியில்லை. இதுவும் ஒரு இங்கிலீஷ் வார்த்தை. இதற்கு நகல், பிரதி என்று அர்த்தம். நமக்குக் கொடுக்கும் ரசீதை எல்லா வகையிலும் வித்தியாசமில்லாமல் ஒத்திருக்கிற நகலுக்குப் பெயர் அது. அவைகளை ஜாக்கிரதையாய்ச் சேர்த்து வைத்திருப்பார்கள்.

மா. இதிலே என்ன லாபம் நமக்கு?

கா. நம்மபேரிலே ஒரு பக்கமோ அல்லது ஜாஸ்தி பக்கங்களோ போட்டு ஒரு பெரிய பேரேட்டு கணக்குப் புத்தகம் வைத்திருக்கிறார்கள். நாம் மாதாமாதம்

வாங்குகிற [illegible]க்குத் தொகைகளை அதில் பதிந்து வைப்பார்கள்.

மா. கடைபோட்டுச் சில்லரைக்குச் சாமான்களை விற்பதற்கு இவ்வளவு படாடோபங்கள் எதற்கு? எல்லாம் வீண் செலவு. நான் போய்விட்டு அப்புறம் வரேன்.

கா. நல்லது; கட்டாயமாய் வாருங்கள். நீங்கள் இப்போ என்னவோ வீண் செலவு என்று சொன்னீர்களே. அது வீண் இல்லை என்பதை ராத்திரி எடுத்துச் சொல்லுகிறேன்.

மா. சரி. (போகிறாள்.)

இரவு.

மா. காமாக்ஷி, காமாக்ஷி. (கதவைத் தட்டுகிறாள்.)

கா. வந்துவிட்டேன், வந்துவிட்டேன்.

மா. அம்மாடி, இத்தனை நாழியாச்சு ஆத்துக்காரியம் முடிகிறதற்கு. குழந்தைகளெல்லாம் சாப்பிட்டதோ?

கா. சாப்பிட்டாச்சு இரண்டும். இதுவரைக்கும் பக்கத்தில் படுத்துக்கொண்டு தட்டிக்கொண்டிருந்தேன். இப்போதுதான் கண்ணைமூடித்து. நீங்களும் வந்தீர்கள்.

மா. எங்காத்திலேயும் இத்தனை நாழியாச்சு. என் பிள்ளை கச்சேரியிலிருந்து இருட்டவிட்டுத்தான் வந்தான். நீ சாயங்காலம் ஏதோ சொல்லிக்கொண்டு வந்தாயே, அதைப் பூராகவும் சொல்லு. கேட்க ஆசையாயிருக்கிறது.

கா. என் கதையைச் சொல்லுகிறேன் கேளுங்கள். எனக்குப் பிறந்தாம் மதுரையிலே. திருநெல்வேலியிலே வாழ்க்கைப்பட்டேன். எங்காத்திலே எனக்குக் காரியம் ஒன்றும்சொல்லிக்கொடுத்துப்பழக்கிவைக்கலை. புக்காத்துக்குப் போனதும் மாமியார் சாதாரணமாக ஆத்துக்காரியங்களையெல்லாம் செய்துவந்தார். என்னைக் கூட வேலைசெய்யலை என்று அடிக்கடி கோபிப்பார். அப்பொழுது பட்டணத்தில் அவாளுக்கு வேலை. நானும் அசடாய்ச் சும்மா இருந்துட்டேன். மாமியார்காலம் ஆய்விட்டது. அப்புறம் நான்தான் ஆத்துக்காரியமெல்லாம் செய்ய வேண்டிவந்தது. எனக்கு என்ன சாமான் வாங்கறது, எவ்வளவு வாங்கணும், என்னவிலை என்பது ஒன்றும் தெரியாது. ஆத்துக்காராருக்கோ ஆபீஸ்வேலை ஜாஸ்தி. அவாள் ஏதாவது வாங்கிப்போட்டால்தான் உண்டு. அப்பொழுது சம்பளம் ரூ. 80. முதல்தேதிவாங்கினசம்பளம் அஞ்சாம்தேதி ஆறும்தேதிக்குள் செலவாய்ப்போய்விடும். மொத்தமாகச் சாமான் வாங்கிவைத்திருந்தாலும் அடிக்கடி அனேகசாமான்கள் தட்டிப்போய்விடும். அப்போ பக்கத்திலிருந்த கோவிந்தச்செட்டி கடையில் பற்றுவரவுவைத்துக்கொண்டு சாமான்களைக் கடனுக்கு வாங்கிவந்தோம். இப்படி வாங்கிவரும்போது மாசக்கடைசியில் இந்தக்கடனும் ஜாஸ்தியாக ஆய்விடும். ஆனால் அந்தக் கோவிந்தச்செட்டி ரொம்ப நல்லவன். எப்போகேட்டனுப்பினாலும் சாமான் கொடுத்துவிடுவன். சிலமாசங்களில் அவனுக்குப் பூராப்பணத்தையும் கொடுக்கமுடியாமல் போய்விடும். உங்களுக்குந்தான் தெரியுமே. பணம் எப்படிஎல்லாமோ கொஞ்சம் கொஞ்சமாகச் செலவழிந்துவிடுகிறது. ஆகக் கடைசியில் கடன்தான் ஜாஸ்தியாகிக்கொண்டுவந்தது. சம்பளம் நூறு ரூபாயாக ஆச்சு. அப்போவும் கடன்தான் ஜாஸ்தியாச்சு. அப்புறம் மாசம் கொடுபடாத பணத்துக்கு வட்டியும் குட்டிபோட ஆரம்பித்தது.



மா. ஆமாம், எங்காத்திலேயும் அப்படித்தானிருக்கு. ஒருநாளும் கடன் அடைந்தபாடில்லை. நானும் எவ்வளவோ கவனமாய் இருந்து பார்க்கிறேன்.

கா. இப்பொழுது எங்களுக்குக் கடன் கிடையாது. அது எப்படி ஏற்பட்டது என்று சொல்கிறேன், கேளுங்கள். ஆனால் கடன் ரொம்பப் பொல்லாதது. பாம்பு, நெருப்பு இதெல்லாம் நமக்குத் தெரிந்தே நம்மைக் கஷ்டப்படுத்தும். இந்தக் கடன் நமக்குத் தெரியாமலே பெரிதாகி நம்மைச் சித்திரவதைசெய்யும். உங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. என்கதையைச் சொல்கிறேன். நாங்கள் பட்டணத்தில் பெரிய தெருவில் குடியிருந்தோம். அங்கே சில உத்தியோகஸ்தாளும் பள்ளிக்கூடவாத்தியார்களுமாகச் சேர்ந்து ஒரு மாட்டுக் கொட்டகையை ஒரு அறையாக ஏற்படுத்திக்கொண்டுமுதல்முதலாகஸ்டோர் என்ற பண்டகசாலையை ஆரம்பித்தார்கள். அதனுடைய முக்கியலக்ஷணங்கள் (1) கடன்வாங்குவதுமில்லை, ஒருபொழுதும் கடன்கொடுப்பதுமில்லை; (2) கூடியவரை மெம்பர்களின் தேவைகளை அறிந்தே சாமான்களைச் சேகரித்து அவர்களுக்கு விற்றல்; (3) எஜமானனிடத்தில் நாய்களுக்கு எவ்வளவு விசுவாசம் இருக்கிறதென்று கர்ணபரம்பரையாகச் சொல்லப்படுகிறதோ அதைவிட ஜாஸ்திவிசுவாசம் மெம்பர்களுக்கு ஸ்டோரிடத்தில் இருக்க வேண்டும்; (4) அக்கம்பக்கத்துக் கடைவிலைக்குக் குறைந்தாவது கொள்முதலுக்குக் குறைந்தாவது சாமான்களை விற்பதில்லை; (5) ஒவ்வொரு மெம்பருக்கும் ஒரே வோட்டுத்தான் உண்டு; (6) ஏழை, பணக்காரன், ஸ்திரீகள், புருஷர்கள் யாவரும் மெம்பர் ஆகலாம்; (7) சரியான அளவு நிறைகளுடன் சாமான்களை விற்றல்; (8) சாமான்வாங்கிய வீதப்படி லாபத்தைப் பிரித்துக்கொடுத்தல். இப்படி இன்னும் லக்ஷணங்கள் இருக்கின்றன.

மா. அம்மாடி! மணலை லேசாகக் கயிறாகத் திரித்துவிடலாம்போலிருக்கு. நீ சொல்கிறது செய்யமுடியாதுபோலிருக்கே.

கா. அப்படித்தான்தோன்றும். ஆனால் இவைகளையெல்லாம் அங்கே நன்றாக நடத்திவருகிறார்கள். எல்லாவற்றிற்கும் மனுஷாளும் விடாமுயற்சியும் வேண்டும். நான் என் கதையைச் சொல்றேன். ஒருநாள் எங்காத்துக்காரர் 'இனிமேல் சாமான் எல்லாம் ஸ்டோரிலே வாங்க வேண்டும்' என்று சொல்லி அதனுடைய நடவடிக்கைகளையும் விதிகளையும் எடுத்துச்சொன்னார். "பழய செட்டிக்குக் கடன் கொடுக்கவேண்டுமே; அதைத் தீர்த்துக்கொண்டல்லவா வேறு கடைக்குப்போகலாம்" என்று சொன்னேன். "வாஸ்தவந்தான். ஆனால் நம்முடைய கடன் ஒருநாளும் அடைபடும் போலத் தோன்றவில்லையே. இனிமேல் செட்டாகக் குடித்தனம் பண்ணவேண்டும். கடனுக்கு ஒருசாமானும் வாங்கக் கூடாது. இப்படி ஸ்டோரிலேயே நம்முடைய ஆத்துச் சாமான்களை வாங்கிவந்தால் வருஷக்கடைசியில் கணக்குப்படி நமக்குக் கொஞ்சம் பணம்கிடைக்கும். அதைக்கொண்டு அவன் கடனை அடைத்துவிடலாம்" என்று சொன்னார். நானும் "சரிதான், கடனுக்கு வாங்குகிறபோ

தெல்லாம் அவனிடத்தில் வாங்கிவிட்டு, இப்பொழுது ரொக்கத்துக்கு வாங்குகிற போதுவேறு இடத்துக்குப் போகலாமா" என்று ஆக்ஷேபித்தேன். அவாளும் அதை ஒப்புக்கொண்டார்கள். "ஆனால், வேறு வழியில்லையே. இப்பொழுது ரொக்கத்துக்கு நம்ம செட்டியிடத்திலேயே வாங்குகிறது என்று வைத்துக்கொண்டாலும் நமக்கு என்றும் திரும்பிப் பலன் கிடைக்காதே. ஸ்டோரில் வாங்கிவந்தால் ஏதாவது நமக்கு மீதம் கிடைக்கும் என்கிற நிச்சயமிருக்கிறது" என்று திரும்பவும் சொன்னார்கள்.

மா. உங்களுக்கு அப்படி ஏதாவது கிடைத்ததோ? அதை முதலிலே சொல்லு.

கா. நாங்கள் துணிமணிகள் தவிர மற்ற சாமான்களையெல்லாம் ஸ்டோரிலேயே வாங்கிவந்தோம். முதல்வருஷத்திலே எங்களுடைய கணக்குப்படி எங்களுக்கு இருபத்தைந்து ரூ. கிடைத்தது. இன்னும ஜாஸ்தியாகவே அடுத்த வருஷங்களில் வாங்க ஆரம்பித்தோம். ருசிகண்ட பூனை விடுமா? எங்களுக்கு ஜாஸ்தியாகவே மீதப்பணம் கிடைத்தது. எனக்குப் புடவை வாங்குகிறதுக்குக் கண்டுவிட்டது.

மா. தேவலையே. இவ்வளவு ரூபாய் திரும்பிக் கொடுப்பதற்கு எபபடி முடியும? இப்படி எல்லாருக்கும் கொடுக்கவேணும் இல்லையா? ஏதாவது கள்ளத்தனம் இருக்கவேண்டும்.

கா. அவாளவாள் எவ்வளவு ரூபாய்க்குச் சாமான் வாங்கினாளோ அதற்குத் தகுந்தபடிதான் மீதப்பணத்தை ஈவுவைத்துக் கொடுப்பார்கள். நாங்கள் முதல்வருஷத்தில் பட்டணத்து ஸ்டோரில 800 ரூ.க்குச் சாமான் வாங்கினோம். ரூ.க்கு அரை அணுவீதம் மீதப்பணம் கொடுத்தார்கள். எங்களுக்கு அப்படியாக ரூ. இருபத்தைந்து கிடைத்தது. எங்க அடுத்தாத்திலே ஒரு ராயர் இருந்தார். அவாளாத்திலே ரூ. 1500-க்கு வாங்கினார்கள். அதற்குத் தகுந்தபடி அவாளுக்கு நாற்பத்தேழு ரூபாய் கிடைத்தது. எங்காத்திலே ஒண்டுக்குடிக்கு ஒரு சாஸ்திரிகள் இருந்தார். அவாளாத்திலே 200 ரூ.க்கு வாங்கினார்கள். அவாளுக்கு ஆறேகால் ரூபா கிடைத்தது. அந்த வருஷத்தில் 40000 ரூ.க்கு சாமான்கள் விற்றதாம். இப்படியாக 1250 ரூபாயை மெம்பர்களுக்குள் அவர்கள் சாமான்கள் வாங்கின வீதப்படி கொடுத்தார்கள். இதிலே கள்ளத்தனம் ஒன்றுமில்லை. வேலையாட்களுக்குச் சம்பளம கொடுத்திருக்கிறார்கள். எதிர்பாராத ஆபத்துக்காலங்களில் உபயோகமாக இருக்கும்பொருட்டு வருஷாவருஷம் ஒரு க்ஷேமநிதி ஒன்று சேர்த்து வருகிறார்கள். இந்த நிதியும் பெருகிக்கொண்டே வருகிறது. இதுவரையும் ஒரு ஆபத்தும வரவில்லை.

மா. ஆனால் வருஷாவருஷம் இவ்வளவு ஆதாயம் கிடைக்குமா?

கா. நேற்று வீதிவழியாய் ஒரு திவ்யமான இரட்டைக்குதிரைவண்டி போயிற்று. குதிரை வெகு அழகாயிருந்தது; வண்டியோ நன்றாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. வண்டிக்காரனைப் பார்த்தால் ஒரு பெரிய ராஜாமாதிரியிருந்தது; ஆனால் உள்ளே ஒரு சாதாரண மனிதர்தான் உட்கார்ந்திருந்தார். அடுத்தாத்துக் காரியை "அவர் யார் தெரியுமா" என்று கேட்டேன். "அவர்தான் இந்த ஊர் வெங்கடேசன் செட்டியார்; பெரிய மளிகை வியாபாரி" என்று சொன்னார்.



வெங்கடேசன் செட்டியா? அவனுக்கு என்ன, மகாராஜன். கொள்ளைப்பணம் வாதாம். ஆத்திலே ஒவ்வொரு பொம்மனாட்டிக்கும் உயர்ந்த வைரக்கம்மல் போட்டிருக்கான். குதிரை, மாடு, வண்டி எல்லாம் இருக்கு.

கா. அவனுக்கு இவ்வளவுபணம் ஏது? எப்படிக் கிடைக்கிறது?

மா. எப்படிக்கிடைக்கிறதா? நிறையப் பணம் இருக்கிறது, முதல் போட்டு முதல் எடுக்கிறான். அவன் மளிகையில் கறார்விலை' தான். ரொக்கவிலைக்குத்தான் கொடுப்பான்.

(தொடரும்)

# பர்வதகுமாரி

## இரண்டாம்பாகம்.

ஸ்ரீமான் மகேசகுமார சர்மா

(643-ம் பக்கத் தொடர்ச்சி)

### முதல் அத்தியாயம்.

### பிரதிமையின் விவாக நிச்சயம்.

இந்த அத்தியாயத்தில் நாம் பாலிய விவாகத்தின் குணதோஷ விசாரம் செய்ய உத்தேசிக்கவில்லை. இவ்விஷயத்தைக் குறித்து சுபக்ஷமாகவும் விபக்ஷமாகவும் நடந்து வரும் பல திறப்பட்ட வாதப் பிரதிவாதங்களில் தலையிட்டுக் கொள்ளவும் எமக்கு விருப்பமில்லை. நாம் இங்கே எடுத்துக்காட்ட விரும்புவதெல்லாங் கூடி, இவ்விருபக்ஷங்களின் யுக்திவாதம் என்ன—அவரவர் கக்ஷிகளுக்கு ஆதாரமாகக்கூறும் ஏதுக்களும் யுக்திகளும் எவை எவை என்பதேயாகும். நாம் சொல்லத் தொடங்கியிருக்கும இக்கதைக்கு இதனால் பிரயோஜனமும் உண்டு.

ஆண் பிள்ளைகளுக்கு விவாக தசை வந்த பிறகே, எனவே, முதிர்ந்த பருவத்திலேயே விவாகம் செய்யவேண்டுமென்பதை எல்லோரும் நிராக்ஷேபமாய் ஒப்புக்கொள்ளுகிறார்கள். என்னென்ன வாதவிவாதங்களும் விதண்டாவாதமும் நடந்து வருகின்றனவோ, அவையெல்லாம் பெண்களின் விவாகத்துக்குரிய வயதைப்பற்றியேயாம். ஒரு பக்ஷத்தார் கூறுவதாவது:—ஸமாஜ ஜனசமூகத்தில் சகல உத்தம லக்ஷணங்களும் அமைந்த ஆதர்ச மனிதர்களை உண்டாக்குவதே ஆரிய தர்ம சாஸ்திரங்களின் உத்தேசமாகும். பூர்வ காலத்தில் சிறுவர் உபநயனம் செய்யப்பெற்ற பின்னர் குருகுலம் சென்று அங்கே ஆசாரியரின் ஆக்ஞைப்படிக் கடுமையான பிரமசரிய விரதம் காத்து, வைதிகமும் லௌகிகமுமான உத்தம வித்தைகளைப் பயின்று உயர்வடைந்தனர். இதனால் அவர்களது தேகம், மனம், ஆத்மா என்னும் மூன்றையும் சம்பந்தித்த சக்திகள் விரிந்து விருத்தியடைந்தன. இவ்வாறு இளைஞர்கள் இருபத்தைந்து அல்லது முப்பது வயதுவரையில் குருகுலத்தில் வசித்துப் புலன்களை யடக்கிப் பிரமசரியம் அநுஷ்டித்த பிறகு சம்சார வாழ்க்கையில் பிரவேசித்தனர். அப்பொழுது அவர்களது சரீரமும் மனதும் பெரும்பாலும் பூர்ண விகாஸமடைந்து, அவர்கள் ஜிதேந்திரியர்களாய்க் கிருஹஸ்தாசிரம தர்மங்களை நடத்துவதற்குத் தகுதி பெற்றவர்க

ளாயிருந்தனர். ஆனால் சாஸ்திரக்காரர் பெண்களின் விவாகத்துக்குரிய வயதை எட்டு முதல் பன்னிரண்டு பிராயத்துக்குள்ளாகவே நிர்ணயித்திருக்கிறார்கள். இவ்விஷயத்தில் பெண்களின் பாலிய விவாகத்தை ஆதரிப்போர் கூறுவதென்னவெனில், அக்காலத்தில் ஆண் பிள்ளைகளைப்போல் கன்னிகைகளும் குருகுலத்தில் இருந்துகொண்டு பிரமசரிய விரதத்தை நியமத்துடன் அநுஷ்டிக்கக்கூடியவர்களாயிருப்பதற்கு வேண்டிய சௌகரியங்கள் இருக்கவில்லை. அப்படி அமைவது சம்பாவியமுமல்ல. கிருஹமே அவர்களது உண்மையான கர்ம க்ஷேத்திரமாகவும் பயிற்சியிடமாகவும் அமைந்திருந்தது. அதனாலேயே அவர்கள் பாலிய காலத்தில் தாய் தந்தைகளுக்கும், யௌவனத்தில் பதிக்கும் அடங்கியிருந்து நீதியையும் தர்மத்தையும் கிருககிருத்தியங்களையும் பயின்று வந்தனர். அன்றியும், சிறு பிராயத்தில் விவாகமாய்விடுவதனால் உண்டாகக் கூடிய கெடுதிகளை ஒழிக்கும்பொருட்டு மிகச் சிறந்த ஆசாரங்களும் சமுதாய வழக்க வொழுக்கங்களும் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

நமது தேசத்து வைத்திய சாஸ்திர கிரந்தங்களிலே, எந்தப் பெண்ணாவது பதினாறு வயதுக்கு முன் பிள்ளை பெற்றால் அவளுக்கும் அவள் சந்தானத்துக்கும் தேக சம்பந்தமாகவும் மனச்சம்பந்தமாகவும் பல வகைத் துன்பங்களை அனுபவிக்கும்படி சம்பவிக்குமென்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது.* ஆகையால் வைத்திய சாஸ்திர மதப்படி மேற்கண்ட (பதினாறு) வயதுக்கு முன் பெண்களைத் தாம்பத்திய தர்மத்தில் பிரவேசிக்கப் பண்ணுவது உசிதமன்றென்பது பெறப்பட்டது.

இதற்குப் பாலிகா விவாகவாதிகள் கூறும் சமாதானமென்னவென்றால் மேற்சொல்லிய வித்துவான்களும் ஜிதேந்திரியருமான யுவாக்களுடனேயே மேற்கூறிய சிறு பிராயமுள்ள பெண்களுக்கு விவாகம் நடந்து வந்தபடியால், மேற்கண்ட நியமமப்படி சரிவர நடக்கப் பெரிதும் சாத்தியமாயிருந்தது. எனவே, விவாகமான பிறகுகூட பாலிகைகளுக்குப் பதினாறு வயதுக்கு முன் தாம்பத்திய தர்மப் பிரவேசமாகிய ருதுசாந்தி செய்யப்படவில்லை. அதனாலேயே பிராசீன காலத்து ஆரியருக்குள் பெண்களுக்குப் பாலிய விவாகம் நடந்துவந்தபோதிலும் அதனால் யாதொரு தீங்கும் விளையவில்லை.

ஸமாஜத்தின் தற்போதைய நிலைமையை ஆராயுங்கால், இக்காலத்திய யுவாக்கள் பிரமசரிய விரதாநுஷ்டானத்தோடு நெடுங்கால குருகுல வாசம் செய்யாமற் போயினும், பூர்வகாலத்தில் இருந்ததுபோல் அவர்களுக்கு இந்திரியங்களை அடக்கும் அப்பியாசமும் இல்லாமற் போயினுங்கூட, பெண்களுக்கு அதிக வயதான பிறகு விவாகம் செய்வது உசிதமன்று. விவாகமாவதற்கு முன் யௌவனமடைகிற பெண்களின் முன்னோர் நரகத்தில் விழுவரென்றும் சாஸ்திரம் முறையிடுகிறது. அதனை கருத்து, கலியாணமாகாமற் பிறந்தகத்தில் இருக்கும்பொழுதே பெண்கள் பருமடைவதனால் அவர்கள் தீய வழியிற் செல்லக்கூடும் என்பதும் அவர்கள் தீய வழியில் நடந்தால் குலத்துக்குக் களங்கமும் சமுதாயத்துக்குக் கெடுதியும் விளையுமென்பதுமே யன்றி வேறொன்றுமல்ல. ஆகவே யௌவனப் பிராப்திக்கு முன்னமே, எனவே, எட்டுமுதல் பன்னிரண்டு வயதுக்குள்ளாகவே பெண்களுக்கு அவசியம் விவாகம் செய்யவேண்டுமென்பதே பாலிய விவாக வாதிகளின் மதமாகும்.

* पूर्णषोडशवर्षा स्त्री पूर्णविंशेन सङ्गता ।
शुद्धे गर्भाशये मार्गे रक्ते शुक्रेऽनिले हृदि ॥
वीर्यवन्तं सुतं सूते ततो न्यूनाब्दयोः पुनः ।
रोगी अल्पायुरधन्यो वा गर्भो भवति वा न वा ॥

(இ-ள்.) சுத்த கர்ப்பாசயமும், சுத்த மார்க்கமும், சுத்த சோணிதமும், சுத்த வாயுவும், சுத்த இருதயமும் அமைந்திருக்க, பதினாறு வயது நிறைந்த ஒருயுவதி இருபது வயது நிறைந்த ஒரு யுவாவுடன் சங்கமித்தால், ஆற்றல்கொண்ட ஓர் ஆண்மகவைப் பெறுவாள்; இதற்குக் குறைந்த வயதுள்ள ஸ்திரீ புருஷரின் சங்கமத்தினால் கர்ப்பமே உண்டாகாமலிருந்தாலும் இருக்கலாம்; அப்படி உண்டானாலும், நோயுள்ளதும், அற்ப ஆயுளுள்ளதும் பாக்கியஹீனமுமான குழந்தை பிறக்கும்.

—அஷ்டாங்கஹ்ருதயம்.



இது ஒரு பக்ஷத்தாரின் வாதம். இனி மற்றப் பக்ஷத்தாரின் வாதத்தைக் கேட்போம். இந்தப் பக்ஷத்தைச் சார்ந்தவர்கள் கூறுவதாவது.

பெண்களின் சரீரமும் மனதும் சற்று விரைவாகவே முதிர்ச்சி யடைந்தபோதிலும், இம்முதிர்ச்சி பூர்த்தியடைவதற்கு முன்னமே அவர்களை விவாகம் செய்து கொடுப்பது உசிதமன்று. விவாகமாவதனால் அவர்களது சாரீரிகமும் மானஸிகமுமான மலர்ச்சி சம்பூர்ணமாய் ஆகமுடிகிறதில்லை—அது தடைப்பட்டுப் போகிறது. அவர்களுக்குப் பிறக்கும் ஆண் பெண் பிள்ளைகள் அபூர்ணமான அல்லது அரைகுறையான மக்களே யாகிறார்கள். இவ்வபூர்ணமானவர்களின் வம்சத்தார் இன்னம் அபூர்ண நிலையை யடைகிறார்கள். இப்படி வர வர மனித சமூகம் க்ஷீணித்துக்கொண்டே போகிறது. ஆரிய ஜாதியின் சந்ததியார் இவ்வாறாகவே இப்பொழுது க்ஷீணகதியடைந்திருக்கிறார்கள். இப்படியே இன்னும் சிறிது காலஞ் சென்றால் அவர்களுடைய பெயரும் அடையாளமும் அழிந்து போய்விடுவது ஆச்சரியமல்ல.

விவாகத்திற்கு முன்னமே பெண்கள் பருவமடைந்தால் பாதகமில்லை. அவர்களை நல்லொழுக்கத்தில் நிலைப்பிக்கும்பொருட்டு உத்தமமான உதவி புகட்டுவதற்குற்ற ஏற்பாடுகளைச் செய்யுங்கள். வீட்டிலோ வித்தியாசாலையிலோ பெண்களுக்குத் தர்மமும் நீதியும் போதிக்கப்பட்டால் அன்னார் தம்மைத் தாமே காத்துக்கொள்ளத்தக்க ஆற்றலுடையவராவர். பருவமெய்தினபின்னர் விவாக சூத்திரத்தினால் கட்டப்பெறுவாராயின், அவர்கள் இல்லறத்தை மிக்க திறமையோடு நடத்துவதுமன்றி சாரீரிக மானஸிக ஆத்தியாத்மிக சக்தி சம்பன்னர்களான உத்தம சந்தானங்களின் அன்னையராய் விளங்கவும் சமர்த்தைகளாவர்.

இங்கே இருதிறத்தாரது மதங்களை சுருக்கமாகக் குறிப்பிட்டுணர்த்தினேம். இனி இம்மதங்களுக்கும் எமது கதைக்குமுள்ள சம்பந்தத்தை விவரிப்போம்.

சுமார் முப்பது வருஷங்களுக்கு முன், நவகுமார பட்டாசாரியன், த்விஜேந்திரநாத் ராய் என்கிற இளைஞர் இருவர் காலேஜில் படித்துக்கொண்டிருந்தகாலத்தில், ஆரியஜாதியின் தற்போதைய தாழ்வுற்ற நிலையைப்பற்றி அடிக்கடி ஆராய்ச்சி நிகழ்த்துவது வழக்கம். இவ்விருவரும் நம் அதோகதிக்கு எல்லாவற்றிலும் தலைமையான காரணம் பாலிய விவாகமேயென்றும், இந்த வழக்கத்தை நம் சமாஜத்திலிருந்து ஒழிக்க முயலவேண்டியது தமதுகடமையென்றும் நிச்சயஞ் செய்துகொண்டார்கள். இதைப்பற்றி வெறும் வாசா கைங்கரியமும் பிரசங்கமும் செய்வதைக் காட்டிலும் பிரத்தியக்ஷமான திருஷ்டாந்தம் அதிக பயன் விளைக்கக்கூடியதாகையால், தாமே சுயமாய் ஒரு காரியத்தைச் செய்து காட்டுவது அவசியமென்று கருதி, தமக்குப் பெண்கள் பிறந்தால், என்ன கஷ்டங்கள் நேர்வதாயிருந்தாலும், அவர்களுக்குச் சிறுவயதில் விவாகம் செய்வதில்லையென்று இவ்விருவரும் பிரதிஞ்ஞை செய்துகொண்டார்கள். இவ்விரு நண்பருக்குள் நவகுமாரன் சாந்த சுபாவமுள்ளவனாகவும் புத்திமானாகவும் தர்மசீலனாகவும் இருந்தான்.

த்விஜேந்திரநாதன் தனிகனுடைய மகனுயிருந்தும், உத்தம நோக்கங்களுடையவனும் உற்சாகியுமாயிருந்தான்.

பிரதிபையும் சுசீல குமாரனும் இந்த நவகுமார பாபுவின் மக்களேயாவர். இக்கதையின் முதற்பாகத்தில் செய்யப்பட்ட இத்தமையன் தங்கைகளைப்பற்றிய வருணனையிலிருந்து நவகுமார பாபுவைப்பற்றியும் அவரது பத்தினியைப்பற்றியும் நமதுவாசகர்கள் ஒரு சிறிது ஊகித்துக் கொள்ளலாகும். இத்தம்பதிகள் உண்மையான தர்மசீலர்களாயிருந்ததுமன்றித் தம் மக்களுக்குச் சிறந்த கல்வி புகட்ட வேண்டிய முயற்சிகளெல்லாம் செய்தனர். நவகுமாரபாபுவின் யோக்கியதை, உயர்கல்வி, தருமசீலம், நல்லொழுக்கம் முதலிய நலன்களை அறிந்து, வங்காளத்தில் இராஜாபஹதூர் பட்டம் பெற்ற ஒரு பெருத்த ஜமீன்தார் அவரைத் தம் ஜமீன்தாரிக்கு மானேஜராக நியமித்துக் கொண்டார். அவரது நிர்வாகத்திறத்தினுல் இராஜாபஹதூரின் செல்வம் மேன்மேலும் ஓங்கி விருத்தியாய்க் கொண்டுவந்தது. அந்த சமயத்தில் நவகுமார பாபுவுக்குப் பிரதிபை பிறந்தாள். பிரதிபை இளமையிலிருந்தே சுந்தரியாயும் சுசீலையாயும் இருந்தபடியால், அவளைப் பார்த்தவர்களெல்லாம் அவளிடத்துப் பிரீதிகொண்டார்கள். இராஜாபஹதூருக்கும் பிரதிபைக்குச் சமானமாய் வேறெந்தப் பெண்ணும் தோற்றவில்லை. அவரும் பிராமணராதலால், தமது இராஜகுமாரனுக்குப் பிரதிபையை விவாகம் செய்வித்து அவளை இராஜ மகிஷியாய்ச் செய்யச் சங்கற்பித்துக்கொண்டார். இராஜகுமாரனுகிய பூபேந்திரநாதனும் பிரதிபையினிடம் மிக்க அன்பு பாராட்டி அனவரதமும் அவளுடன் விளையாடிக்கொண்டிருப்பது வழக்கம். நவகுமாரபாபு இத்தகைய உயர்ந்த சம்பந்தம் வாய்ப்பதை விரும்பி, அதனுல் தம் அருமை மகளுக்கு இராஜ மகிஷியென்னும் உந்நத பதவி கிடைப்பதாயிருப்பதை நோக்கிச் சந்தோஷித்தாராயினும், அவர் தம் பெண்ணுக்குச் சிறுவயதில் விவாகம் செய்யச் சம்மதிக்கவில்லை. இராஜாபஹதூர் பாலிய விவாகத்திற்குச் சார்பாகவும் நவகுமாரபாபு அதற்கு மாருகவும் இருந்தனர். ஒரு நாள் இராஜசபையில் ஆஸ்தான பண்டிதர்களுக்கும் நவகுமார பட்டாசாரியருக்கும் அடியிற்கண்டவாறு சம்பாஷணை நடந்தது. நவகுமாரர் பண்டிதர்களை நோக்கி—"முற்காலத்திற்போல் இக்காலத்தில் யுவாக்கள் பிரமசரியத்தை அநுஷ்டிக்க முடியாமலிருக்கும்போது, பாலிகா விவாகத்தினுல் விளையும் தீமையை எப்படி அகற்ற முடியும். அதாவது இப்படிப்பட்ட நிலைமையில் பாலிகைகளைப் பதினறு வயதுவரையில் பிரமசரியத்தில் ஒழுகும்படி எப்படி செய்யமுடியும்?" என்று கேட்டார்.

பண்டிதர்களால் இந்தக்கேள்விக்குப் பதில் ஒன்றும் சொல்லக்கூடவில்லை. அவர்கள் நவகுமாரரைத் திருப்பிக்கேட்டார்கள். "ஒரு பாலிகை பருவமடைந்து இயற்கை நியமத்தையநுசரித்து ஒரு யுவாவினிடம் ஆசைகொண்டு பிறகு அவனை விவாகம் செய்துகொள்ளாவிட்டால், அப்பொழுது அந்த பாலிகை மானஸிக விபசாரதோஷத்திற்கு உட்படுவாளா மாட்டாளா? அப்படி தோஷத்துக்குள்ளாகிய பாலிகை தர்ம மார்க்கத்தில் நிலைபெற்று நிற்கமுடியுமா? நீங்களே சொல்லுங்கள்." நவகுமாரர் இந்தக் கேள்விக்கு விடைகூறுமற் சிறிதுநேரம் சும்மா இருந்தார். அத்தகைய பாலிகை வாழ்நாள் முழுதும் கன்னிகையாகவே இருந்து களங்கமில்லாமல் வாழ்ந்துவந்தால், அவளை எவ்வகைத்தோஷமும்பற்றமுடியாதென்று சொல்ல அவருக்குத் தோன்றவில்லை. பிறகு அவர்—"இந்த தோஷம் அணுகாமலிருக்கும் பொருட்டு பாலிகைகளுக்கு நிச்சிதார்த்தத்தை மட்டும் பன்னிரண்டு வயதுக்குமுன் நடத்திவிட்டுப் பதினறு வயதுக்குப் பிறகு விவாகம் ஸம்ஸ்காரத்தையும் ருதுசாந்தியையும் ஒன்ருய் வைத்துச் செய்யலாமே" என்ருர். இராஜாபஹதூருக்கு இந்த சமாதானம் திருப்திகரமாயிருந்தபடியால், அவர் நவகுமாரரைத் தம் இஷ்டப்படியே பிரதிபையை இராஜகுமாரனுக்கு நிச்சிதார்த்தம் செய்து கொடுக்கும்படிக் கேட்டுக்கொண்டார். நவகுமாரருக்கு இராஜாபஹதூரின் வார்த்தையைத் தட்டக்கூடவில்லை. ஆகவே அவர் சந்தோஷமாய் பிரதிபையை இராஜகுமாரனுக்கு நிச்சிதார்த்தம் செய்து கொடுத்தார். இந்த நிச்சிதார்த்த மகோற்சவம் மிகச்சிறப்பாய் நடந்தது. அன்றுமுதல் பிரதிபையை எல்லோரும் இராஜமகிஷியாய் வரப்போகிறவளென்று பாவிக்கலாயினர்.



இந்த நிச்சிதார்த்தம் நடந்து பிறகு இரண்டு வருஷங்கழித்து இராஜாபஹதூர் பரகதியடைந்தார். பூபேந்திரநாதன் அச்சமயம் இன்னும் வியவகார தசையடையவில்லை: ஆகையால் அவனது சொத்து முழுதும் 'கோர்ட் ஆப் வார்ட்ஸ்' வசமாகி, அதை நிர்வகிப்பதற்குத் துரைத்தனத்தார் ஒரு புதிய மானேஜரை நியமித்தனர். அதன்மேல் நவகுமார பாபு அவ்விடத்தைவிட்டுக் குமாரீ பர்வதத்திற்குச் சமீபத்தில் ஒரு சிறு ஜமீன்தாரியை விலைக்கு வாங்கி அங்கேயே வசித்துவரத் தீர்மானித்தார். அப்பொழுது பிரதிபைக்குச் சுமார் பன்னிரண்டு வயது பிராயமாயிருந்தது. இரண்டு வருஷங்களுக்குப் பிறகு அவளுடைய தாயாரும் இன்னும் சில தினங்களுக்குப் பின் அவளுடைய தந்தையும் காலஞ் சென்றனர். இவ்வாறு தமையனும் தங்கையுமாகிய இருவரும் பெற்றோரை இழந்து கல்கத்தாவில் கல்வி பயின்றுவந்தனர். இராஜகுமாரனும் கல்கத்தாவிலேயே படித்துக்கொண்டிருந்தான். அங்கே தங்கியிருக்குங்காலத்தில் அவன் அடிக்கடி சுசீல குமாரன் அகத்துக்குச் சென்று பிரதிபையைப் பார்த்து வருவதுண்டு. பிரதிபையும் இராஜகுமாரனுக்குத் தன்னை நிச்சிதார்த்தம் செய்துகொடுத்திருக்கிறதென்றும், அவன் தனக்குப் பர்த்தாவாகப் போகிறவனென்றும் தெரிந்தவளாய் உள்ளுக்குள்ளேயே அவனிடத்து பக்தி செய்வாளாயினள். சுபாவ நியமத்தை அநுசரித்து அவளுக்கு இராஜ குமாரனிடத்தில் காதலும் உண்டாயிருந்ததென்று கூற வேண்டியது அநாவசியம்.

(தொடரும்.)

# நெட்டாலில் இந்துமதப் பிரசாரவேலை.

(ஸ்ரீமான் எஸ். ஆர். நாயுடு, மெரிட்ஸ்பர்க்.)

["ஹிந்து சமூகத்தில் இருக்கும் பல்லாயிரக் கணக்கான ஜனங்களுக்கு நம் மதக் கல்வி புகட்டாததனுல் கணக்கில்லாத பேர்களை வெளியார்கள் தங்கள் மதத்திற்கு அபகரித்துக் கொண்டு போகின்றனர்"—ஸ்ரீ பண்டித மாளவியா டில்லி பொதுக் கூட்டத்தில். 16-5-25.]

["நம் சமய அபிவிருத்திக்குத் தக்க போதகாசிரியர்களைத் தாய் நாட்டிலிருந்து தருவிக்க வேண்டிய பிரயாசை எடுத்துக்கொள்ள இம் மகா சபை தீர்மானிக்கிறது."—இவ்வருடம் கூடிய நெட்டால் தமிழ் மகாநாடு தீர்மானம் 1-2-25.]

மேலே எடுத்துக் காண்பித்த இந்த இரண்டு முக்கிய பொதுஜன அபிப்பிராயங்களிலிருந்து ஆரியமதம் பிறந்த இந்தியாவில் ஜனங்களுக்குப் போதுமான சமயஞானம் இல்லாததனால் இந்து ஜனங்கள் பிறமதம் புகுகிறார்களென்றும், கெட்டாவில் மதபோதகாசிரியர் இல்லாததனால் நமது சமயத்திற்குப் பெருங்குறையாக இருக்கிறதென்றும் வெளியாகிறது. கெட்டால் இந்து சமய நிலைமையை விசாரிப்போம்.

1860 வருடத்திலிருந்து கெட்டாவுக்குக் குடியேறிய ஜனங்களில் பெரும்பான்மையோர் தமிழர் (தெலுங்கர் உள்பட) களும், கல்கத்தாகாரர்களுமாவர். இதில் தமிழர்தான் பெருந் தொகையாயிருந்திருக்கின்றனர். இந்துக்கள் இந்த நாட்டிற்கு வந்திருந்ததிலிருந்து பட்டணங்களில் நாளடைவில் 'கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற ஆப்த வாக்கியத்திற்கொப்ப, கோவில்கள் கட்டித் தொழலாயினர். சிவ, விஷ்ணு, மாரியம்மன் ஸ்தலங்கள்தான் முக்கியமானவைகளாகும். இப்படி ஸ்தாபித்த கோவில்களில் அநேக வருடம் பூசை நைவேத்தியங்கள் உற்சவாதிகள் நேர்மையாயும், ஆடம்பரமாயும் நடந்துவந்தன. அப்போது இந்தியாவிலிருந்து அநுபவம் பெற்றுவந்த தமிழர்கள் கோவில் வேலையை சிரமேற்கொண்டு பக்தியுடன் நடத்திக்கொண்டு வந்தனர். நாளடைவில் சிலர் இந்தியாவுக்குத் திரும்பினார்கள். அநேகர் காலகதி அடைந்தனர். அதிலிருந்து அவர்கள் சந்ததிகள் ஏறக்குறைய கோவில் திருப்பணி வேலையை நடத்திக் கொண்டு வந்தனர்.

கெட்டாவில் முதன் முதல் தமிழர்கள் அடிவைத்ததிலிருந்து இப்போது நாலாந்து தலை முறையாகிறது.

இந்த சமயத்தில்தான் நம் சமயத்தின் மேற் பக்தியின்மையும், அறியாமையும் காண்கிறது. ஒரு லட்சத்திருபதினாயிரம் இந்தியர்களில் முக்கால் பாகம் இந்த நாட்டில் பிறந்தவர்களாவர். இதிலும் பெரும்பான்மையோர் தமிழ் வாலிபர்களாவர். இந்த இடம் அவர்களுடைய ஜனன பூமியாகும். பெரும்பான்மையோர்க்கு இந்தியாவின் ஞானம் பூகோள படத்தின் அளவேதான்.

சிலர் இந்தியாவின் சமய, சமுதாய சரித்திரத்தைப்பற்றியும், நாகரிகத்தைப்பற்றியும் வாசித்திருக்கிறார்கள். சிலர் இந்தியாவிற்குப் போய் அநுபவமாய்ப் பார்த்துக்கொண்டும் வந்திருக்கிறார்கள். இந்த ஊரிற் பிறந்த பிள்ளைகளுக்கு அநேகமாய் ஆங்கிலப் படிப்பு பழக்க வழக்கங்கள் தமிழ் படிப்பு பழக்க வழக்கங்களை விட ஜாஸ்திதான். முக்கியசம்பிரதாயங்களில் தமிழ் பழக்க வழக்கங்கள் அநுசரிக்கப்படுகின்றன. அவையும் அரையும் குறையுமாகத்தான். இந்த நிலைமையில் தமிழ் வாலிபர்கள் வரவர, பொதுவாக சொல்லுமிடத்து, சமயஞானம் அற்றவர்களாவதோடு நில்லாமல் நம் சமய வழிபாடுகளிலும் நம் சமய போதனைகளிலும் சந்தேகம் கொள்ளுகின்றனர். படிப்பு இல்லாத மக்கள் காண்பிக்கும் கடவுள் பக்தி கொஞ்ச நஞ்சம் தமிழ் படித்தவர்களிடம் காண்பதரிதாக இருக்கிறது. கல்வி கேள்வியிற் தேர்ந்த வாலிபர்களிருக்கின்றாராயினும் அவர்கள் தொகை சொற்பம்.

நம் சமயம் நிலை குலைந்திருக்கும்போது நம் மதம் எப்படி இதுகாறும் அடியோடு இதர பிரசாரத்தால் கலைக்கப்படவில்லையென்பது ஆச்சரியமாகவே இருக்கிறது. இது தெய்வச் செயலேயாகும்.

(தொடரும்.)

# சிறுவர்க்கான பக்கங்கள்.

ஸ்ரீமதி பி. மங்களாபாயி.

## சகுந்தலையின் கதை.

(662-ம் பக்கத் தெடர்ச்சி)

இவ்வாறு சர்வதமனன் வாலிபனாகவளரவே கண்வமுனிவர் புத்திரனுடனே சகுந்தலையை அவளது கணவனிடம் அனுப்பவேண்டுமென்று எண்ணங்கொண்டார். ஆகவே, அவர் தமது சிஷர்களில் இருவரை சகுந்தலையுடன் துணையாக அனுப்பினர். தனது சிசுப்பிராயம் முதல் அதுகாறும் தன்னையன்புடன் வளர்த்த கண்வமுனிவரைப் பிரியுங்காலும், தனக்குப் பிறந்தகமாகவிருந்த அவ்வாசிரமத்திலிருந்து அகல அடியெடுத்துவைக்குங்காலும் சகுந்தலைக்கு ஆற்றொணாத் துக்கம் மேலிட்டது. ஆயினும் தனது தகப்பனாரான முனிவரது அநுமதிபெற்று, அவரனுப்பிய சீடர்களின் துணைகொண்டு துஷ்யந்த மன்னரது இராஜதானிக்குச் சென்றாள்.

அப்பொழுது துஷ்யந்தமகாராஜன் தர்பாரில் உட்கார்ந்திருந்தான். கண்வமுனிவரது சீடர்கள் மன்னனது முன்சென்று, சகுந்தலையையும் புத்திரன் சர்வதமனனையும் அவன் முன்னிறுத்தி, 'மன்னவரே! இதோ உமது மனைவியையும், புத்திரனையும் அழைத்துவந்திருக்கிறோம். உமது குலவொழுக்கத்திற்கு ஏற்றபடியும், அவளது குண ஒழுகத்திற்கு ஏற்றபடியும் அவளை நீர் அங்கீகரித்து ஆதரிப்பீராக' என்று கண்வமுனிவர் சொன்னதைத் தெரிவித்துவிட்டு அவ்விருவரும் புறப்பட்டுப் போய்விட்டார்கள். முன்பு துஷ்யந்த மகாராஜன் சகுந்தலையைப் பிரியும்போது 'உனக்குப் பிறக்கும் புத்திரனுக்கு நான் என் இராஜ்பத்தைத் தருவேன்' என்று வாக்களித்ததை ஞாபகப்படுத்திக்கொண்டு, சகுந்தலை மன்னனையணுகினாள். இதைக்கேட்டதும் துஷ்யந்தன், தன் முன்னின்றவள் இன்னாளென்று அறிந்துகொண்டான். ஆனால் தான் அவளைமணந்த விவரத்தைப் பிறர் ஒருவரும் அறியாதிருந்தமையால், அவளை யங்கீகரித்தால் ஒரு தகாத ஸ்திரீயைத் தன்னுடன் சேர்த்ததாகத் தனது பிரஜைகள் இகழ்வார்களென்ற பெரிய அச்சத்தினால், துஷ்யந்தன் அச்சமயம் அவளையே அறியாதவன்போல நடித்து 'ஏ, துஷ்டை! நீயோ தபஸ்வினி; உன்னையாவது, நான்மணந்திருப்பதாவது! இது ஒரு சூது. நான் எவளையும் என்னை யறியாமல் மணந்திருப்பதாக எனக்குத் தோன்றவில்லை.— சரி, நீ யாராயிருந்தாலும் இங்குவரக் காரணமென்ன? உனது கபடமொழிகளுக் கிணங்கமாட்டேன். நீ வந்தவிதமே திரும்பிப்போய்விடு' என்று கோபக்குறியுடன் சொன்னான். எனினும் அவனது உள்ளத்திற் மிகவும் வஞ்சகம் செய்ததாகமட்டும் எண்ணினான்.

இம்மொழிகளைக் கேட்டவுடன் சகுந்தலையின் உள்ளம் பதறியது; சற்றுநேரம் திகைத்து நின்றாள். அங்கு தனக்கு நடந்த அவமானத்தைச் சிறிதும் பொறுக்க முடியவில்லை. கோபத்தினால் கண்ணிரண்டும் சிவந்தன. ஆயினும் தனது ஒழுக்கத்தையும் மரியாதையையும் இழக்காமல் வெகுவும் தாழ்மையுடன் தனக்கு முன்பு நடந்த விவரங்களையெல்லாம் தெளிவாகக் கூறி அரசனுக்கு நினைவூட்டினாள். "மகாராஜாவே! அதிகமாக நான்என்ன சொல்

லக்கூடும்? இவ்விஷயத்தின் உண்மையும் பொய்மையும் தமது மனதிற்கே நன்றாய்விளங்கும். ஆகவே தமது மனச்சாக்ஷிக்கு விரோதமின்றி தமக்கு உசிதமெனத் தோன்றுவனபோலச் செய்யுங்கள். மனமொன்றை வற்புறுத்த மெய் ஒன்றைச் செய்யும்படி விட்டமானிடர்கள் எந்தப் பாதகத்தைதான் செய்ய முயலார்கள்? எவன் என்னாளினும் துர்செய்கைகளில் பிரவேசிக்காமலிருக்கின்றானோ, அவனே ஒருவித துன்பமுமின்றி சதாகாலமும் சுகத்தை அனுபவிக்கின்றான். நானோ பிரத்தியக்ஷமாய் உம்மை மணந்த தங்களது பத்தினி; நானாகவே உமது இல்லம் நோக்கிவந்திருந்தும், என்னை நீர் நிராகரிக்கிறீர். ஆயினும் இப்பொழுது நான் கூறுவதைமட்டும் உறுதியாக நம்பித் தமது ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். இல்லறத்தை நடாத்திவரும் புருஷர்களுக்கு உத்தம ஸ்திரீகளாகிய தமது பத்தினிகளையும் விட மேலாக மித்திரர்கள் வேறு எவருமிலர். தர்ம ஆசாரணையிலும், விவகாரங்களிலும், மோக்ஷசாதனத்தை யடைவதிலும், மற்றைய ஒவ்வொரு விஷயத்திலும் தமது பத்தினிமாரிடமிருந்து பெறும் சகாயத்தைப்போல மேன்மையானது வேறு எவரிடமிருந்தும் பெறுவதில்லை. இதுவே உறுதி" என்று பலவிதமாகச் சொல்லிப்பார்த்தாள். இஃதொன்றையும் செவிக்கேற்காமல் தன் முன்னிற்பவள் மேனகையின் பெண்தானோ என்றும் ஐயமுறலானான்.

சிறிதும் கபடமறியாதவளும், மாதர்க்கணிகலமாகியநாணம் மடம் அச்சம் பயிர்ப்பு யென்பவைகளை முற்றுங்கொண்டுள்ள ரிஷி கன்னிகை இவ்வவமானத்தை எப்படிப் பொறுப்பாள்? ஆகவே சகுந்தலைக்கு அடக்கமுடியாத கோபம் பெருகியது. வெகு நேரம் நயமாய்ப் பேசியும் ஒன்றும் பயன் படாதது கண்டு, மிகவும் கோபத்துடனே, "இராஜனே! நீர் பிறர் செய்யும் கடுகளவு குற்றத்தை மட்டுங் கவனிக்கின்றீர் அன்றி, நீரே செய்யும் கடலளவு குற்றமேயாயினும் அதைக் கவனிப்பதே யில்லைபோலும், இருக்கட்டும். நீரோ இந்த அற்பமான மிருத்யுலோகத்திற்கு மன்னவன; நான் இந்திரன் குபேரன், வருணன் முதலிய தேவர்களின் இணக்கத்தோடு வாசஞ் செய்யும் அப்ஸரஸின் மகள். அப்படியிருக்க நீர் எனக்கு எம்மட்டில் ஈடு? ஆயினும் உம்மீது சிறிதும் வெறுப்பும் சினமுமின்றிக் கடைசியாகக் கூறுகிறேன். அதையாவது கவனமாகக் கேளும். எப்பொழுதும் தமது சுய இச்சைப்படி துராசாரம் செய்யப்பட்டவர், சர்ச்சனர்களையும் துர்ச்சனர்களாகவே மதிப்பார்கள்; இதையும்விட நகைப்புக்கு இடமாவது வேறொதுவுமில்லை. மனிதன் சகல வித்தைகளைக் கற்றும், வேத புராணங்களோதியும், தீர்த்த யாத்திரைகள் செய்தும் அவைகளின் ஏற்ற பலனாக சத்தியத்தைமட்டும் பேசாவிட்டால் அவன் செய்த புண்ணிய கருமங்களுக்கு ஏற்றதாக என்ன பலனை அடைகிறான்? சத்தியத்தையும் விட சிரேஷ்டமான தர்மம் உலகினில் வேறொதையும் காண்பதரிது. இத்தகைய சத்தியத்தை நீர் இப்போது இழந்திருத்தலால் நீசனிலும் இழிவானவனாகிறீர். இத்தகையவனுடன் உறவுகொண்டாடுவதும் சிரேஷ்டமல்ல. இதோ, எனது புத்திரன்மட்டில் உண்மையில் வீரியம் படைத்தவனானால் நீங்கள் இவனை இளவரசாகக் கொள்ளாவிடினும், தன்னுடைய உடன்பிறந்தவலிமையால் இப்பூதலத்தை ஆள்வான். இதுவே உண்மை. இதனால் எனக்காவது ஒன்றுமேயில்லை" என்றுகடுமையாகப் பகர்ந்து தனது மைந்தனது கரங்களைப்பற்றிச் சரேலெனத் திரும்பி அச்சபையினின்றும் வெளிப்பட்டாள்.



சகுந்தலை வெளிப்பட்டவுடனே, ஒரு அசரீரி வாக்கு "இராஜனே! சகுந்தலையே உனது விவாக பத்தினி; அருகிலுள்ள வாலிபனே உமது சேர்க்கையாலுண்டாகிய புத்திரன். ஆகவே அவர்களை நீ புறக்கணிக்கவேண்டாம். சகுந்தலையின் வாய்மொழி முற்றும் உண்மையே" என்று கூறிற்று. உடனே துஷ்யந்தன், தனதுகுரு, பிரதானிமுதலிய சபையோர்களை நோக்கி "நீங்கள் யாவரும் இவ்வசரீரி வாக்கியத்தைக் கேட்டீர்கள். தமது அநுமதியின்பேரில் எனது பத்தினியையும்புத்திரனையும் அங்கீகரிக்கின்றேன். ஆதிமுதல்எனக்குச் சந்தேகமே கிடையாது. ஆயினும் லோகாபவாதத்திற்கு ஆளாகலாகாதென்று அஞ்சியே அவ்வாறு கடுமையாக நடித்தேன்" என்றான். பிறகுசகலரும் அநுமதி கொடுக்கவே, துஷ்யந்தன், சகுந்தலையையும், சர்வதமனனையும் தனது மனைவியாகவும் பிள்ளையாகவும் அங்கீகரித்துப் பிறகு பெரும் ஆடம்பரத்துடன் தனது மைந்தனுக்கு இளவரசு பட்டஞ்சூட்டினான்.

# தற்கால நாகரிகமும் இந்திய ஸ்த்ரீகளும்.

(சிந்தாமணியபிமானி.)

நமது நாட்டில் சாதாரணமாக இக்காலத்துப் பெண்களிடம் ஒருயோசனை குடிகொண்டிருக்கிறது. அதாவது எவ்விதத்திலும் தான் பிறரைவிட உயர்ந்தவளாகவோ, அல்லது பிறரைப் போலாகவோ ஆகவேண்டும் என்பதுதான். ஆனால் இவ்வெண்ணம் எவ்விஷயத்தில் சென்றிருக்கிறது என்பதை யோசிக்குங்கால் மிகவும் பரிதாபகரமான நிலைமையிலிருக்கிறது. இவர்களுடை[illegible]திதுபுதிதாக ஆபரணங்கள் செய்து அ[illegible]ளுவதிலே[illegible] இருக்கிறது. இதற்குக் காரணம் இவர்களுக்கு உயர்தர படிப்பு இல்லாத[illegible]ன். உ[illegible]தரபடிப்பென்றால் தற்காலக் கல்லூரிகளில் படிக்கவேண்டுமென்பது எனது கொள்கை அல்ல.

ஆதிகாலமுதல் நமது நாட்டுப்பெண்மக்கள் விசேஷமான ஆபரணங்கள் அணிவது வழக்கமாயிருக்கிறது. ஆனால் முற்காலத்தில் இவர்கள் நகை நட்டுக்களை சுயேச்சையாகச் செய்துகொள்ளவில்லை. புருஷர்களாகப் பார்த்து மனமுவந்து அன்புடன் தங்களுடைய சக்திக்கு ஏற்றவாறு செய்துகொடுத்தார்களே யல்லாது, அதை ஒரு முக்கிய வேலையாகக் கருதியதுமில்லை. இதனால் அக்காலத்துப் பெண்மக்களுடைய சரீர ஆரோக்கியத்திற்காவது, மன உற்சாகத்திற்காவது குறைவு ஏற்படவில்லை. கிராமவாழ்க்கையும் இவர்களுடைய சௌக்கியத்திற்கும் மனவமைதிக்கும் ஒரு முக்கிய காரணமாகவுமிருந்தது.

தற்காலம் நாகரீகமும், படிப்பும், உத்தியோகமும் அதிகரிக்கவே நகரவாழ்க்கை அதிகரித்து வந்து பல பெரிய குடும்பங்கள் சிதறி அநேகம் குட்டிக்குடும்பங்களாக விளங்கத் தொடங்கிற்று.

இச்சிறு குடும்பங்களிலுள்ள ஆண்பிள்ளைகளும் சிறுவயதுமுதல் பள்ளிக்கூடத்தில் படித்தும், பிறகு உத்தியோகம் செய்யும் பொருட்டும், குடும்பத்தை யொட்டின கவலைகளெடுத்துக் கொள்ளாமலிருந்து விட்டார்கள். இதிலிருந்து குடும்பமென்பது இன்னதென்று தெரியாமலே இவர்களுடைய வாழ்நாள் தொடங்கிற்று.

காலக்கிரமத்தில் இவர்களுக்கு மேனாட்டாருடைய பழக்கமும் அதிகமாகக் கிடைக்கத்

தலைப்பட்டது. அதிலும் மேனாடுகளிலிருந்து நம்தேசத்திற்கு வந்த சில கனவான்களுடைய பழக்கம்தான் நம் நாட்டாருக்குக் கிடைத்தது. இப்பழக்கத்தால் மேனாட்டாரைப்போல் நம் தேசத்து பெண்மக்களுக்கும் சுதந்திரம் கொடுக்கவேண்டுமென்று இவர்கள் கருதினார்கள். இதனால் புலியைப்பார்த்து நரி சூடுபோட்டுக் கொண்டது போலாயிற்று. ஏனென்றால் ஸ்திரீகளுக்கு எவ்வித சுதந்திரம் வேண்டும், அவர்களுக்கு எத்தகைய கல்வியைப் புகட்டவேண்டுமென்பதைப்பற்றி நாளதுவரை யாதொரு முடிவிற்கும் வந்ததாகத் தெரியவில்லை. ஆனால் பெண்கல்வி மாத்திரம் ஏதோ ஒரு வழியில் விருத்தியடைந்து கொண்டே வருகிறது. இருந்தபோதிலும் தற்காலப் பள்ளிக்கூடப்படிப்பு இருக்கும் வரை இந்தியப்பெண்களுக்கு அறைகுறைப் படிப்புத்தான் கிடைக்கும்.

இதுநிற்க, புருஷர்கள் மாத்திரம் மேனாட்டு நவநாகரிகத்தை எல்லாவிதத்திலும் அனுஷ்டிக்க ஆரம்பித்து விட்டார்கள். அதாவது 4 அல்லது 5 வகுப்பு படித்து விட்டு வீட்டிற்கு வந்திருக்கும் 13 அல்லது 14 வயதுப் பெண்ணைக்கண்டு அவள் புருஷன், 20 அல்லது 25 வயது சென்றவனும் கொஞ்சம் படிப்பும், சிறிது உலக அனுபவமும் தெரிந்தவனுமாகிய ஒரு பெண்ணை மணந்துகொண்ட ஆங்கிலேயனைப்போல் தன்னை மதித்துக்கொள்ளுகிறான். இதனால் ஒரு குடும்பப்பொருப்பு ஒன்றுமறியாத இச்சிறுமிக்கு ஏற்படுகிறது. இதுவுமல்லாமல் இவர்கள் 18 அல்லது 20 வயது ஆகிறதற்குள் சாதாரணமாய் இரண்டு அல்லது மூன்று குழந்தைகளுக்குத் தாயாகி விடுகிறார்கள்.

ஆனால் அவைகளை எவ்விதம் காப்பாற்றுவதென்பது மட்டும் அவர்களுக்குத் தெரியாது. தற்காலம் உத்தியோகத்திற்காக தூரதேசங்களுக்குப் போய் சிதறுண்டு கிடக்கும் சிறு குடும்பங்களுக்கு அனுபவமுள்ள பெரியோர்களுடைய உதவி கிடைப்பது அரிதாகி விட்டது. ஆகையால் பிறக்கும் குழந்தைகளில் மூன்றில் இரண்டு பங்கு இறந்து போகின்றன. இதற்குக் காரணமும் இவர்களுக்குத் தெரிவதில்லை. இது எவ்விதமிருந்தபோதிலும் குடும்ப வரவு செலவு முதலியவை சாதாரணமாக இப்பெண்கள் கையிலேயே தற்காலமிருக்கிறது என்று சொல்லலாம்.

(தொடரும்.)

EVERY HOUSE
SHOULD STOCK A BOTTLE OF
AMRUTANJAN
THE BEST PAIN BALM.
Price As. 10 a bottle.

# சிந்தாமணியைப் பற்றிய சில அபிப்பிராயங்கள்

## சிந்தாமணிக்கு ஒரு விண்ணப்பம்.

தையல் நாயகி சுப்பிரமணியம்.

ஆழிசூழுலகெங்கெனும் செல்வர் வறியோர் என்று பேதம் பாராது அமுத கிரணங்களைப் பொழிகின்ற வெள்ளிய தண்மதிபோலக் கற்றோர் மற்றோரென்றில்லாது எல்லோர் கிரகங்களிலும் சென்று ஒவ்வொருவருடைய செவிகளிலும் அரிய பெரிய விஷயங்களை உன் அமுதம்போன்ற மழலைச் சொற்களால் நிறப்பி எல்லோர் மனமும் களிபேறு வகை பூக்க வெளி வந்துலாவும் சீரியமணியே! சிந்தாமணியே!! நீ இன்று போல் என்றும் வாழ்க. உன் இன்னுரைகளைக் கேட்டு மகிழ்வுற்று உன் அங்கத்தைப் பலவித இரத்தினாபரணங்கள் போன்ற கட்டுரைகளால் அலங்கரித்தனுப்பிய சகோதர சகோதரிகட்கு நாம் என்றும் கடமைப்பட்டிருக்கிறோம். மாதம் ஒரு தரம் உலாவும் உன்னை வாரத்துக்கொருதரமாக அல்லது பதினைந்து நாட்களுக்கொருதரமாக உலாவச் செய்யப் பத்திராபிமானிகளின் ஊக்கமும் விருப்பமுமே காரணமாயிருப்பதால் இவ்வாண்டிலும் உன் திவ்விய அங்கத்தை விலையுறப் பெற்ற முத்தாபரணங்கள் போன்ற கட்டுரைகளால் அலங்கரித்துக்கொண்டு உன் அன்பர்பால் அன்னம்போல் நடந்து சென்று உன் அமுர்தம்போன்ற மழலைச் சொல்லால் மகிழ்வித்து உன்னை ஆதரிக்கச் செய்து இன்னம் பல விஷயங்களையும் தாங்கி என்போல்வாரின் இதயத்தை மலரச் செய்யும் உன்வருகையை ஆவலுடன் எதிர் பார்த்திருக்கிறேன்.

---

சிந்தாமணி பத்திராதிபர் அவர்களுக்கு.

அம்மா,

தாங்கள் பிரசுரிக்கும் 'சிந்தாமணி' பத்திரிகையைச் சில மாதங்களாக நான் படித்துவந்ததில் என்னுடைய சந்தோஷத்திற்கு அளவில்லை. வெகுகாலமாக நம் தேசத்தின் ஸ்திரீகளுக்காக யார் இவ்வளவு சிரமம் எடுத்துக் கொண்டு வேலை செய்யப் போகிறார்களென்று நான் நினைத்திருந்தேன். தாங்கள் முன்வந்து இப்பெருங் காரியத்தைச் செய்ய ஆரம்பித்திருப்பதற்காக நம் தேசத்துத் ஸ்திரீகளனைவரும் தங்களுக்கு நன்றி யறிதலுள்ளவர்களாக இருப்பார்களென்று நம்புகிறேன்.

இப்படிக்கு,
சிந்தாமணி அபிமானி.

---

நம் சகோதரி பாலம்மாளென்பவரால் எழுதி சென்னையினின்றும் வெளியாகும் 'சிந்தாமணி' என்னும் மாத சஞ்சிகையைத் தமிழ் நாட்டார் நன்கறிவாரென்றே நம்புகிறோம். சகோதரியாரும் வடபாபாஷையிலும் தென் பாஷையிலும் இராஜீய சமூக விஷயங்களிலும் தக்க விற்பத்தையுடையவர். கற்றோரும் மற்றோரும் மெச்சத்தக்க பலதிறப்பட்ட சிறந்த வியாசங்கள் ஆற்றொழுக்குபோன்ற செவ்விய நடையில் வரையப்பட்டுள்ளன. தமிழ் நாட்டுச் சமூகத்தில் பெண்களிருந்த புராதனஉன்னத நிலையையும், இடை நடுவில் பல கொடிய பழக்க வழக்கங்கள் தலையிட்டதால் நம் சகோதரிகளும் தாய்மார்களும் நிலைதுலைந்து தற்காலத்திலிருப்ப பதையும், தமிழ் மாதரின் முன்னைய உன்னத நிலையை நாடி நம்மனோர் செய்யவேண்டிய சீர்திருத்தங்களையும் பொதுப்படையான வியாசங்களிலும், இனிய சிறுசிறு கற்பனைகளிலும், சரித்திர பூர்வமான கதைகளிலும் தெற்றென விளக்கியிருப்பது பெரிதும் மெச்சத் தக்கது. தமிழ் நாட்டுப் பெண்களொவ்வொருவரும் இவ்வரிய சஞ்சிகையைப்படிக்கவேண்டியது அவசியமென்பதிற்றடையில்லை. நம் சமூகத்தின் முன்னேற்றத்திலும்தேசத்தின் முன்னேற்றத்திலும் ஈடுபட்டாரனைவரும் பத்திரிகையை ஆதரிக்கவேண்டியது அவரது கடமையேயாகும். யாவரும் எளிதில் வாங்குமாறு வருடமொன்றுக்கு 5 ரூபாயே சந்தாவாக நியமித்திருக்கிறார்கள். பத்திரிகையும் உயர்ந்த கடுதாசியில் வெகு சுத்தமாக அச்சிடப்பட்டிருக்கின்றது.

"தேசபக்தன்," கொழும்பு.

M. K. ACHARYA Avl. M.L.A., writes under date: 31-7-25:—

Among the very small class of highly cultured Indian ladies who combine ancient scholarship with modern outlook and method Sister V. Balambal ranks very high. The best proof of this is found in the high class Tamil Magazine edited by her under the name of '*Chintamani*,' whose literary excellence combined with simpilicity, variety and usefulness must strike even a casual reader. The Magazine deserves to be read in every Tamil home, as it combines most harmoneously the spirit both of ancient and of modern India. I commend it to every true lover of the Motherland, to every literary, social and political worker in Tamil Nadu.

***

RAO BAHADUR A. C. PRANATARTIHARA AYYAR AVL. I. S. O., Kilpauk writes under date 4-8-25:—

I have gone through several numbers of Sister Balambal's Tamil Journal the *Chintamani* and find them to be quite suitable for reading in Hindu homes and Hindu Girls' Schools. The matter is judiciously chosen, varied and interesting and such in the main as to promote the approach to Hindu ideals.

***

M. R. RY. B. V. SANKARAKAMESWARA AYYAR Avl. B.A., *Superintendent of Schools, Pudukkottai*, writes under date 12-8-25:—

*Chinthamani* contains interesting articles suited to pupils of Secondary Schools. The subjects dealt with bear on educational topics.

***

The Editor has taken much pains to present to the public a high class monthly journal, which is bound to attain a large measure of popularity among the Tamil speaking peoples of this Presidency.—*West Coast Reformer*, 22-8-24.

***

Though the Editor appears to be well versed in Sanskrit, it is a pleasure to note that the language is fairly free from Sanskrit imports and is not pedantic. We wish every success to the new monthly.—*Justice*, 22-8-24.

***

It is with much pleasure that I heard of a new venture in Tamil journalism, *Chinthamani*, undertaken by that fine worker in the cause of literature and nationalism, Sister Balammal Garu. Her splendid scholarship in Sanskrit and Tamil is a guarantee that the "Chinthamani" will maintain a high standard of excellence. I trust that the Tamil public will liberally subscribe to the Magazine and thus show in a practical way their appreciation of the author's noble efforts and the duty they owe to their mother-tongue. Mr. C. RAMALINGA REDDY, M. A. (CANTAB.), M. L. C., *Kilpauk, Madras.*

***

The mere fact that "Chinthamani" is being edited by Sister V. Balammal is in itself a guarantee that it will prove to be of immense practical utility in dispelling the cloud of ignorance now enveloping our ladies, and leading them towards emancipation consistent with Sastraic propriety.—*Arya Matha Samvardhini.*




## விலை ரூ. 2 —சரோஜனி.— விலை ரூ. 2

பூலோகமே பிரமிப்படையும் ஓர் அத்யற்புத சிங்காரமான நவரசம் ததும்பிய துப்பறியும் நாவல்.

அழகே ஓர் உருவமாய் அமைந்த 10 சித்திரப் படங்கள் அடங்கியது. எல்லாப்படங்களும் வங்காள நகரத்திலிருந்து வந்துள்ள பிரசித்திபெற்ற சித்திரக்காரரைக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

நாவல் வல்லோர் பலர் வெளியிட்டுள்ள பல்லாயிரம் நாவலுள் இந்நாவல் நடுநாயகமென உரைக்கத்தக்க சிறப்பு வாய்ந்துள்ளது.

புஸ்தகத்தைக் கையால் எடுத்து வாசிக்க ஆரம்பித்துவிட்டால் வேறெவ்விதமான அவசரவேலைகளிருப்பினும் அவைகளை மறந்து இந்த நாவலிற் செறிந்துள்ள சொற்சுவை பொருட்சுவைகளால் வசியமாக்கப்பட்டு வாசித்து முடிவெய்திய பின்னரே அவைகளைக் கவனிக்கும்படி செய்யுமென்பது நிச்சயம். அதிகமாய்ப் புகழாமல் ஒரே வார்த்தையில் சொல்லவேண்டுமென்றால் இது இன்னமுது, கனி, பாகு, கற்கண்டு, சீனி, தேன் முதலியவைகளை விட அதிகமாக ருசிப்பது இந்த நாவல்தான்.

### எம், எஸ். ராமுலு அண்ட் கம்பெனி,

புஸ்தகவியாபாரிகள், 64, மன்னார்சாமிகோயில் தெருவு,
இராயபுரம். மதராஸ்.



60 நாளையில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளலாம்.
இதுவரையில் இம்மாதிரியான புத்தகம் வெளிவரவில்லை.

குறைந்த விலை ! ஆங்கில ஆசான் பெருத்த விஷயம் !

தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள் தெரிந்து கொள்ளலாம்.

உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புத்தகம் இதுதான். இதில் ஒரு சொல்லை உச்சரிக்கும் விதமும், அதன் இங்கிலீஷ் அர்த்தமும், மிருகம், பட்சி, கிழமை, மாதம், வருடம், புஷ்பம், ஆயுதம், ஊர்கள் முதலியவற்றின் பெயர்களும், கடிதம் எழுதுதல், உயில், பத்திரங்கள், கல்யாண, சீமந்த நோட்டீஸ்கள் முதலியன இங்கிலீஷிலும், தமிழிலும் எழுதும் விதமும், சிறு கதைகளும், பழமொழிகளும், அவற்றின் இங்கிலீஷ் அர்த்தமும் வெகு சுளுவான நடையில் விளக்கப்பட்டிருக்கின்றது. மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும், தொழிலாளர்களுக்கும், உபாத்தியாயர்களுக்கும் மிகவும் முக்கியமானது.

REGISTERED

இப்புத்தகம் 1-க்கு விலை ரூ. **2**. தபால் செலவு அணு **6**.

பினங்கு, சிங்கப்பூர் தேசங்களிலிருந்து முன் பணம் அனுப்பினல் புஸ்தகம் ரிஜிஸ்டர் செய்து அனுப்பப்படும்.

தி. இராஜகோபால் முதலியார்,
நெ. 259, தங்கசாலை தெருவு,
மிண்ட் பில்டிங் போஸ்ட், மதறாஸ்.

---

இங்கிலீஷ்-தமிழ்

## வித்தியாமாலிகை.

(1, 2, 3 வாசகங்கள்)

இங்கிலீஷ் படிக்கவில்லையே என்ற கவலை வேண்டாம். தங்கள் சொந்த ஜோலிகளுக்கிடையூறின்றித் தாங்களே பிறர் உதவி யில்லாமல் சுயமாய்க் கற்றுக்கொள்ளக்கூடிய முறையில் இங்கிலீஷ் வார்த்தைகள், வாக்கியங்கள், முதலியவைகளுக்கு தமிழ் அர்த்தம் கொடுத்திருப்பதுடன், அவைகளின் உச்சரிப்புக்களையும் தெளிவாய்த் தமிழ் எழுத்தில் காட்டியிருப்பதோடு ஆங்காங்கு இலக்கண விதிகளையும் சவிஸ்தாரமாய்க் கூறியிருக்கிறோம். இம்மாதிரியான புஸ்தகங்கள் இதுவரை வெளிவந்தது கிடையாது. முதல் வாசகம் விலை அணு 6. இரண்டாவது அணு 8. மூன்றாவது அணு 10. வி. பி. சார்ஜ் 6 அணு, ஏககாலத்தில் மேற்படி மூன்று புஸ்தகங்களையும் வாங்கினல் சங்கிலிப் பின்னல்போல் கையெழுத்து விருத்தியாகக்கூடியதும் எந்த ஆட்பெயர், ஊர்ப்பெயர், முதலியவைகளையும் ஸ்கூல் பைனல்மாணுக்கனுக்கு ஒப்பந்தம் தானுக எழுதிக்கொள்ளத் திறமை ஏற்படும்படியான 32 பக்கங்கள்கொண்ட நூதன முறை இங்கிலீஷ் காபி புஸ்தகம் ஒன்றைச் சேர்த்து ரூ. 1-14-0க்கு வி. பி. யில் அனுப்பப்படும்.

V. S. K. சுவாமி அன்டு சன்ஸ், புக்செல்லர்ஸ் &C.,
விளாத்திகுளம் P.O. Via. கோயில்பட்டி. S. I. Ry.



## PALANGTOD PILLS.

Wonderful Tonic Preparations of
**DUBAL PHARMACY.**

The most popular medicines. Patronized by Rajas, princes & prominent persons.

**SOME OF THE SPECIALITIES ARE:**

**King of Tonic Pills**—Rs. 5 per pill.
**Night Pills**—Rs. 7 per pill.
**Palangtod Pills**—Rs. 10 per pill.
**Piles and Fistulla Cure**—Rs.50 weeks trial.
**Sakti Sajivan Oil**—Rs. 425 per tola.
**Maharani Hair Oil**—Increase hair three inches a month, Rs. 30 big bottle, Rs. 20 small & Sample Rs. 5.
**Diabetes Cure**—Rs. 50 week trial.
**Two minutes Hair Dye**—Rs. 5 per bottle
**Beauty Ointment**—Rs. 25 per bottle.
**Tooth Powder**—Rs. 3 per bottle.

For further particulars send Re. 1 for Catalogue.
Visiting hours 8 A.M. to 10 A.M. (S.T.)

DUBAL PHARMACY.
Girgaum No. 4. BOMBAY.

## "தேவாங்க மித்திரன்"

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை.

இது தேவாங்கர்களுடைய முன்னேற்றத்தைக் கருதி நடத்தப்பட்டுவரினும், விவசாயம், கைத்தொழில், கூட்டுறவு, சுகாதாரம், சன்மார்க்க போதனைகள், ஜீவிய சரித்திரங்கள் முதலியவைகளைப்பற்றியவைகளும், இன்னும் அநேக விசேஷ வியாசங்களும் எழுதப்பட்டு வெளிவரும்.

சந்தா விபரம்:—

| | |
|---|---|
| வருஷம் 1-க்கு ... ... | ரூபா 2—0—0 |
| அயல் நாடுகளுக்கு வருஷம் 1-க்கு... | ,, 2—8—0 |
| அபிமானிகளுக்கு வருஷம் 1-க்கு ... | ,, 10—0—0 |

விலாசம்: மானேஜர், "தேவாங்க மித்திரன்,"
தேவாரம், மதுரை ஜில்லா.

---

## பூஜைக்குகந்த போட்டோ படங்கள்.

நம்மால் பிரத்யேகமாகத் தயாரிக்கப்பட்டவை.

இது வரை வெளிவாரத நூதன மாதிரி.

முருகன் ஷண்முக கடவுள், தண்டாயுதபாணி, பாரத மாதா உருவமாய் அமைந்த ஸரஸ்வதி, விக்னேச்வரர், ராதா கிருஷ்ணன், குழந்தை கிருஷ்ணன், யசோதா கிருஷ்ணன், திருப்புகழியற்றிய அருணகிரி நாதர், கீர்த்தனங்களியற்றிய தியாகராஜ ஸ்வாமிகள், அகஸ்தியர் பெருமான், பட்டிணத்தார், சென்னைக்கு விஜயம் செய்த பொழுது எடுத்த மகாத்மாவின் படம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| முழுசெட்டு | ... | 6 | 0 | 0 |
| **தனிக்காப்பி** | | | | |
| சாதாரண போட்டோ | 1-க்கு ... | 0 | 12 | 0 |
| ,, | ½ டஜன் ... | 4 | 0 | 0 |
| ,, | 1 டஜன் ... | 6 | 0 | 0 |
| வர்ண போட்டோ | 1-க்கு ... | 1 | 0 | 0 |
| ,, | ½ டஜன் ... | 5 | 0 | 0 |
| ,, | 1 டஜன் ... | 9 | 0 | 0 |

சர்மா சகோதரர்,
வேப்பேரி, சென்னை.

## தேசோபகாரி.

அரியபெரிய விஷயங்கள்கொண்டு இரங்கூனிலிருந்து வெளிவரும் சிறந்த வாரப் பத்திரிகை. ஞாயிறுதோறும் வெளிவருவது.

(தேசோபகாரி காரியாலயம், நெ. 45, 36-வது வீதி, இரங்கூன்.)

சந்தா விபரம்.

இரங்கூன்:—வருஷம் 1-க்கு ரூ. 5; மாதம் 6-க்கு ரூ. 2-12. உள்நாடு: வருஷம் 1-க்கு ரூ. 6; மாதம் 6-க்கு ரூ. 3-4. வெளிநாடு: வருஷ 1-க்கு ரூ. 7; மாதம் 6-க்கு ரூ. 4.

---

## பாலபாரதி.

பல சித்திரப்படங்களுடனும், உருவப் படங்களுடனும், சரித்திர ஆராய்ச்சி, கற்பனைக்கதைகள், சிறு கதைகள், மாதசார விஷயங்கள், மற்றும் சுவையுள்ள விஷயங்கள் பல அடங்கிய ஓர் சிறந்த செந்தமிழ் மாதாந்தரப்பத்திரிகை. வருட சந்தா உள்நாட்டுக்கு ரூபா 5; வெளி நாடுகளுக்கு ரூபா 6-8-0. இதர விபரங்களுக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

காரியஸ்தன்,
"பால பாரதி,"
பாரத்துவாஜ ஆசிரமம், சேரமாதேவி (S. I. Ry.)

## சுதேச பரிபாலினி.

ரங்கூனிலிருந்து வெளியாகும் தமிழ் தினசரிப் பத்திரிகை.

பத்திராதிபர்: P. E. முதலியார்.

பர்மாவில் நடைபெறும் அரசியல் முதலிய சகல விஷயங்களையும் வெளியிட்டுவரும் தினசரி இது ஒன்றே. விளம்பரம் செய்வோருக்குப் பயனளிக்கக்கூடியது இதுவே.

வருஷசந்தா: உள்ளூர்: ரூ. 22; வெளியூர்: ரூ. 26. விலாசம்: மானேஜர், சுதேச பரிபாலினி, 31-32, பார்ஸ்டிரீட், ரங்கூன்.

## லோகோபகாரி.

முப்பது ஆண்டுகளாய் நிலவி வரும் வாரப் பத்திரிகை.

ஆசிரியர்:

பரலி-சு. நெல்லையப்ப பிள்ளை.

தமிழர்கள் புத்துயிர் பெற்றுப் பொற்படைவதற்குப் பாடுபடும் ஒரு பத்திரிகை. உலகத்தில் அந்தந்த வாரத்தில் நடக்கும் சமாச்சாரங்களெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாக வெளிவரும். பாரத தேசம் சகல அம்சங்களிலும் சுயராஜ்யம்பெற்று உலகமெல்லாம் க்ஷேமம் அடைய வேண்டு மென்பது லோகோபகாரியின் நோக்கம்.

வருஷ சந்தா:

உள்நாடு ரூ. 4. வெளி நாடு ரூ. 6.

"லோகோபகாரி"

பத்திரிகாலயம்,

கோமளீசுவரன்பேட்டை, சென்னை.

Madras.

## விவேகபாநு.

தென்னாப்பிரிகாவில் வசிக்கும் தமிழ் மக்களின் முன்னேற்றங்கருதி வெளிவரும் தமிழ் வாரப்பத்திரிகை. இதில் அரசியல், மதாசாரம் முதலிய விஷயங்களும் தென்னாப்பிரிகாவில் நடைபெறும் விஷயங்கள் முழுதும் வெளியிடப்படுகின்றன. தூரதேசத்திலிருக்கும் சகோதரர்களின் க்ஷேமலாபங்களை விவரமாகத் தெரிவித்துவரும் விவேகபாநுவை ஒவ்வொரு இந்தியரும் வரவழைத்துப் படித்தல் கடமையாகும். ஒருவருஷ சந்தா 15 ஷில்லிங். இந்யா, சிலோன், மோரேஷஸ், பினாங்கு, சிங்கப்பூர், ரோடேசியா முதலிய இடங்களுக்கு 17 ஷில்லிங்.

விலாசம்:—

மானேஜர், விவேகபாநு,

86, க்வின் ஸ்டிரீட், டர்பன், நெட்டால்

## ஆரோக்கிய தீபிகை.

சித்திர சகிதமாகச் சென்னையில் வெளிவரும் ஒரு மாதாந்தத் தமிழ் பத்திரிகை. இஃது தனது பெருக்கொப்ப ஆரோக்கியம், சுகாதாரம், பிரசவ முறைகள், முதற் சிகிச்சை, சிசுசம்ரக்ஷணை முதலிய விஷயங்களை ஆடவருக்கும் பெண்டிருக்கும் போதிப்பது. இயற்கை முறைகளால் தேகசுகத்தைப் பாதுகாத்து, நோயணுகாமல் இருப்பதற்கு என்ன செய்யவேண்டுமெனப் போதிப்பது. அநேக பிரபல வைத்தியர்களும், ஐரோப்பியரும், இந்தியரும் இப்பத்திரிகைக்கு விஷயதானஞ் செய்கிறார்கள். சுருங்கச் சொல்ல வேண்டுமானால் "ஆரோக்கிய தீபிகை" என்னும் இப்பத்திரிகையில், நோயற்ற வாழ்வினுக் கவசியமான செய்திகளெல்லாம் இனிது வரையப்படுகின்றன. இதன் ஆசிரியர் டாக்டர் U. ராமாராவ், எம். எல். சி. இதன் வருஷ சந்தா ரூ. 1-8-0. இதன் பிரதிகளை விற்க வெளியூர்களில் ஏஜண்டுகள் தேவை. வேண்டியவர்கள் சென்னை தம்பு செட்டித்தெரு 323 நெ. டாக்டர் யு. ராமா ராவுக்கு எழுதிக்கொள்ளவும்

## கைமேற்பலன்!

அதை நீங்கள் கட்டாயம் அடையவேண்டும்.

கீழே காட்டியுள் புத்தகங்களை வாசிப்பதனால் நீங்கள் கைமேற்பலனடைவீர்களென்பது நிச்சயம்!

| | | ரூ அ. பை. |
|---|---|---|
| 1 | வியாசக் கொத்து<br>அநேக அரிய வியாஸங்களைக் கொண்டது ... ... ... | ... 2 0 0 |
| 2 | அதிசயப் பொக்கிஷம்<br>ஒரு சாமானியமனிதன் கோடீச்வரனான விந்தை ... ... | ... 1 8 0 |
| 3 | இன்னுரைக் களஞ்சியம்<br>40 அருமையான விஷயங்களைக் கொண்டது ... ... ... | ... 1 0 0 |
| 4 | விஷயாலமஞ்சரி<br>எழுபது விஷயங்களை விரிவா யுரைப்பது ... ... ... | ... 1 0 0 |
| 5 | திருவள்ளுவரும் அவரது உபதேசங்களும்<br>புதிய முறையில் வரையப்பட்டது ... ... ... | ... 0 8 0 |

இன்னும் அநேக புதிய, அரிய, அறிவை வளர்க்கக்கூடிய புத்தகங்கள் எங்களிடம் உண்டு.

நவீன கதா புத்தகசாலை, 122, Montgomery St., இரங்கூன்

## ஜரிகையில்லாத பட்டுச்சேலைகள்

18 முழம் நீளம் $2\frac{1}{2}$ முழ அகலம். பட்டினால் ருத்திராக்ஷகரை போட்டவை உடல் மிகவும் அழுத்தமானது. எல்லா நிறங்களிலும் கிடைக்கும். சேலை 1க்கு விலை ரூபா 35.

## ஷை மாதிரி சேலைகள் ஜரிகைக் கரைபோட்டது

சேலை 1-க்கு விலை 50 ரூபாய் முதல் 80 ரூபாய் வரை. ரவிக்கைகள் எல்லா நிறங்களிலும், எல்லா மாதிரியிலும் ரவிக்கை 1-க்கு 3 ரூபாய் முதல் 5, 6, 7, 8, 10 வரை.

பெரிய கேட்லாக் "இனாம்."

விலாசம்:— மானேஜர், பட்டு பீதாம்பர கம்பெனி, காசி

SILK PITAMBER CO., BENARES CITY.

மஹானால் கிடைத்த "அருமையான மூலிகை"

தமிழ்வைத்திய சங்கத்தில் தங்கமெடல் பெற்றவை.

குஷ்டம், க்ஷயம், மூலம், கிராணி, பிரமை, பைத்தியம், இழுப்பு, வலிப்பு, மூத்திர வியாதி முதல் காட்டப்பட்ட சகலவித வியாதிகளும், பார்வை, பில்லி, சூனியம், ஏவல், விஷவியாதி, செய்வினை என சொல்லப்பட்ட பலவிதக் கஷ்டங்களும் கவலைகளும் உடனே நிவர்த்தியாகும்.

☞ ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்களைக் காணலாம்

புத்திர பாக்கியமில்லாதவர்களுக்கு 48 நாளில் கெர்ப்பம் உண்டாகும்.

பிரபலமான பேப்பர்களிலெல்லாம் பார்த்திருப்பீர்கள். உலகப்பிரசித்திபெற்றவை எதற்காகத் தேவையிருந்தாலும் ஆரம்பமுதல் சரிவர வியரமாக எழுதங்கள். தங்கள் முழுவிலாசத்துடன் பதிலுக்கு 1 அணா ஸ்டாம்பு அனுப்பினால் சகலவித விபரமும் அனுபந்தமும் கிடைக்கும். ☞ எந்ததேச ஸ்டாம்பும் அனுப்பலாம்.

முக்கியமான காரியங்களுக்கு ஸ்பெஷலாக வேண்டியதைச் செய்தனுப்பக்கூடும்

மானேஜர், பாலசந்திரன் ஆபீஸ், மேட்டுப்பாளையம், கோயமுத்தூர் ஜில்லா, சவுத் இந்தியா.

## தேசபக்தன்.

ஓர் தேசியத் தமிழ்ப் பத்திரிகை.

பிரதி திங்கள், புதன், வெள்ளி தோறும் கொழும்பிலிருந்து வெளி வருவது.

ஆசிரியர் கோ. நடேசய்யர். சந்தா விவரம்.

கொழும்பில் ஆள் மூலம் வருஷம் 1-க்கு ரூ. 9 0 0 ஷை ஷை 6-மாதம் ரூ. 5 0 0

பிறவிடங்கள் (தபால் மூலம்) வருஷம் 1-க்கு ரூ. 13 0 0 பினாங்கு, சிங்கபூர் முதலிய விடங்களுக்கு வருஷம் 1 க்கு ரூ. 16 0 0

தனிப்பிரதி 6 சதம்

சந்தாத்தொகை முன்பணமாகவே கட்டவேண்டும். 6-மாதத்திற்குக்குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

விலாசம்:—

மானேஜர், தேசபக்தன் ஆபீஸ், நெ. 43, ரெக்ளமேஷன் ரோடு, கொழும்பு.

## (இந்தியன் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் கம்பெனி, லிமிடெட்.)

தலைமையாபீசு : பம்பாய்.

" இந்தியாவின் முன்னேற்றத்திற்குரிய பிரசனைகள் வெற்றி பெறுதற்குக் கூட்டுறவு இயக்கமே அடிப்படையாயிருக்கிறது " என்று ஸ்ரீராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த மிஸ் ஜோஸப்பைன் மெக்ளெட் கூறுகிறார்.

மேற்கண்ட கம்பெனியானது சுதேசிய அபிவிருத்தியைக் கோரி சுதேசிகளால் நடத்தப்பெறும் கூட்டுறவு ஸ்தாபனமாகும். தேசப் பற்றும், செல்வாக்கும், அநுபவமும் பெற்றுப் பிரதிப்பிரயோஜனம் சிறிதும் எதிர்பாராது கௌரவ உத்தியோகம் வகிக்கும் டைரெக்டர்களைக் கொண்டுள்ளது.

சேர்மன்.

ஸர் ஹார்மஸ்ஜி ஸி. டின்ஷா, Kt., M.V.O., O.B.E.

(இவர் எடனிலுள்ள கௌவாசி டின்ஷா அண்டு பிரதர்ஸ் கம்பெனியின் முதலாளியும், பம்பாயில் பிரபல வர்த்தகரும், மைசூரில் பிரபல இரும்புத்தூரும் நிலச்சுமாந்தாரும் ஆவார்.)

ஆலோசனைக் கமிட்டித் தலைவர் :

ஸர் டின்ஷா எடல்ஜி வாச்சா, Kt., J. P.

( இம்பீரியல் பாங்கு மததியசங்கத்தின் கவர்னர்.)

தொழிலபிவிருத்தி, ஒற்றுமை, உண்மை உழைப்பு, கல்வி, பொது நன்மை இவைகளைப் பிரசாரம் செய்து வரும் நல்லியக்கமெனப் பேர் பெற்ற பல தலைவர்களால் இந்த ஸ்தாபனம் புகழ்ப்பெற்றது. மிகப் பிரசித்திபெற்ற முதலாளிகளுக்குப் பிரதிநிதியாகவிருந்து சுதேசிய இயக்கத்தை பரவச் செய்வது. தென்னிந்தியா பர்மா ஸிலோன் முதலியவிடங்களின் முக்கிய நகரங்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

விவரம் வேண்டுவோர்
பி. வி. சுப்ப ராவ்,
கௌரவ மானேஜிங் டைரெக்டர்,
இந்தியன் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் கம்பெனி லிமிடெட்,
பெங்களூர் ஸிடி.



## ஸ்ரீராமகிருஷ்ணவிஜயம்.

சனாதன தர்மப் பிரசாரம் செய்யும் சிறந்த தமிழ் மாதப் பத்திரிகை.

வருஷ சந்தா:— உள்நாடு ரூ. 3
வெளிநாடு ரூ. 4

விலாசம்:

மானேஜர், ஸ்ரீராம கிருஷ்ண விஜயம், ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாபூர், சென்னை.

---

## "தமிழ் நேசன்."

பத்திராதிபர் கெ. நரசிம்மய்யங்கார்.

இப்பெயருள்ள தமிழ் வாரப் பத்திரிகை கோலாலம்பூரினின்றும் பிரதி புதன்கிழமை தோறும் வெளிவருவதாகும். மலேயா நாட்டிலுள்ள தொழிலாளர்களின் முன்னேற்றங் ...ருதி முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக் ...ம் பரஸ்பரம் அபிமானத்தையும் ஒற்றுமை ...யும் விருத்தி செய்யக்கூடிய வழியில் நடை...பறும். இப்பத்திரிகை தமிழரால் ஆதரிக்கக் ...டியதாகும். வருஷ சந்தா இந்தியா, பர்மா, ...லங்கை முதலிய நாடுகளுக்கு ரூ. 7—0—0. ...வண்டுவோர், மானேஜர், 'தமிழ்நேசன்,' 212, ...த்துரோட், கோலாலம்பூர் (F. M. S.) என்று ...முதவும்.

### சிறந்த தமிழ் புத்தகங்கள்:

வால்மீகி இராமாயண வசனம்:—பண்டித நடேச சாஸ்திரியாரால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. உயர்ந்த பதிப்பு. நல்ல கனமான காகிதத்தில் அச்சிட்டு சேர்த்தியான காலிகோவில் அழகாய் பயிண்டு செய்திருக்கிறது.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| 6 காண்டங்கள் ... | 15 | 0 | 0 |
| சுந்தரகாண்டம் தனியே ... | 2 | 4 | 0 |
| திருமூலர் திருமந்திரம் ... | 2 | 4 | 0 |
| பாண்டவ சரித்திரம் அல்லது தருமமே ஜயம் ... | 2 | 4 | 0 |
| தனபாக்கியம் அல்லது ஓர் அதிருஷ்டவதியின் சரித்திரம் ... | 2 | 0 | 0 |
| ஷண்முக சுந்திரம் அல்லது காதல் திறம் ... | 2 | 0 | 0 |
| மோகனாங்கி அல்லது காணாமற் போன பெண்மணி ... | 1 | 4 | 0 |
| நால்வர் சரித்திரம் ... | 0 | 12 | 0 |
| பஞ்சாத்தினம் ... | 0 | 12 | 0 |

கே. மஹாதேவன்,
1, ராமசாமி பிள்ளைத் தெருவு,
வேப்பேரி. சென்னை.

---

# SIDDHA KALPA MAKARADHWAJA

(REGISTERED)

...E WONDERFUL DISCOVERY IN THE MEDICAL WORLD

FOR ALL "ACUTE" & "CHRONIC" DISEASES

ONE PHIAL OF 60 PILLS (for a Complete Cure).

Price Rs. 10. (Rs. TEN). V. P. Extra.

...E MADRAS AYURVEDIC PHARMACY,

44, Govindappa Naick St., G T., Madras.

# தமிழ் பிரசுரங்கள்.

1. நந்தன் சரித்திரம்.—ஆசிரியர் T. G. ஆராவமுத அய்யங்கார் அவர்கள், M.A. விலை அணா 10.

   **Approved as a Library Book.**

2. போஜ சரித்திரம்.—ஆசிரியர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரி அவர்கள், B.A., B.L., ஸப்ஜட்ஜ், நாகபட்டணம். விலை அணா 10.

   **Approved as a Text-book suitable for School use,** vide *Fort St. George Gazette*, **Part I-B, dated 19-5-1925.**

3. ராஜ ராஜ சோழன் I.—ஆசிரியர் P. V. ஜகதீச ஐயர் அவர்கள். R சங்காசாரியாரவர்களுடைய முன்னுரையுடன் கூடியது. விலை அணா 8.

   **Approved as a Text-Book suitable for School use.**

4. இட்டார்க்கு இட்ட பலன்.—ஆசிரியர் மிஸ் J. பொன்னுசாமி ராவ். விலை அணா 1).

   **Approved as a suitable Text-Book,** vide *Fort St. George Gazette*, **dated 24-7-23.**

5. திலகவதி.—சகோதரி V. பாலம்மாள் (சிந்தாமணி பத்திராதிபர்) எழுதியது. ராவ் ஸாஹெப் S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் எழுதிய முன்னுரையுடன் கூடியது. விலை ரூ. 1—4—0.

   **Approved as a Library Book.**

6. தமிழ் வசன லக்ஷணம்—G. தாமோதர முதலியார், B.A. எழுதியது. வி[illegible] அணா 12.

   **Approved as a Text-Book for Schools and Colleges,** vide *Fort St. George Gazet* **21st October 1913.**

7. இரகுவம்சம் முதல் பாகம்.—(1—6 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியவர்கள் எழுதியது. விலை அணா 12.

8. இரகுவம்சம் இரண்டாம் பாகம்.—(7—12 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்[illegible]யாரவர்கள் எழுதியது. விலை அணா 12.

   **Parts I and II are approved as suitable class-books,** vide *Fort St. George Gazette*, **Part page 478, dated 3-6-24.**

9. சுகாதாரபோதினி.—(மூன்றாவது பாரத்திற்கு) K. வரதராஜ ராவ் இயற்றியது. விலை அணா 8.

   **Approved as a Text-book suitable for School use,** vide *Fort St. George Gazette*, P **dated 19-5-1925.**

VASA VARADACHARI & CO., TRIPLICANE AND MOUNT ROAD, MAD'